திருமறையும் திருமணமும்



எம்.எஸ்.வசந்தகுமார்

பதிப்புரிமை: ஆசிரியருக்கே
Copyright : (C) With the Author

வெளியீட்டு இல. 12
Pub. No. 12

தலைப்பு: திருமறையும் திருமணமும்
Title : Marriage and the Bible

விடயம்: திருமணம், விவாகரத்து, மறுவிவாகம் பற்றிய வேதாகமக் கண்ணோட்டம்
Subject: Biblical View of Marriage Divorce and Remarriage

எழுதியவர் : எம். எஸ். வசந்தகுமார்
Written by : M. S. Vasanthakumar

முதற்பதிப்பு : ஜுலை 1994, 3000 பிரதிகள்
First Edition: July 1994, 3000 Copies

அச்சுப்பதிப்பு : மில்டன் என்டர்பிரைஸ், கொழும்பு-13
Printed by : Milton Enterprise, Colombo-13

வெளியீடு: சத்திய வசனம்,
த. பெ. 1012,
கொழும்பு,
இலங்கை

Published by: Back to the Bible
P. O. Box 1012,
Colombo,
Sri Lanka

பொருளடக்கம்

ஆசிரியர் உரை — பக்கம் 5

பகுதி ஒன்று

மானிட திருமணமும்
தேவனின் திட்டமும் — பக்கம் 7

பகுதி இரண்டு

மானிட விவாகரத்தும்
தேவனின் விளக்கமும் — பக்கம் 43

பகுதி மூன்று

மானிட மறுவிவாகமும்
தேவனின் மறுமொழியும் — பக்கம் 65

ஆசிரியரின் பிற நூல்கள்

1. இன்பத்தின் இரகசியங்கள்
2. இயேசுகிறிஸ்து யார்?
3. வேதாகமம் தேவனுடைய வார்த்தையா?
4. இது ஒரு கிறிஸ்தவ குடும்பம்
5. மரணம் என்றால் என்ன?
6. இயேசுகிறிஸ்து இறைவனா?
7. கிறிஸ்தவ வாழ்வில் தேவசித்தம்
8. இயேசுகிறிஸ்து ஒரு சரித்திர நபரா?
9. ஒரு விதவையின் விவாகம்
10. ஒரு விலைமகள் விசுவாசியாகின்றாள்
11. மகளையே பலியிட்ட மனிதன்

கவனிக்கவும்

தற்சமயம் 7-ம், 9-ம், 11-ம் புத்தகங்கள் மட்டுமே விற்பனைக்குள்ளன. புத்தகங்களை சத்தியவசன நிலையத்தில், 120 A, தர்மபால மாவத்தை, தபால் பெட்டி இல. 1012, கொழும்பு 7, இலங்கை எனும் முகவரியிலும், ஆசிரியரிடம், இலங்கை வேதாகமக் கல்லூரி, தபால் பெட்டி இல. 2, பேராதனை, இலங்கை எனும் முகவரியிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியர் உரை

இலங்கையின் பல்வேறு பாகங்களிலுமுள்ள கிறிஸ்தவர்களினால் கேட்கப்பட்ட பலதரப்பட்ட கேள்விகளுக்கும் பதிலாகவே இந்நூல் எழுதப்பட்டுள்ளது. திருமணம், விவாகரத்து, மறுவிவாகம் பற்றிய வேதாகமப் போதனை பற்றி ஒரு புத்தகம் எழுதவேண்டும் எனும் எண்ணம் நீண்டகாலமாகவே என்னுள்ளத்தில் இருந்த போதிலும், அதற்கான வாய்ப்புகள் ஆரம்பத்தில் கிடைக்கவில்லை. பின்னர், ''சத்தியவசன'' தமிழ்ப் பகுதிக்குப் பொறுப்பாக இருக்கும் சகோதரி மேரி சூசைப்பிள்ளையும், அங்கு பணி புரியும் சகோதரன் யோகநாதனும் தமக்கு இவ்விடயங்கள் பற்றி பலர் கடிதமெழுதுவதாகவும், அவர்களுக்குப் பதிலளிக்கக் கூடிய விதமாகவும் ஒரு புத்தகம் எழுதினால் அதிக பிரயோசனமாக இருக்கும் என கூறியமையினால் இதை எழுதத் தொடங்கினேன். அதே சமயம், முதலில் எழுதப்பட்ட மூலப்பிரதியை வாசித்து, மேலதிகமாக சேர்க்கப்படவேண்டிய விடயங்கள் பற்றி இவர்கள் கொடுத்த ஆலோசனைகள் காரணமாக, ஆரம்பத்தில் சிறியதாக எழுதப்பட்டிருந்த இந்நூல், இப்போது 82 பக்கங்கள் கொண்ட புத்தகமாகியுள்ளது. மேலும் இதை எழுதும் காலத்தில் இலங்கை வேதாகமக் கல்லூரியைச் சேர்ந்த விரிவுரையாளர் கிறிஸ்டி பாலேந்திரனும் மூலப் பிரதியை வாசித்து சில ஆலோசனைகளைக் கொடுத்தார். இவர்கள் யாவருக்கும் முதலில் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்புத்தக விடயங்கள் இன்று கிறிஸ்தவ உலகில் பெரும் சர்ச்சைக்குரியனவாக இருப்பதனால், இதில் சொல்லப்பட்டுள்ள சில விடயங்களை நீங்கள் ஏற்றுக் கொள்ளத் தயங்கலாம், அல்லது மறுக்கலாம். எனினும், இதில் உள்ள ஒரு விடயத்தை உங்களால் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தால், அதற்காக புத்தகத்தை மூடிவைத்து விடாதீர்கள். முதலில் முழுப்புத்தகத்தையும் வாசித்து முடியுங்கள். அப்

பொழுது இப்புத்தகத்தில் உள்ள விடயங்கள் வேதாகம ஆதாரத்துடன் எழுதப்பட்டுள்ளதை அறிந்து கொள்வீர்கள். இப்புத்தகத்தை வாசிக்கும்போது இதில் சொல்லப்பட்டுள்ள விடயங்கள் பற்றி உங்களுக்கு ஏதாவது கேள்விகள், சந்தேகங்கள் ஏற்பட்டால் அவை பற்றி எனக்கு எழுதுங்கள். உங்கள் கேள்விகளுக்கு தனிப்பட்ட ரீதியான பதில்களையும், ஆலோசனைகளையும் எழுத ஆயத்தமாயுள்ளேன்.

இப்புத்தகத்தை அழகிய முறையில் அச்சிட்டுத்தந்த சகோதரன் மில்டனுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். புத்தகத்தை அச்சுக்கு கொடுத்த பின்னரும் சில மாற்றங்கள் செய்யவேண்டியேற்பட்டது. சில புதிய விடயங்களை இடையில் சேர்த்துக் கொள்ள வேண்டியதாயிருந்தது. அப்படியிருந்தும் சிரமத்தைப்பாராது எல்லாவற்றையும் சேர்த்து அழகிய புத்தகமாக அச்சிட்டுள்ளார். அதே போல இப்புத்தகத்தை சத்தியவசன வெளியீடாக வெளியிட முன்வந்த சத்திய வசன நிலையத்தினருக்கும், விசேஷமாக இப்புத்தகத்தை எழுத என்னை ஊக்குவித்த சத்தியவசன தமிழ்ப்பகுதியின் பொறுப்பதிகாரி சகோதரி மேரி சூசைப்பிள்ளைக்கும், சகோதரன் யோகநாதனுக்கும் மறுபடியுமாக எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கடைசியாக, அதிக சர்ச்சைக்குரிய விடயங்களைக் கொண்டுள்ள இப்புத்தகத்தை வாசிக்கப்போகும் உங்களுக்கும், எனது புத்தகங்களுக்கு ஆதரவளித்து வரும் தமிழ்க் கிறிஸ்தவ சபைகளுக்கும் எனது நன்றிகளில் பங்குண்டு என்பதை மறந்துவிடாதீர்கள். தேவன் தாமே இந்நூலினூடாக திருமணம், விவாகரத்து, மறுவிவாகம் பற்றிய வேதாகமப் போதனையை உங்களுக்குத் தெளிவு படுத்துவாராக.

அன்புடன்

எம். எஸ். வசந்தகுமார்

பகுதி ஒன்று

மானிட திருமணமும் தேவனின் திட்டமும்

1. அது இருவருக்குமேல் இருக்க முடியாத ஓர் உறவு
2. அது நெருங்கிய உறவினர் இருக்கத்தகாத ஓர் உறவு
3. அது அவிசுவாசியுடன் இருக்கக்கூடாத ஓர் உறவு

மானிடவாழ்வுக்குத் தேவன் வைத்துள்ள திட்டங்களில் ஒன்று அவனுடைய திருமணமாகும். ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாக இணைந்து வாழும் திருமணவாழ்வு மனிதனுடைய கண்டுபிடிப்பல்ல. ஆரம்பகாலத்தில் மிருகங்களைப்போல வாழ்ந்தவன் நாகரீகத்தில் வளர்ச்சியுற்றபோது, அவன் தனக்கென வகுத்துக்கொண்ட வாழ்க்கை முறையே திருமணம் எனும் கருத்து உண்மையானதொன்றல்ல. ஏனென்றால், மனிதனை சிருஷ்டித்த தேவனே அவனுக்குத் திருமணவாழ்வை ஏற்படுத்திக் கொடுத்தார் என்பதே வேதாகமம் அறியத்தரும் உண்மையாகும். தேவன் மனிதனை சிருஷ்டித்தபோது ஆணை மட்டுமோ இல்லையென்றால் பெண்ணை மட்டுமோ உருவாக்காமல், ஆண்

பெண் எனும் இருபாலாரையும் படைத்துள்ளார் (ஆதி. 1: 27). ''ஆணும் பெண்ணும் திருமணத்தின் மூலம் ஒன்றாக இணைந்து வாழவேண்டும் என்பதே இதற்கான காரண மாகும்'' (01). ஆணை முதலில் சிருஷ்டித்த தேவன், அவன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று கண்டு, அவனுக்கு ஏற்ற துணை ஒன்றை உருவாக்கிக்கொடுத்து உலகின் முத லாவது திருமணத்தை நடத்திவைத்துள்ளார். (ஆதி.2:18, 21-24) எனவே, ''மானிட திருமணம் அவனை சிருஷ்டித்த தேவனிலேயே தன் ஆரம்பத்தைக் கொண்டிருக்கின்றது'' (02) என்பதை இதிலிருந்து அறியக்கூடியதாயுள்ளது. தேவனே மானிட திருமணத்தை ஏற்படுத்தியுள்ளமையி னால் அவர், அதற்கென வைத்திருக்கும் திட்டத்தினையும் வேதாகமத்தில் வெளிப்படுத்தியுள்ளார். எனவே, வேதாக மத்தின் மூலமாக, மானிட திருமணத்திற்கான தேவனு டைய திட்டம் எத்தகையது என்பதை இப்பகுதியில் பார்ப் போம்.

1. அது இருவருக்குமேல் இருக்கமுடியாத ஓர் உறவு

மானிட திருமணத்திற்கான தேவனின் திட்டத்தில் முதல் அம்சமாக இருப்பது, அது, இருவருக்குமேல் இருக்க முடியாத ஓர் உறவு என்பதேயாகும். அதாவது, ஒரு திரு மண உறவில் இரு நபர்களுக்குமேல் இருக்க முடியாது என் பதே தெய்வீகத் திட்டமாகும். ஒருவனுக்கு ஒருத்தி என் பதே திருமணத்துக்குத் தேவன் வகுத்துள்ள நியதியாகும். பலதாரமணம் தேவனுடைய சித்தத்திற்கு முரணான ஒரு பழக்கமாகும். ஒரு ஆண் ஒரு பெண்ணுடனேயே இல்லற வாழ்வில் ஈடுபட வேண்டும் என்பதைத் தேவன், தன் சிருஷ் டிப்புச் செயலினூடாக வெளிப்படுத்தியுள்ளார். தேவன் மனிதனை சிருஷ்டித்தபோது, திருமணத்திற்கான தனது திட்டத்தின்படி, முதல் மனிதனாகிய ஆதாமுக்கு ஒரே ஒரு பெண்ணை மட்டுமே மனைவியாகக் கொடுத்தார் (ஆதி.2: 21-22). ''ஒருவன் ஒன்றுக்கும் மேற்பட்ட பெண்களைத் திரு மணமுடிக்கலாம் என்பது தேவனுடைய திட்டமாய் இருந் திருந்தால், அவர் ஆதாமுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட மனை விகளைக் கொடுத்திருப்பார்'' (03). ஆனால், தேவன் அவ்

வாறு செய்யவில்லை. தேவன் முதல் மனிதனுக்கு ஒரு மனைவியைக் கொடுத்ததன் மூலம், திருமண உறவில் இரு வருக்குமேல் இருக்க முடியாது என்ற உண்மையையும், ஒருவனுக்கு ஒருத்தி என்பதே தன்னுடைய திட்டம் என்பதனையும் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். இன்றைக்குச் சிலர், ஒருவனுக்கு ஒருத்தி எனும் தெய்வீகத் திட்டம் வேதாகமத்தில் நேரடியாக சொல்லப்படவில்லை என்றும், பழைய ஏற்பாட்டில் பலர் ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவியரை வைத்திருந்தமையினால், தேவன் பலதாரமணத்தை அனுமதிப்பவர் என்றும் கூறுகின்றனர். எனவே, இது பற்றி சற்று விளக்கமாக ஆராய்வோம்.

(அ) **பலதாரமணம் தடைசெய்யப்பட்டுள்ளது:** வேதாகமத்தில், *(பழைய ஏற்பாட்டிலும்)* பலதாரமணம் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒருவன் ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவிகளை வைத்திருக்கக்கூடாது என தேவன் நேரடியாக கட்டளையிட்டுள்ளார். லேவியராகமம் *18:18* இல், ''உன் மனைவி உயிரோடிருக்கையில் அவளுக்கு உபத்திரவமாக அவள் சகோதரியையும் நிர்வாணமாக்கும் பொருட்டு அவளை விவாகம் பண்ணலாகாது'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ''இது பலதாரமணத்தை தடைசெய்யும் தேவனுடைய கட்டளையாகும்.'' *(04)* மனைவி உயிரோடிருக்கும் போது இன்னுமொரு பெண்ணை மணமுடிக்கக்கூடாது என கூறும் வேதாகமம், *(லேவி. 18:18)*, ஒருவன் தன் மனைவியைத் தள்ளி விட்டு இன்னுமொருத்தியை மனைவியாக்கிக் கொள்வதையும், மனைவி தன் கணவனைவிட்டு வேறொருவனுடன் செல்வதையும் விபசாரம் என்றே கூறுகின்றது. *(மாற். 10:11-12, லூக். 16:18, ரோ. 7:3)* எனவே, விபசாரம் செய்யாதிருப்பாயாக என கட்டளையிட்ட தேவன், *(யாத். 20:14)* ஒருவன் தன் மனைவியைத் தள்ளிவிட்டு இன்னுமொரு பெண்ணுடன் வாழும் விபசார வாழ்வையும் தடை செய்துள்ளார் என்பதை மறுப்பதற்கில்லை.

இன்றைக்குச் சிலர், உபாகமம் *21:15-17* இல் ஒருவன் இரண்டு மனைவிகள் வைத்திருக்க அனுமதி கொடுக்கப்பட்

டுள்ளதாக கருதுகின்றனர். ஆனால் இவ்வசனங்கள், ஒருவன் தன் பிள்ளைகளுக்கு சொத்துக்களைப் பிரித்துக் கொடுக்கும் முறைபற்றிய கட்டளை என்பதை நாம் மறக்கலாகாது. ''இரண்டு மனைவிகளையுடைய ஒருவன், ஒருத்தியின்மேல் விருப்பாயும் மற்றவள் மேல் வெறுப்பாயும் இருக்க, இருவரும் அவனுக்குப் பிள்ளைகளைப் பெற்றார்களேயாகில்'' என ஆரம்பமாகும் இக்கட்டளை, சமுதாயத்தில் இருக்கும் நிலைமையை, அதாவது, ஒருவன் தேவ கட்டளையை மீறி இருமனைவிகளை வைத்திருந்து இருவரும் அவனுக்குப் பிள்ளைகளைப் பெற்றால், அவன் யாருக்குத் தனது சேஷ்ட புத்திர பாகத்தைக்கொடுக்க வேண்டும் என்பதை அறிவிப்பதற்காகவே கொடுக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், ''முதற்பிறந்தவன் வெறுக்கப்பட்டவளின் புத்திரனானாலும், தகப்பன் தனக்கு உண்டான ஆஸ்தியைத் தன் பிள்ளைகளுக்குப் பங்கிடும் நாளில், வெறுக்கப்பட்டவளிடத்தில் பிறந்த முதற்பேறானவனுக்கு சேஷ்ட புத்திர சுதந்திரத்தைக் கொடுக்க வேண்டுமேயல்லாமல், விரும்பப்பட்டவளிடத்தில் பிறந்தவனுக்கு கொடுக்கலாகாது'' என கட்டளையிடப்பட்டுள்ளது. ''இரு மனைவிகளை வைத்திருப்பவன், தன் மனவிருப்புகளின்படி செயல்படாமல், தன் மூத்த மகனுக்கே சேஷ்டபுத்திர சுதந்திரத்தைக் கொடுக்க வேண்டும் என்பதே இக்கட்டளையின் தாற்பரியமாகும்'' *(05)*. ''ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவிகளை உடையவன் பிள்ளைகள் விடயத்தில் பட்சபாதமாய் நடப்பதைத் தடுப்பதே இக் கட்டளையின் நோக்கமாகும்'' *(06)*. ''இக்கட்டளையானது ஒருவன் இரண்டு மனைவிகளை வைத்திருக்கலாம் என்று எவ்விதத்திலும் கூறவில்லை'' *(07)*. ஏனென்றால், அது தேவனால் தடை செய்யப்பட்டிருந்தது *(லேவி. 18:18)*.

கணவன் மனைவி உறவு பற்றி வேதாகமம் சொல்லும் போது, எப்போதும் ஒருமையில் அதாவது, ஒரு கணவனுக்கு ஒரு மனைவி எனும் அர்த்தத்திலேயே கட்டளைகள் கொடுத்துள்ளது. உதாரணமாக 1 கொரிந்தியர் 7:3 இல் ''புருஷன் தன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமைகளைச்

செய்யக்கடவன். அப்படியே மனைவியும் புருஷனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் ,செய்யக்கடவன்'' எனும் கட்டளையில், புருஷன் மனைவி எனும் பதங்கள் ஒருமை யிலேயே உள்ளன. அதாவது, புருஷன் தன் மனைவிகளுக்கு அல்ல மனைவிக்கு; அதேபோல மனைவி தன் புருஷர்க ளுக்கு அல்ல புருஷனுக்கு என்றே கட்டளைகள் கொடுக் கப்பட்டுள்ளன. ''அவனவன் தன் சொந்த மனைவியையும் (மனைவிகள் அல்ல) அவளவள் தன் சொந்த புருஷனை யும் (புருஷர்கள் அல்ல) உடையவர்களாயிருக்க வேண்டும் என்பதே திருமணவாழ்வுக்கான தேவனுடைய திட்டமா யிருக்கின்றது (1 கொரி 7:2). சங்கீதம் 128:3 இல், ''உன் மனைவி வீட்டோரங்களில் கனிதரும் திராட்சைக்கொடி யைப் போலிருப்பாள்'' என்று சொல்லப்பட்டுள்ளதே தவிர, மனைவிகள் என பன்மையில் குறிப்பிடப்படவில்லை. மேலும், நீதிமொழிகள் 5:18, ''உன் இளவயதின் மனைவி யோடே மகிழ்ந்திரு'' என்று கூறுகிறதே தவிர, மனைவி களோடே என்று கூறவில்லை. அதற்கு அடுத்த வசனம், ''அவளே நேசிக்கப்படத்தக்க பெண்மானும், அழகான வரை யாடும் போலிருப்பாளாக. அவளுடைய ஸ்தனங்களே எப் பொழுதும் உன்னைத்திருப்தி செய்வதாக; அவளுடைய நேசத்தால் நீ எப்பொழுதும் மயங்கியிருப்பாயாக'' என்று கூறுகிறது. இவ்வசனம், ஒருவன் எப்போதும் தன் இளவய தின் மனைவியோடேயே, (அதாவது இளவயதில் திருமண முடித்த மனைவியோடேயே) இருக்க வேண்டும் என்ப தையே அறியத்தருகின்றது. ''ஒருவனுக்கு ஒன்றுக்கும் மேற் பட்ட மனைவிகள் இருக்கும்போது அவனால், நீதிமொழி கள் 5:18-19 இல் சொல்லப்பட்டுள்ளவிதமாக இருக்க முடி யாது'' (07). எனவே, ஒருவனுக்கு ஒருத்தி என்பதே திரு மண வாழ்வுக்கான தேவ சித்தம் என்பதை மறுப்பதற் கில்லை.

(ஆ) பலதாரமணம் தண்டிக்கப்பட்டுள்ளது: பலதாரம ணம் தேவனால் தடைசெய்யப்பட்டிருந்தபோதிலும், பலர் அத்தடையையும் மீறி, பல மனைவிகளை வைத்திருந்தனர். எனினும், தேவன் இதை அங்கீகரித்தார் என கூறுவதற் கில்லை. மனிதன் தன் பாலியல் இச்சை காரணமாகவே பல

மனைவிகளை வைத்திருந்தானே தவிர, அது, திருமணத்திற்கான தேவனுடைய திட்டமாயிருக்கவில்லை. இதனால் ''பலதாரமணம் காரணமாக தேவன் நோவாவின் காலத்தில் ஜலப்பிரளயத்தினால் உலகத்தையே அழித்துள்ளார்'' *(04)*. இதிலிருந்து பலதாரமணம் தேவனால் அனுமதிக்கப்பட்டதாக அல்ல, தண்டிக்கப்பட்டதாகவே அறிகின்றோம். ஆதாமின் காலம் முதல் நோவாவின் காலம் வரை, ஆதாமின் ஒரு மகனான சேத்தினுடைய வம்சத்தில் எவரும் ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவிகளை வைத்திருக்கவில்லை. ஆனால் ஆதாமின் மூத்தமகனான காயீனின் வம்சத்தில் வந்த லாமேக்கு முதற்தடவையாக திருமணத்திற்கான தேவ திட்டத்தை மீறி இருமனைவிகளை வைத்திருந்தான் *(ஆதி. 4:19)*. இதன் பின்னர் ''ஆதியாகமம் *6:1-7* இல் ஜலப்பிரளயத்திற்கு முன்னர் மக்கள் பல மனைவிகளை வைத்திருந்தனர்'' *(04)*. ஜலப்பிரளயத்துக்கு முன்பான காலத்தைப் பற்றி இயேசுகிறிஸ்து குறிப்பிடும்போது, ''ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரைக்கும் ஜனங்கள் புசித்தும், குடித்தும், பெண்கொண்டும், பெண் கொடுத்தும் ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள்'' என்றார் *(மத். 24: 37-39)*

புசிப்பது, குடிப்பது, பெண்கொள்வது, பெண்கொடுப்பது என்பன மானிடவாழ்வின் சாதாரண அம்சங்களாயினும், நோவாவின் காலத்து மக்களது வாழ்வில் இவற்றைத் தவிர வேறெதுவும் இருக்கவில்லை என்பதையே இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் அறியத்தருகின்றன. ''ஆதியாகமம் *6:1-4* ஜலப்பிரளயத்துக்கு முன்பான மானிட நிலைமை பற்றிய விவரணமாகும்'' *(08)*. ''மனுஷர் பூமியின்மேல் பெருகத்துவங்கி அவர்களுக்கு குமாரத்திகள் பிறந்தபோது, தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு அவர்களுக்குள்ளே பெண்களைத் தெரிந்துகொண்டார்கள்'' என இப்பகுதி ஆரம்பமாகின்றது *(ஆதி. 6:1-2)*. ''வேதவியாக்கியானிகள் அதிக சர்ச்சைக்குரிய பகுதியாக கருதும் இவ்வசனங்கள் மனிதனு

டைய பலதாரமணத்தைப் பற்றியே கூறுகின்றன'' (04). இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவகுமாரர், மனுஷ குமாரத்திகள் யார் என்பது பற்றி வேதவியாக்கியானிகள் மத்தியில் பலவிதமான கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன. சிலர், தேவகுமாரர்கள் தேவதூதர்கள் எனும் கருத்துடையவர்களாக இருக்கின்றனர். ''வேதாகமத்தின் சில வசனங்களில் தேவதூதர்கள் தேவகுமாரர் என அழைக்கப்பட்டிருப்பதனால் (யோபு. 1;6, சங். 29:1) தேவதூதர்கள் மானிட பெண்களைத் திருமணமுடித்ததைப் பற்றியே இப்பகுதி கூறுகின்றது'' (09) என்பதே இவர்களது கருத்தாகும். ஆனால் இவ்விளக்கம், மத். 22:30 ஐ முரண்படுத்துகின்றது. தேவதூதர்கள் திருமணமுடிப்பதில்லை என இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார். ''தேவதூதர்களில் ஆண் பெண் வேறுபாடோ, பாலியல் செயல்பாடுகளோ இல்லாததமையினால், தேவதூதர்கள் மானிட பெண்கள் மீது ஆசைப்பட்டு அவர்களைத் திருமணமுடித்தார்கள் என சொல்ல முடியாது'' (10). இதனால் சிலர், ''விழுந்துபோன தேவதூதர்கள் மனிதர்களுக்குள் புகுந்து பெண்களைத் திருமண முடித்தனர் என கருதுகின்றனர்'' (11). எனினும் ஆண் பெண் வேறுபாடு இல்லாத தேவதூதர்களில் பாலியல் ஆசைகள் இராதமையினால் இக்கருத்தையும் நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

பெரும்பாலான வேதவியாக்கியானிகள், தேவபக்தியுள்ள சேத்தின் வம்சத்தினரும் தேவபக்தியற்ற காயீனின் வம்சத்தினரும் திருமணத்தில் இணைந்ததையே இப்பகுதி குறிப்பிடுவதாக கூறுகின்றனர். யாத். 4:22, உபா. 14:1, சங். 73:15, 82:6 போன்ற வசனங்களில் மனிதர்களைக் குறிக்க தேவகுமாரர் எனும் பதம் உபயோகிக்கப்பட்டிருப்பதினால், ''ஆதி. 6:1 இலுள்ள தேவகுமாரர் தேவபக்தியுள்ள சேத்தின் வம்சம் என்றும், மனுஷகுமாரத்திகள் தேவபக்தியற்ற காயீனின் வம்சம் என்றும்'' (12) கருதப்படுகின்றது. மேலும், ''இப்பகுதி தேவன் மனிதனுடைய பாவச் செயலுக்காக மனிதனைத் தண்டிக்கப்போவதைப் பற்றி அறியத்தருவதனால் தேவகுமாரர் மனிதர்களாகவே இருக்க வேண்டும்'' (10) தேவதூதர்களுடைய பாவத்துக்கு தேவன்

மனிதர்களைத் தண்டிப்பது அர்த்தமற்றதாகவே இருக்கும். இப்பகுதியில், மனிதர்களுடைய பாவம் தேவபக்தியுள்ளவர்கள் தேவபக்தியற்ற பெண்களை மணமுடித்தது மட்டுமல்ல, ''மனிதர்கள் பல மனைவிகளை எடுத்துக்கொண்டதுமாகும்.'' *(04)* அப்படியானால், மனிதர்கள் ஏன் தேவகுமாரர் என குறிப்பிடப்பட்டுள்ளனர் என நாம் கேட்கலாம். ''இப்பகுதி, முதல் தம்பதியரான ஆதாம் ஏவாளின் வம்சத்தினரது அழிவுக்கு முன்பான அவர்களுடைய நடத்தை பற்றிய விவரணமாக இருப்பதனால், முதல் மனிதனான ஆதாம் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவன் என்பதனால் ஆண்கள், தேவகுமாரர் என்றும், முதல் பெண்ணான ஏவாள் மனிதனிலிருந்து எடுக்கப்பட்டமையினால் பெண்கள், மனுஷகுமாரத்திகள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.'' *(08)* எது எவ்வாறு இருப்பினும் ''இப்பகுதி மனிதர்களது பலதாரமணத்தைப் பற்றிய விவரணம் என்பதை மறுப்பதற்கில்லை.'' *(04)*

ஜலப்பிரளயத்துக்கு முன்பு மனிதர் புசித்தும், குடித்தும் பெண்கொண்டும் பெண்கொடுத்தும் திருமணத்துக்கான தேவதிட்டத்தை மீறி, ஒருவன் பல மனைவிகளை வைத்திருந்தமை தேவனுடைய பார்வையில் கடுமையான பாவமாயிருந்தமையினால், அவர் ஜலப்பிரளயத்தினால் அவர்களை அழித்தார். இதிலிருந்து பலதாரமணம் தேவனுடைய சித்தமல்ல, அது, தேவனால் அங்கீகரிக்கப்பட்டதொன்றாக அல்ல, தண்டிக்கப்பட்டதொன்றாகவே உள்ளது என்பது தெளிவாகின்றது. அப்படியிருந்தும் ஜலப்பிரளயத்துக்குப் பின்பும் சிலர் ஒன்றுக்கும்மேற்பட்ட மனைவியரை வைத்திருந்தனர். ஆபிரகாமின் சகோதரனுக்கு ஒரு மறுமனையாட்டி இருந்தாள். ஆபிரகாமுக்கு ஒன்றுக்கும்மேற்பட்ட மனைவியர் இருந்தனர். ஆபிரகாமின் மகனான ஈசாக்கின் பிள்ளைகளுள் ஏசா மூன்று மனைவிகளையும், யாக்கோபு இரண்டு மனைவிகளையும் வைத்திருந்தனர். அதேபோல, நியாயாதிபதிகளில் சிலரும், அரசர்களும் பல மனைவிகளுடையவர்களாய் இருந்தனர். நோவாவின் காலத்தில் பலதாரமணத்தைத் தண்டித்த தேவன், இவர்களைத்தண்டிக்கவில்லையே என நாம் கேட்கலாம். எனினும் இவர்களுடைய

வாழ்க்கையைப் பார்க்கும்போது, இவர்கள் தம் மனைவியர் மூலம் பட்டபாடுகளை அறிந்திடலாம். பலதாரமணம் இவர்களுடைய வாழ்வில் பல குழப்பங்களைக் கொண்டு வந்திருந்தது. இவை அவர்களது பாவத்துக்கான தேவதண்டனையாகவே இருக்கின்றன. எது எப்படியிருப்பினும், பலதாரமணம் தேவனால் தண்டிக்கப்பட்டுள்ளது என்பதை மட்டும் மறுக்கமுடியாது. ''ஜலப்பிரளயத்தில் பலதாரமணத்தைத் தண்டித்த தேவன், மோசேயின் நியாயப்பிரமாணத்தில் அதைத் தடைசெய்துள்ளார்'' *(04)*. இதற்குக் காரணம், தேவனுடைய திருமணத்திட்டத்தில் பலதார மணத்திற்கு இடமில்லாதிருப்பதேயாகும்.

(இ) பலதாரமணம் தர்க்கிக்கப்படுகின்றது: பலதாரமணம் தேவனால் தடை செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளபோதிலும், இன்றைய கிறிஸ்தவ உலகில், பலதாரமணம் தேவனால் அனுமதிக்கப்பட்டதொன்று என்று தர்க்கிக்கப்படுகின்றது. இதற்கு ஆதாரமாக 2 சாமுவேல் *12:7-8* சுட்டிக்காட்டப்படுகின்றது. இவ்விடத்தில், தீர்க்கதரிசியாகிய நாத்தான் தாவீதுக்குத் தேவனுடைய வார்த்தைகளை அறிவிக்கின்றான். ''இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான் உன்னை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணி, உன்னைச் சவுலின் கைக்குத்தப்புவித்து, உன் ஆண்டவனுடைய வீட்டை உனக்குக் கொடுத்து, உன் ஆண்டவனுடைய ஸ்திரீகளையும் உன்மடியிலே தந்து, இஸ்ரவேல் வம்சத்தையும் யூதா வம்சத்தையும் உனக்கு கையளித்தேன்'' என்று சொன்னான். இதில், ''உன் ஆண்டவனுடைய ஸ்திரீகளை உன்மடியில் தந்து'' எனும் வாக்கியத்தைக் காண்பித்து, தேவன் தாவீதுக்குப் பல பெண்களைக் கொடுத்து பலதாரமணத்தை அங்கீகரித்துள்ளார் என சிலர் தர்க்கிக்கின்றனர். எனினும், இது, இவ்வசனங்களை சரியாக விளங்கிக்கொள்ளாததினால் ஏற்பட்டுள்ள ஒரு தவறான தர்க்கமாகும். ''அக்காலத்தில் ஒரு அரசனுடைய மரணத்தின் பின், அவனுடைய வீடும் அங்குள்ளவர்களும், அவனுக்குப் பின் அரசனாகுபவனுக்குக் கொடுக்கப்படுவது வழமை'' *(13)*. இதன்படி, சவுலின்

மரணத்தின் பின், அவனுடைய வீடும் அங்கிருந்தவர்களும் தாவீதுக்குக் கொடுக்கப்பட்டுள்ளனர் என்பதே இவர்களது தர்க்கமாகும்!

''இவ்வசனத்திலுள்ள ''உன்மடியில்'' எனும் பதம், மூலமொழியின்படி NIV ஆங்கில மொழிபெயர்ப்பில், ''உன் கரத்தில்'' என்றே உள்ளது. [1]இது NASB ஆங்கில மொழி பெயர்ப்பில் உள்ளதுபோல, ''உன் பொறுப்பில் என அர்த் தந்தரும் வண்ணம் மொழிபெயர்க்கப்படவேண்டிய பதமாகும்'' *(04)*. எனவே, தேவன் சவுலின் வீட்டையும் அங்குள்ளவர்களையும் தாவீதின் கரத்தில், அதாவது, அவனுடைய பொறுப்பில் விட்டுள்ளார் என்று நாத்தான் தாவீதுக்குச் சொல்கிறாரே தவிர, சிலர் தர்க்கிப்பதுபோல, சவுலின் மனைவிகளைத் தேவன் தாவீதுக்கு மனைவியாகக் கொடுத்தார் என்பது இதன் அர்த்தம் அல்ல. தாவீது உரியாவின் மனைவியாகிய பத்சேபாளை எடுத்துக்கொண்ட பாவத்தைக் கண்டிக்கவே தேவன்,நாத்தான் தீர்க்கதரிசியை அனுப்பினார். எனவே, சவுலின் மனைவிகளைத் தேவன் தாவீதுக்கு கொடுத்திருந்தால், அவன் உரியாவின் மனைவியை எடுத்துக்கொண்டதற்காக அவனைக் கண்டிப்பதும் அர்த்தமற்றதாகவே இருக்கும். மேலும், சவுலுக்கு இரண்டு மனைவிகளே இருந்தனர். இவர்களுள் ஒருத்தி தாவீதினுடைய மனைவி மீகாளின் தாயாகிய அகினோவாம் *(1சாமு. 14:50)*. இன்னுமொருத்தி, ரிஸ்பாள் என்னும் பெயருள்ள மறுமனையாட்டி *(2 சாமு. 3:7)*. எனவே, சவுலின் மனைவிகளைத் தேவன் தாவீதுக்கு கொடுத்தார் என சொன்னால், அவர் தாவீதின் மாமிகளை அவனுக்கு மனைவியாக கொடுத்தார் என்றே சொல்லவேண்டும். இது லேவியராகமம் *18:17* இல் தேவன் கொடுத்த கட்டளைக்கு எதிரான செயலாகும். எனவே இது அர்த்தமற்ற தர்க்கமாகும். ''தாவீது இள வயதுடையவனாக இருக்கையில் மீகாளை மணமுடித்தமையினால், அதன் பின்னர் அவளது தாயை அவனுக்குத் தேவன் மனைவியாகக் கொடுத்தார் என்பது அர்த்தமற்றதாகும்'' *(04)*.

2 சாமுவேல் *12:7-8* இல் தேவன் சொல்லும் விடயம் யாதெனில், அவர் சவுலின் வீட்டையும் அங்குள்ளவர்களையும், சவுலின் ராட்சியத்தையும் அதன் குடிமக்கள் அனைவ

ரையும் தாவீதின் பொறுப்பில் விட்டுள்ளார் என்பதே யாகும். அரசன் குதிரைகளையும் மனைவிகளையும் அதி கரித்துக் கொள்ளக்கூடாது என்று தேவன் கட்டளை யிட்டுள்ளமையினால், (உபா. 17:16-17) அவர் தாவீ துக்கு அதிக மனைவிகளைக் கொடுத்திருக்க மாட்டார். தாவீதுதான், தன் பாலியல் இச்சை காரணமாக பல மனை விகளை வைத்திருந்தான். தேவன் ஒருவனுக்கு பல மனை விகளைக் கொடுத்தார் என கூறும்போது, அவர், திருமணத் துக்கான தனது திட்டத்தை மீறி செயல்பட்டுள்ளார் என அவரைக் குற்றப்படுத்துபவர்களாக நாம் இருக்கின்றோம். எனவே, பலதாரமணம் தேவனால் அனுமதிக்கப்பட்டுள் ளது என தர்க்கித்து, தேவனையும் அவரது கட்டளைகளை யும் முரண்படுத்தும் பாவத்தைக் குறித்து நாம் கவனமாயி ருக்க வேண்டும். ஒருவனுக்கு ஒருத்தி என்பதே மானிட திரு மணத்திற்கான தேவ திட்டமாகும். பலதாரமணம் அவ ரால் தடை செய்யப்பட்டுள்ளதோடு அத்தகைய பாவம் அவ ரால் தண்டிக்கப்பட்டும் உள்ளது. எனவே, நமது அர்த்த மற்ற தர்க்கங்களை விட்டுவிட்டு தேவனுடைய வார்த்தை யின்படி,திருமண உறவில் இருவருக்கு மேல் இருக்கமுடியாது எனும் உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பலதாரமணம் பற்றி இன்று ஏற்பட்டிருக்கும் இன்னு மொரு வகையான தர்க்கம், ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கு முன் இரு மனைவிகளை வைத்திருந்தால், இரட்சிக்கப்பட்ட பின் அவனது திருமணவாழ்வு எத்தகையது என்பதைப் பற் றியதாகும். இலங்கை போன்ற நாடுகளில் இத்தகைய பிரச் சனைக்கு நாம் முகங்கொடுப்பது மிகவும் அரிது. எனினும் ஆபிரிக்க நாடுகளில் சுவிசேஷப்பணியாற்றிய மிஷனரிகள் இத்தகைய பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்தனர். ''ஆபி ரிக்க கலாச்சாரத்தில் பலதாரமணம் சாதாரணமான ஒரு விடயமாகும். இதனால் பல மனைவிகளை வைத்திருந்த வர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து கிறிஸ்தவர்களா கியபோது,மிஷனரிகள், அவர்களை கிறிஸ்தவ சபையில் அங் கத்தவர்களாக சேர்த்துக்கொள்ளத் தயங்கினர். எனினும், பிற்காலத்தில், அவர்கள் சபையில் அங்கத்தினர்களாவதை தடுப்பது நியாயமற்ற செயல் எனக் கருதப்பட்டு அவர்

களுக்கு சபை அங்கத்துவம் கொடுக்கப்பட்டது'' (14). பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய நிருபத்தை வாசிக்கும் போது, அக்கால சபைகளில் பல மனைவிகளையுடைய மனிதரும் இரட்சிக்கப்பட்டு சபையின் அங்கத்தினர்களாக இருந்துள்ளதை அறிந்திடலாம். இதனால்தான், சபையின் தலைமைப் பதவிகளில் இருப்பவர்கள், மற்றும் ஊழியக்காரர்கள், ஒரே மனைவியையுடைய புருஷராயிருக்க வேண்டும் என பவுல் கட்டளையிட்டுள்ளார் (1தீமோ.3:2,12). பல மனைவிகளை வைத்திருந்தவன் இரட்சிக்கப்பட்ட பின்னர் சபையில் அங்கத்தினனாகக் கூடியதாக இருந்தபோதிலும், அவனால் ஊழியப் பொறுப்புகளை ஏற்க முடியாதிருந்தமை இதிலிருந்து தெளிவாகின்றது. கிறிஸ்தவம், திருமணத்துக்கு ஒருவனுக்கு ஒருத்தி எனும் வரையறையை விதித்துள்ளமையினால், ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவிகளை வைத்திருப்பவன் கிறிஸ்தவர்களுக்கு முன்மாதிரியான ஒரு தலைவனாக இருக்க மாட்டான் என்பதனால், சபையின் ஊழியப்பொறுப்புகளில் இருப்பவர்கள் ஒரே மனைவியையுடைய புருஷராயிருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

இரட்சிக்கப்படுவதற்கு முன் ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவிகளை வைத்திருந்தவன், இரட்சிக்கப்பட்டதன் பின் சபையில் அங்கத்துவம் வகிக்கக்கூடியதாய் இருப்பினும், அவனால், அதன்பிறகு பல மனைவிகளுடன் வாழமுடியாது. ஒருவனுக்கு ஒருத்தி என்பதே கிறிஸ்தவனது திருமணவாழ்வுக்கான தெய்வீகத் திட்டமாயிருப்பதினால், தேவனுடைய பார்வையில் ஒருவனுடைய முதல் மனைவிமட்டுமே அவனுடைய உண்மையான மனைவியாய் இருக்கின்றாள். இதனால்தான், ''எவனாகிலும் தன் மனைவியைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் அவளுக்கு விரோதமாக விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான்'' (மாற். 10:11, லூக். 16:18) என இயேசுகிறிஸ்து கூறினார். எனவே, இரட்சிக்கப்பட்ட மனிதன், தன் முதல் மனைவி உயிரோடிருக்கையில் வேறு ஒரு பெண்ணுடன் வாழ்ந்தால், தேவனுடைய பார்வையில் அது விபசாரமாகவே இருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை. ஒருவன்

இரட்சிக்கப்படும்சமயம், இரண்டாவது மனைவியுடன் வாழ்ந்து கொண்டிருந்தால், அவன், அவளுடனான விபசார வாழ்க்கையைக் கைவிட்டுத், தன் முதல் மனைவியுடன் ஒப்புரவாக வேண்டும். இவ்விடயத்தில் கிறிஸ்தவசபை அம்மனிதனுக்குத் தகுந்த ஆலோசனைகளைக் கொடுப்பதோடு, அதன்படி செய்வதற்கு ஆக்கபூர்வமான உதவிகளும் அளிக்க வேண்டும். அவனுடைய இரண்டாவது மனைவி, தான் இன்னுமொரு பெண்ணுடைய கணவனுடன் விபசார உறவில் இருப்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். நம் நாட்டு சட்டமும்கூட, ஒருவன் தன் மனைவியைவிட்டு வேறு பெண்ணுடன் செல்வதைத் தவறான செயலாகவே கருதுகின்றது. தேவனுடைய சட்டத்தின்படி அது விபசாரமாக இருப்பதனால், இரட்சிக்கப்பட்டவன் தன் முதல் மனைவியுடன் மட்டுமே வாழவேண்டும்.

தமிழ் மக்கள் வாழும் சில பிரதேசங்களில், பாலியல் இன்பத்துக்காக ஒருவன் தன் மனைவியைவிட்டு வேறுபெண்களிடம் செல்வதை அங்கீகரித்து, அதை, ''சின்னவீடு வைத்திருத்தல்'' என நாகரீகமாக அழைத்தாலும் தேவன் அதை அங்கீகரிப்பவர் அல்ல. எனவே, நாம் வாழும் பிரதேசத்தின் கலாச்சாரம் அங்கீகரிப்பவற்றை நாம், தேவனுடைய அனுமதியாக கருதமுடியாது. இதற்கு ஆபிரகாம் ஆகார் என்போருடைய வாழ்வு சிறந்த உதாரணமாய் உள்ளது. ''மனைவி மலடியாயிருக்கும்போது அவள், தன் அடிமைப் பெண்ணைத் தன் கணவனுக்கு மனைவியாகக்கொடுப்பது ஆபிரகாமினுடைய கால மக்கள் மத்தியில் இருந்த ஒரு பழக்கம்'' (15). இதனால், பிள்ளையற்றிருந்த சாராள், அக்கால கலாச்சார பழக்கத்தின்படி, தன் அடிமைப் பெண்ணான ஆகாரைத் தன் கணவனாகிய ஆபிரகாமுக்கு மனைவியாகக் கொடுத்தாள் (ஆதி. 16: 1-3). எனினும், ''இது ஒருவனுக்கு ஒருத்தி எனும் தேவகட்டளையை மீறும் செயலாய் இருந்தமையினால், ஆபிரகாமினுடைய குடும்ப வாழ்வில் பல பிரச்சனைகள் ஏற்பட்டன'' (15) (ஆதி. 16:5, 21:9-11). அது மட்டுமல்ல, ஆபிரகாம் ஆகாரோடு வாழ்வதும் தேவசித்தமாய் இருக்கவில்லை. இதனால் ஆகாரையும், அவள் அவனுக்குப் பெற்ற மகனையும் ஆபிரகாம் தன்னைவிட்டு அனுப்பிவிட

வேண்டியதாயிருந்தது (கலா.4:30). ஆபிரகாமின் முதல் மனைவியான சாராளே, தான் அவனுக்கு மனைவியாகக் கொடுத்த ஆகாரை வீட்டை விட்டு அனுப்பும்படி கூறிய போதிலும், (ஆதி. 21:10) அவள் சொல்வதன்படி செய்யும் படி தேவன் ஆபிரகாமுக்கு கட்டளையிட்டார் (ஆதி. 21: 12). இதனால், ஆபிரகாம் ஆகாரையும் அவளுக்குப் பிறந்த வனையும் தன் வீட்டைவிட்டு அனுப்பிவிட்டான் (ஆதி.21: 14). ''இது சாராளின் மூலமாக ஆபிரகாமுக்கு கொடுக்கப் பட்ட தேவ ஆலோசனை என்பதை கலாத்தியர் 4:30 அறி யத்தருகின்றது'' (10). ஒருவன் தன் சொந்த மனைவியைத் தவிர, வேறு பெண்களுடன் வாழ்வது தேவனுடைய சித்த மல்ல என்பதை இச்சம்பவமும் சுட்டிக்காட்டுகின்றது. தேவ னுடைய பார்வையில் அது விபசாரமாக இருப்பதனால், (மாற். 10:11, லூக். 16:18) ஒருவன் இரட்சிக்கப்படுவ தற்கு முன் பல மனைவிகளை வைத்திருந்தாலும், இரட்சிக் கப்பட்டதன்பின் அவன் தன் முதல் மனைவியுடன் மட்டுமே வாழவேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை வைத்திருப்பவன், இரட்சிக்கப்பட்டதன் பின்னர் முதல் மனைவியோடு மட் டுமே வாழவேண்டுமாயினும், அவன் தன் மற்ற மனைவிக ளுக்கும், அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளுக்கும் தொடர்ந் தும் பொருளாதர ரீதியாக உதவி செய்ய வேண்டும் என் பதை மறந்துவிடக்கூடாது. ஒருவனுடைய பாவத்தைத் தேவன் மன்னித்தாலும் கூட, சிலவகையான பாவங்களில் அவற்றின் விளைவுகளை மன்னிப்பின் பின்பும் அனுபவிக்க வேண்டியதாயுள்ளது. அத்தகைய ஒரு பாவமாகவே பல தாரமணம் உள்ளது. இரண்டாவது திருமணம் காரணமாக ஒரு பெண்ணின் வாழ்வு பாதிக்கப்படுகின்றமையினால், அவ ளுடைய வாழ்வைக் கெடுத்தவன் பொருளாதார ரீதியாக அவளுக்கு உதவி செய்யவேண்டும். அதேசமயம், அப்பெண் ணும், தான், இன்னொருவனுடைய கணவனையே அதுவரை காலமும் வைத்திருந்தமையினால், அது தவறு என்பதை உணர்ந்து அவனை, அவனது முதல் மனைவியிடம் கொடுத்துவிடவேண்டும். சட்டரீதியாக அவள் தவறான உறவில் இருந்துள்ளமையினால், சட்டரீதியாக அவன் மீது

அவளுக்கு எவ்வித உரிமையும் இல்லாதபோதிலும், இரட்சிக்கப்பட்டவன் தனது தவறுக்கு பிரதியுபகாரமாகவே அவளுக்குப் பொருளாதார ரீதியாக உதவி செய்ய வேண்டியுள்ளது. எனினும், இவ்வுதவி சபையின் மூலமாக செய்யப்படுவதே நல்லது.

2. நெருங்கிய உறவினர் இருக்கத்தகாத ஓர் உறவு

இருவருக்குமேல் இருக்க முடியாத திருமண உறவானது, நெருங்கிய உறவினர் இருக்கத்தகாத ஓர் உறவாகவும் இருக்கின்றது. நெருங்கிய உறவினர்கள் திருமண முடிப்பது, திருமணத்திற்கான தேவதிட்டத்தை மீறும் செயலாகும். நம் தமிழ் கலாச்சாரத்தில் ஒருவன் தன் சகோதரியின் மகளைத் திருமணமுடிப்பதும், ஒரு பெண் தன் மாமாவை மணப்பதும் தவறாகக் கருதப்படுவதில்லை. சில சமுதாயங்களில், சகோதரியைத் திருமண முடிப்பது அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆனால் தேவனோ, இத்தகைய நெருங்கிய உறவினர்களுக்கிடையிலான திருமணத்தைத் தடை செய்துள்ளார். ''ஒருவனும் தனக்கு நெருங்கின இனமாகிய ஒருத்தியை நிர்வாணமாக்கும் பொருட்டு அவளைச் சேரலாகாது'' என்பது அவருடைய கட்டளையாயுள்ளது (லேவி. *18:6*). ''இவ்வதிகாரத்தில், நிர்வாணமாக்குதல் என்பது, தாம்பத்திய உறவுக்கான இன்சொல்லாகவே உபயோகிக்கப்பட்டுள்ளது''(16). லேவியராகமம் 18:8-9 இன் கட்டளைகள், உபாகமம் 27:20, 22 இல் மறுபடியுமாகக் கொடுக்கப்பட்டபோது, நிர்வாணமாக்குதல் என்பதற்குப் பதிலாக ''சயனித்தல்'' என்ற வார்த்தை உபயோகிக்கப்பட்டிருப்பதும் இதை உறுதிப்படுத்துகின்றது. NIV ஆங்கில மொழிபெயர்ப்பில் இப்பதம் பாலுறவு என்றே உள்ளது. இதிலிருந்து திருமண உறவானது நெருங்கிய உறவினர்களுக்கிடையே இருப்பது தேவனுடைய திட்டமல்ல என்பது தெளிவாகின்றது. ''அக்கால சமுதாயங்களில் நெருங்கிய உறவினர்களுக்கிடையேயான திருமணம் சாதாரணமான விடயமாயிருந்தமையினால், தன் ஜனங்கள் அத்தகைய திருமண உறவுக்குள் செல்வதைத் தடுப்பதற்காகவே தேவன் இக்கட்டளையைக் கொடுத்துள்

ளார்'' (17). லேவியராகமம் 18:6-17,20:11,12,19-21 உபா 22:30,27:20,22-23 இல் கொடுக்கப்பட்டிருக்கும் இக்கட்டளைகள் பற்றி நாம் ஒரு சில விடயங்களை அறிந்திருக்கவேண்டும்.

(**(அ) கட்டளையின் விளக்கம்:** திருமண உறவானது நெருங்கிய உறவினர்கள் இருக்கத்தகாத ஓர் உறவாய் இருப்பதற்குக் காரணம், அவ்வுறவு, ஏற்கனவே ஒருவனுக்கு இருக்கும் குடும்ப உறவுகளைக் குழப்புவதாய் இருக்கக் கூடாது என்பதனாலேயாகும். ''பாலுறவின்றி இருக்க வேண்டிய குடும்ப உறவுகளைத் திருமணம் கெடுத்துவிடக் கூடாது என்பதே இக்கட்டளைகளின் நோக்கமாயுள்ளது'' (16). இதனால், இத்தகு உறவு முறைகள் எவை என்று தேவன் இக்கட்டளைகளில் தெளிவுபடுத்தியுள்ளார். இக்கட்டளைகளில், ஒருவன் தன் மாமாவின் மகளைத் திருமணமுடிப்பதைமட்டும் தேவன் தடைசெய்யவில்லை என்பதை அவதானித்திடலாம். உறவுமுறைகளில், மாமாவின் மகள் முறைப்பெண்ணாய் இருப்பதனால், இவர்களுக்கிடையேயான திருமணம் இவர்களது உறவுமுறையைக் குழப்பிவிடாது. ஆனால், இதைத்தவிர மற்றைய உறவுமுறைகள் அனைத்தும் ஏற்கனவே இருவருக்குமிடையே இருக்கும் உறவுமுறையைக் குழப்புவதனால், அத்தகைய உறவினர்கள் திருமணமுடிப்பதைத் தேவன் தடைசெய்துள்ளார். இவ்வசனங்களில், திருமண உறவானது எத்தகைய உறவு முறைகளைக் குழப்பிவிடக்கூடாது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.)

முதலாவதாக, திருமண உறவானது பெற்றோர் பிள்ளை உறவுமுறையைக் குழப்பிவிடக்கூடாது. இதனால், ''உன் தகப்பனையாவது உன் தாயையாவது நிர்வாணமாக்கலாகாது'' என தேவன் கட்டளையிட்டுள்ளார் (லேவி. 18:7). சில நேரங்களில், இப்படி செய்யக்கூடாதென்று எமக்குத்தெரியாதா? இதற்கொரு கட்டளை அவசியம் தானா? என நாம் கேட்கலாம். ஆனால், பத்திரிகைகளில் இத்தகைய முறைகேடான உறவு பற்றிய செய்திகள் வெளிவருகின்றன. வேதாகமத்தில் கூட, லோத்தின் பெண் பிள்

ளைகள் அவனோடு பாலுறவில் ஈடுபட்ட சம்பவம் குறிப் பிடப்பட்டுள்ளது (ஆதி.19:30-38). எனவே, தேவன் இப் படி ஒரு கட்டளையைக் கொடுத்தது அவசியமற்றது என சொல்லமுடியாது. திருமண உறவு, பெற்றோர் பிள்ளை உறவைப் பாதிக்கக்கூடாது என்பதினால், ஒருவனது தாய் மரணமடைந்தபின் அவனது தகப்பன் இன்னுமொரு பெண் ணைத் திருமணமுடித்தால், அவனுக்கும் தகப்பனின் புதிய மனைவிக்கும் இடையே தாய் பிள்ளை உறவு இருப்பத னால், அவர்களிருவரும் திருமண உறவுக்குள் வரக்கூடாது என்பதைக் கருத்திற்கொண்டு, ''உன் தகப்பனுடைய மனை வியை நிர்வாணமாக்கலாகாது. அது உன் தாயினுடைய நிர் வாணம்'' என்று லேவியராகமம் 18:8 இல் சொல்லப்பட் டுள்ளது. இக்கட்டளையை மீறி ஒருவன் தன் தகப்பனு டைய மனைவியை வைத்திருந்ததை கொரிந்தியர் நிருபம் அறியத்தருகிறது (1 கொரி.5:1). ''<u>தாய் என்பதற்குப் பதி லாக, தகப்பனின் மனைவி என குறிப்பிடப்பட்டிருப்பதற் குக் காரணம், அவள் அவனது சொந்தத் தாய் அல்ல என் பதனாலேயாகும்</u>'' (18). அப்படியிருந்தும், அவள் தகப்ப னுக்கு மனைவியாய் இருந்தமையால், தாயாகவே இருக்கி றாள். இதனால், ''தன் தகப்பன் மனைவியோடே சயனிக் கிறவன் தன் தகப்பனை நிர்வாணமாக்கினபடியினால் இரு வரும் கொலை செய்யப்படக்கடவர்கள்'' என்றும், (லேவி. 20:11) ''தன் தகப்பன் மனைவியோடே சயனிக்கிறவன் தன் தகப்பனுடைய மானத்தைத் திறந்தபடியினாலே சபிக் கப்பட்டவன்'' என்றும்,(உபா.27:20,22:30) தேவன் கூறு கின்றார். ''சில ஆபிரிக்க கலாச்சாரங்களில் தகப்பன் மரித்தபின் அவனது மனைவிகளைப் பிள்ளைகள் எடுத்துக் கொள்ளும் பழக்கம் இருக்கின்றது'' (19). தகப்பனின் மனைவியோடு திருமண உறவு கொண்டவர்கள் இஸ்ர வேலிலும் இருந்ததை எசேக்கியேல் 22:10 இன் மூலம் அறிந்திடலாம். இவ்வசனத்தில் தகப்பனை நிர்வாணமாக் கினவர்கள் என்பது, லேவி. 20:11 இன்படி தகப்பனின் மனைவியோடு சயனித்ததன் மூலமாக செய்யப்பட்ட காரி யமாகும். இத்தகு பழக்கம் தேவனால் தடைசெய்யப்பட் டுள்ளதை நாம் மறக்கலாகாது.

பெற்றோர் பிள்ளை உறவுமுறையானது, ஒருவனது சொந்தக் குடும்பத்துக்கு அப்பாலும் செல்வதை நாம் அறிந்திருக்க வேண்டும். ஒருவனுக்கு, அவனுடைய மனைவியின் பெற்றோரும் பெற்றோர் உறவு முறையிலேயே இருக்கின்றனர். இதனால் அவர்களுடனான திருமணமும் தடை செய்யப்பட்டுள்ளது. ''மாமியோடே சயனிக்கிறவன் சபிக்கப்பட்டவன்'' என தேவன் கூறியுள்ளார் (உபா.27: 23). அதே போல மனைவிக்கும், கணவனின் பெற்றோர் இத்தகைய உறவுமுறையில் இருப்பதனால், மாமனார் மருமகள் உறவும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனென்றால், ''உன் மருமகளை நிர்வாணமாக்கலாகாது, அவள் உன் குமாரனுக்கு மனைவி'' என்பதும் தேவ கட்டளையாயுள்ளது (லேவி. 18:15). ஒருவனது பெற்றோரின் சகோதர சகோதரிகளும், அவனுக்கு பெற்றோர் உறவு முறையிலேயே இருக்கின்றனர். எனவே, ஒருவன் தன் பெற்றோரின் சகோதரியை அல்லது, ஒருத்தி தன் பெற்றோரின் சகோதரனைத் திருமணமுடிப்பதும் லேவியராகமம் 18:12-13, 20:19 இல் தடை செய்யப்பட்டுள்ளது. ''உன் தாயினுடைய சகோதரியையும் தகப்பனுடைய சகோதரியையும் நிர்வாணமாக்காயாக. அப்படிப்பட்டவன் தன் நெருங்கின இனத்தை அவமாக்கினான்'' என தேவன் கூறியுள்ளார் (லேவி. 20: 19).

இக்கட்டளைகள் ஆண்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளைகளாக இருப்பதை நாம் அவதானிக்கலாம். எனினும், இவை பெண்களுக்கான கட்டளைகள் அல்ல என நாம் கருதலாகாது. அக்காலத்தில், ஆண்களே திருமணத்தின் ஆரம்ப கர்த்தாக்களாக இருந்தமையே கட்டளைகள் இவ்வாறு கொடுக்கப்படுவதற்கான காரணமாகும். எனினும், ''முறைகேடான உறவில் இருக்கும் பெண்ணும், ஆணுக்குச் சமமான பாவத்தைச்செய்ததாகவே கருதப்பட்டது''(19). மேலும், மனிதருக்கு கட்டளைகள் கொடுக்கப்படும்போது, அவை பெரும்பாலும் ஆண்பாலிலேயே கொடுக்கப்படுவது வழமை. எனவே இக்கட்டளைகள் பெண்களுக்கும் கொடுக்கப்பட்டவை என்பதை மறுப்பதற்கில்லை. தமிழ் கலாச்சாரத்தில், ஒரு பெண் தன் தாயின் சகோதரனைத் திருமணமுடிக்கும் பழக்கம் இருப்பதை நாமறிவோம். இது, பெற்

றோர் பிள்ளை உறவுமுறையைக் கணவன் மனைவி உறவு முறையாக்கும் செயலாகும். தன் தாயின் சகோதரனைத் திருமணமுடிப்பவளுக்கு அவன் மாமாவாயிருப்பதனால், அவள் அவனுக்கு மருமகளாய் இருக்கின்றாள். லேவியராகமம் 20:12 இல், ''ஒருவன் தன் மருமகளோடே சயனித்தால் இருவரும் கொலைசெய்யப்படக்கடவர்கள். அருவருப்பான தாறுமாறு பண்ணினார்கள்'' என்று சொல்லப்பட்டுள்ளது. எனவே, தமிழ் கலாச்சாரத்தில் இருக்கும் பழக்கத்தின்படி கிறிஸ்தவர்கள் தம் பெற்றோரின் சகோதர சகோதரிகளுடன் திருமண உறவு கொண்டால் அது, தேவனுடைய கட்டளையை மீறிய ஒரு முறைகேடான திருமண உறவாகவே இருக்கும். ஒரு பெண் மாமாவின் மகனைத் திருமணமுடிக்கலாமே தவிர, மாமாவுக்கு மனைவியாகக்கூடாது. ''உன் தாயினுடைய சகோதரியையும் உன் தகப்பனுடைய சகோதரியையும் நிர்வாணமாக்காயாக. அப்படிப்பட்டவன் தன் நெருங்கின இனத்தை அவமானமாக்கினான்'' எனும் லேவியராகமம் 20:19 இன் கட்டளை, ஆண்களுக்குமட்டுமல்ல, பெண்களுக்குமானது என்பதை நாம் மறக்கலாகாது. அவள் தன் தாயின் அல்லது தகப்பனின் சகோதரனைத் திருமண முடிக்கக்கூடாது.

<u>இரண்டாவதாக</u>, <u>திருமண உறவானது சகோதர உறவையும் பாதிக்கக்கூடாது</u>. எனவே ஒருவன் தன் சொந்த சகோதரியை மட்டுமல்ல ஒன்றுவிட்ட சகோதரியையும் திருமணமுடிக்கக்கூடாது. இதனால்தான், ''உன் தகப்பனுக்காவது உன் தாய்க்காவது வீட்டிலாகிலும் புறத்திலாகிலும் பிறந்த குமாரத்தியாகிய உன் சகோதரியை நிர்வாணமாக்கலாகாது'' என்றும் தேவன் கட்டளையிட்டுள்ளார். (லேவி. 18:9) ''இவ்வசனத்தில், வீட்டில் பிறந்தவள் என்பது ஒருவனது சொந்த தகப்பனுக்கும் தாய்க்கும் பிறந்தவளாவாள். புறத்தில் பிறந்தவள், தகப்பன் அல்லது தாய் தமது திருமண உறவுக்கு வெளியே பெற்ற பிள்ளையாகும்'' (17). இவர்களும் அவனுக்கு சகோதரிகளாகவே இருக்கின்றனர். இதனால் லேவியராகமம் 18:11இல், ''உன் தகப்பனுடைய மனைவியினிடத்தில் உன் தகப்பனுக்குப் பிறந்த குமாரத்தியை நிர்வாணமாக்கலாகாது. அவள்

உன் சகோதரி'' என்றும் சொல்லப்பட்டுள்ளது. இவ்வசனத்தில் தகப்பனின் மனைவி அவனுடைய சொந்தத்தாய் அல்ல, மாறாக, தகப்பனின் வேறொரு மனைவியாகும். சகோதரர்கள் மத்தியில் திருமணம் அக்கால சமுதாயங்களில் சாதாரண விடயமாயிருந்தது. வேதாகமத்திலும் கூட, தாவீதுக்கு ஒரு பெண்ணிடத்தில் பிறந்த மகள் மீது, அவனுக்கு இன்னுமொருத்திக்குப் பிறந்த மகன் மோகங்கொண்டு அவளோடு தகாத உறவு கொண்ட சம்பவம் குறிப்பிடப்பட்டுள்ளது (2சாமு.13:1-21). இன்றும்கூட சில குடும்பங்களில் இப்படி நடப்பதைப்பற்றி கேள்விப்படுகின்றோம். எனினும், தேவன் இத்தகைய உறவைத் தடைசெய்துள்ளார் என்பதை நாம் மறக்கலாகாது. ''தன் தகப்பனுக்காவது தாய்க்காவது குமாரத்தியாகிய தன் சகோதரியோடே சயனிக்கிறவன் சபிக்கப்பட்டவன்'' என்று தேவன் கூறியுள்ளார் (உபா. 27:22).

சகோதர உறவுமுறை பிறப்பினால் மட்டுமல்ல திருமணத்தினாலும் ஏற்படுகின்றது. வேதாகமத்தைப் பொறுத்தவரை ஒருவன் திருமணமுடிக்கும்போது, மனைவியின் பெற்றோர் அவனுக்குப் பெற்றோராவது மட்டுமல்ல, ''மனைவியின் சகோதரிகளும் அவனுடைய சகோதரிகளாகின்றனர் (19). இதைப்போலவே, கணவனின் சகோதரர்கள் மனைவியின் சகோதரராகின்றனர். லேவியராகமம் 18:14 இல் கொடுக்கப்பட்டுள்ள கட்டளையின் மூலம் இதைஅறிந்து கொள்கின்றோம். ''உன் தகப்பனுடைய சகோதரனை நிர்வாணமாக்கலாகாது. அவன் மனைவியைச் சேராயாக, அவள் உன் தகப்பனுடைய சகோதரி'' எனும் இக்கட்டளையில், தகப்பனுடைய சகோதரனின் மனைவி தகப்பனுக்குச் சகோதரி என்றே சொல்லப்பட்டுள்ளது. எனவே, ஒருவனுக்குத் தனது சகோதரனின் மனைவி சகோதரியாகவே இருக்கின்றாள். இதனால், இத்தகைய சகோதர உறவுமுறையைக் குழப்பும் திருமணமும் தேவனால் தடைசெய்யப்பட்டுள்ளது. லேவியராகமம் 18 : 16 இல், ''உன் சகோதரனுடைய மனைவியை நிர்வாணமாக்கலாகாது'' என தேவன் கட்டளையிட்டுள்ளார். ''இக் கட்டளை, சகோதரன் உயிரோடிருக்கும்போது அவனுடைய மனை

வியை எடுத்துக்கொள்வதைப்பற்றியல்ல, மாறாக, சகோதரன் மரித்தபின் விதவையாகும் அல்லது விவாகரத்து காரணமாக தனிமைப்படும் அவனது மனைவியை விவாகம் பண்ணுவதைத் தடுக்கும் கட்டளையாகும்'' (19). இதனாலேயே இக்கட்டளை லேவியராகமம் 20:21 இல் மறுபடியுமாக சொல்லப்பட்டபோது, 'நிர்வாணம்' என்பதற்குப் பதிலாக 'விவாகம்' என்ற வார்த்தை உபயோகிக்கப்பட்டுள்ளது. ''ஒருவன் தன் சகோதரனின் மனைவியை விவாகம் பண்ணினால் அது அசுத்தம்'' என அக்கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது (லேவி. 20 : 21). ஒருவனுக்கு, அவனுடைய சகோதரனின் மனைவியும் சகோதரியாகவே இருப்பதனால், அவன் தன் சகோதரனின் மரணத்தின்பின் அவனது மனைவியைத் திருமணமுடிக்கக்கூடாது. அதேபோல, ஒரு பெண்ணும், தன் சகோதரியின் மரணத்தின் பின் அவளது கணவனுக்கு மனைவியாகக்கூடாது.

மூன்றாவதாக, ஒருவனுடைய திருமணம் பாட்டன் பேரன் உறவுமுறையையும் பாதிக்கக்கூடாது. ''உன் குமாரனுடைய மகளையாவது உன் குமாரத்தியினுடைய மகளையாவது நிர்வாணமாக்கலாகாது, அது உன்னுடைய நிர்வாணம்'' என்றும் தேவன் கட்டளையிட்டுள்ளார் (லேவி. 18:10). ''திருமணத்தின் தூய்மையைப் பேணுவதற்காகவே நெருங்கிய உறவினர்களுக்கிடையிலான திருமணங்களைத் தேவன் தடை செய்துள்ளார்'' (17). அதேசமயம், இன்றைய மருத்துவ ஆராய்ச்சியும், நெருங்கிய உறவினர்களுக்கிடையேயான திருமணத்தில் பிறக்கும் பிள்ளைகள் பாதிக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் பற்றி அறியத்தருகின்றது. ''நெருங்கிய உறவினர்களுக்கிடையிலான திருமணத்தில் பிறக்கும் பிள்ளைகள், அங்கவீனர்களாக இல்லையென்றால், வியாதியுடையவர்களாக இல்லையென்றால், புத்திபேதலித்தவர்களாக இருப்பர் என்பதை மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்'' (20). மருத்துவர்கள் இன்று கண்டுபிடித்துள்ளவற்றைத் தேவன் அன்றே அறிந்திருந்தமையினால், மருத்துவர்கள் இதைப்பற்றி கூறுவதற்குப் பல நூறு வருடங்களுக்கு முன்பே, மனிதர் நெருங்கிய உறவினர்களைத் திருமணமுடிப்பதை அவர் தடை செய்துள்ளார்.

(அ) கட்டளையின் விமர்சனம்: நெருங்கிய உறவினர்களோடு திருமண உறவு கொள்ளக்கூடாது எனும் தேவ கட்டளையானது இன்று பலவாறு விமர்சிக்கப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம், நெருங்கிய உறவினர்களைத் திருமணமுடித்தவர்கள் பற்றி வேதாகமத்தில் குறிப்பிடப் பட்டுள்ளமையேயாகும். ஆரம்பத்தில் காயீன் தன் சொந்த சகோதரியையே திருமணமுடித்தான். வேதாகமம் நேரடியாக இதுபற்றி குறிப்பிடாவிட்டாலும், ஆதியாகமம் 4:17 இல் *''காயீன் தன் மனைவியை அறிந்தான்''* என்று வாசிக்கின்றோம். இதற்குமுன் உள்ள அதிகாரங்களின் மூலம், அச்சமயம், முதல் மனிதரான ஆதாமும் ஏவாளும், அவர்களுடைய பிள்ளைகளுமே பூமியில் இருந்ததாக அறிகின்றோம். ஆதியாகமம் 5:4இல் ''ஆதாம், சேத்தைப் பெற்றபின் எண்ணூறு வருஷம் உயிரோடிருந்து குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்'' என்று சொல்லப்பட்டுள்ளது. இக்குமாரத்திகளில் ஒருத்தியையே காயீன் திருமணமுடித்திருக்க வேண்டும். ஏனென்றால், ஆதாமின் குமாரத்திகளைத் தவிர வேறுபெண்கள் அச்சமயம் இருக்கவில்லை. ''ஆதாமே முதல் மனிதனாகவும் (1கொரி. 15:45) ஏவாளே ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயாகவும் (ஆதி. 3:20) இருப்பதனால், அவர்களுடைய வம்சம் பெருகுவதற்கு அவர்களுடைய பிள்ளைகள் ஒருவரையொருவர் திருமணமுடிப்பதே ஒரே ஒரு வழியாயிருந்தது. எல்லாமனிதரும் ஆதாம் ஏவாளில் இருந்து வந்தவர்களாயின் இதைத்தவிர வேறுவழியில் இனம் பெருகியிருக்க முடியாது'' (20). எனவே, உலகத்தின் ஆரம்பத்தில் மனிதர் தம் சகோதரிகளையே திருமணமுடித்துள்ளனர். விசுவாசத்தின் தகப்பனாகக் கருதப்படும் ஆபிரகாம்கூட, தன் ஒன்றுவிட்ட சகோதரியையே திருமண முடித்திருந்தான் (ஆதி. 20:12). அதேபோல, செலொப்பியாத்தின் குமாரத்திகள், தம் தகப்பனுடைய சகோதரனின் பிள்ளைகளை மணமுடித்தனர் (எண். 36:11). இதுவும், சகோதர உறவைத் திருமண உறவாக்கிய சம்பவமாகவே உள்ளது. இது சகோதரியைத் திருமண முடிக்கக்கூடாது எனும் தேவகட்டளையை முரண்படுத்துவதாக சிலர் கருதுகின்றனர்.

ஆரம்பகாலத்தில் மனிதர் தம் சகோதரியை மட்டுமல்ல வேறு உறவினர்களையும் திருமணமுடித்துள்ளனர். வேதாகமத்தில், மோசேயின் தகப்பனாகிய அம்ராம் தன் அத்தையையே மணமுடித்திருந்தான் (யாத்.6:20). இதைப்போல பலர் அக்காலத்தில் நெருங்கிய உறவினர்களைத் திருமணமுடித்திருப்பர் என்பதில் சந்தேகமில்லை. எனினும், தேவனை அறிந்த மனிதர்களில் ஆதாமின் மூன்றாவது மகனாகிய சேத், ஆபிரகாம், செலொப்பியாத்தின் குமாரத்திகள் தவிர வேறு எவரும் நெருங்கிய உறவினர்களைத்திருமணமுடித்தது பற்றி வேதாகமத்தில் குறிப்பிடப்படவில்லை. இதிலிருந்து, தேவனை அறிந்தவர்களுள் பெரும்பாலானோர் நெருங்கிய உறவினர்களைத் திருமணமுடிக்கவில்லை என்பது தெளிவாகின்றது. மேலும், ஆபிரகாமின் திருமணம் அவன் தேவனை அறிவதற்கு முன்பே நடைபெற்றதாகும். தேவனுடைய அழைப்பைப் பெறுவதற்கு முன் ஆபிரகாமும் வேறு தெய்வங்களை வழிபட்ட குடும்பத்தைச் சேர்ந்தவராகவே இருந்தார் (யோசு. 24:2, ஆதி. 11:27-32). மேலும், மோசேயின் காலத்தில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டபோதே, தேவன், நெருங்கிய உறவினர்களுக்கிடையிலான திருமணத்தைத் தடைசெய்தார். அதற்கு முன் அவர் அத்தகைய திருமணத்தை அனுமதித்திருந்தார். ''அக்காலத்து மனிதர்களுடைய தேகாரோக்கிய நிலை காரணமாக, நெருங்கிய உறவினர்களுக்கிடையிலான திருமணத்தில் பிறக்கும் பிள்ளைகள் பாதிக்கப்படவில்லை. ஆனால் காலம் செல்லச் செல்ல, மானிட பரம்பரை அலகு (Gene) பாதிக்கப்பட்டமையினால், நெருங்கிய உறவினர்களுக்கிடையிலான திருமணத்தைத் தேவன் தடைசெய்தார்'' (21). எனவே, தேவனுடைய தடைக்கு முற்பட்ட காலத்தைய சம்பவங்களை ஆதாரமாய்க் கொண்டு, நெருங்கிய உறவினர்களைத் திருமணமுடிக்கலாம் என்று தர்க்கிப்பது அர்த்தமற்றது. தேவன் ஒன்றைத் தடை செய்தபின்பு அதை மீறுவது பாவமாகும்.

(ஆ) கட்டளையின் விதிவிலக்கு: நெருங்கிய உறவினர்களைத் திருமணமுடிப்பதைத் தடுத்த தேவன், ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் தன் கட்டளைக்கு விதிவிலக்கை

ஏற்படுத்தியுள்ளார். ஒருவனுக்குத் தன் சகோதரனின் மனைவி சகோதரியாய் இருப்பதனால் அவளைத் திருமண முடிக்கக்கூடாது என கட்டளையிட்ட தேவன், (லேவி.20: 21) ஒருவன் பிள்ளையற்றவனாக மரித்தால் அவனுடைய மனைவியைத் திருமணமுடிக்க அவனது சகோதரனுக்கு அனுமதி கொடுத்துள்ளார். ''சகோதரர் ஒன்றாய்க் குடியிருக்கும் போது, அவர்களில் ஒருவன் புத்திர சந்தானமில்லாமல் மரித்தால், மரித்தவனுடைய மனைவி புறத்திலிருக்கிற அந்நியனுக்கு மனைவியாகக்கூடாது. அவளுடைய புருஷனின் சகோதரன் அவளைத் தனக்கு மனைவியாகக் கொண்டு, அவளிடத்தில் சேர்ந்து, புருஷனுடைய சகோதரன் செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன். மரித்த சகோதரனுடைய பேர் இஸ்ரவேலிலே அற்றுப் போகாதபடிக்கு அவன் பேரை அவள் பெறும் தலைப்பிள்ளைக்கு இடவேண்டும்'' என தேவன் கூறியுள்ளார் (உபா. 25:5-6) நெருங்கிய உறவினர்களைத் திருமணமுடிப்பதைத் தடைசெய்த தேவன், பிள்ளையற்ற விதவைக்கு மட்டும் மரித்த கணவனின் சகோதரனைத் திருமணமுடிக்க அனுமதி கொடுத்தமைக்குப் பல காரணங்கள் இருக்கின்றன. இவற்றில் முக்கியமானது, மரித்த மனிதன் சந்ததியற்றவனாக இருக்கக்கூடாது என்பதேயாகும். இதனால்தான், இத்தகைய திருமணத்தில் பிறக்கும் முதல் பிள்ளைக்கு மரித்த கணவனுடைய பெயரைக் கொடுக்கவேண்டியதாயிருந்தது. ''அப்பிள்ளை மரித்த மனிதனுடைய பிள்ளையாகவே கருதப்படும்'' (22). ''இதனால், மரித்தவனுடைய சொத்தை சுதந்தரிப்பதற்கும் ஒருவன் உருவாகின்றான்'' (25). விதவை வேறு ஒரு மனிதனை விவாகம் பண்ணினால் இவை சாத்தியப்படாமல் போய்விடும் என்பதனால், அவள் மரித்த தன் கணவனுடைய சகோதரனை விவாகம் பண்ண தேவன் அனுமதி கொடுத்துள்ளார்.

இத்தகைய திருமணத்தின் இன்னுமொரு முக்கிய நோக்கம், விதவை பிள்ளையற்ற நிலையில் இருப்பதை நீக்குவதாகும். அக்காலத்தில் பிள்ளையற்ற விதவை வயோதிப காலத்தில் மிகவும் மோசமாக பாதிக்கப்படுவாள். ''இக்காலத்தைப்போல் வயோதிபர் நலன்புரி சங்

கங்களோ, ஓய்வூதிய கொடுப்பனவு முறைகளோ அக்காலத்தில் இராதமையினால், ஒருவன் முதிர்வயதடையும்போது,அவனைப் பராமரிப்பதற்கு அவனுக்கு பிள்ளை இருக்கவேண்டியது அவசியமானதாயிருந்தது'' (19). எனவே, பிள்ளையற்ற நிலையில் ஒரு பெண் விதவையாகும்போது, அவளது வயோதிப காலம் ஆதரவற்றுப் போவதைத் தடுப்பதற்காக, அவள் மரித்த தனது கணவனின் சகோதரனை மணமுடித்து பிள்ளையொன்றைப் பெற்றுக்கொள்ளத் தேவன் இத்தகைய திருமண முறையை அனுமதித்துள்ளார். ''விதவையின் நன்மை கருதியே இவ்வனுமதி கொடுக்கப்பட்டுள்ளது'' (04). எனினும், விதவைக்குத் தன் முதல் கணவன் மூலம் பிள்ளைகள் இருக்குமாயின் அவள் தன் மரித்த கணவனின் சகோதரனைத் திருமணமுடிக்கக் கூடாது. அவள் மறுவிவாகம் செய்ய விரும்பினால், வேறு ஒரு மனிதனைத்தான் திருமணமுடிக்க வேண்டும். பிள்ளையற்ற விதவைக்கு மட்டுமே தனக்கு சகோதர உறவில் இருக்கும் மரித்த தன் கணவனின் சகோதரனைத் திருமணம் முடிக்கலாம். இத்தகைய திருமணமுறை இன்று நடைமுறையில் இல்லாதிருப்பதனால், இந்த அனுமதியை கிறிஸ்தவர்களாகிய நமக்கான அனுமதியாக கருதமுடியாது. நமது திருமணம் எவ்வகையிலும் நமக்கு மற்றவரோடு இருக்கும் உறவுமுறையை மாற்றியமைப்பதாய் இருக்கக் கூடாது. அத்தகைய திருமண உறவு, தகாத ஓர் உறவு என்பதை மறுப்பதற்கில்லை.

3. அவிசுவாசியுடன் இருக்கக்கூடாத உறவு

இருவருக்குமேல் இருக்கமுடியாத, நெருங்கிய உறவினருடன் இருக்கத்தகாத திருமண உறவானது, ஒரு கிறிஸ்தவன் அவிசுவாசியுடன் இருக்கக்கூடாத உறவாகவும் உள்ளது. அவிசுவாசியை, அதாவது இயேசுகிறிஸ்துவை அறியாதவரைத் திருமணமுடிக்க ஒரு கிறிஸ்தவனுக்குத் தேவன் அனுமதி கொடுக்கவில்லை. பரிசுத்த வேதாகமத்தின் இரு ஏற்பாடுகளிலுமே தேவனை அறியாதவர்களுடன் திருமண உறவு கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது. ''அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்

களாக'' (2கொரி. 6:14) என கூறும் வேதாகமம், ''அவர்களோடு சம்பந்தம் கலவாயாக, உன் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும், அவர்கள் குமாரத்திகளை உன் குமாரருக்குக் கொள்ளாமலும் இருப்பாயாக'' என்று கட்டளையிட்டுள்ளது (உபா.7:3). எனவே, ஒரு விசுவாசி அவிசுவாசியுடன் திருமண உறவில் இருக்கக்கூடாது என்பதும் மானிட திருமணத்திற்கான தேவனுடைய திட்டமாயிருப்பதை மறுப்பதற்கில்லை.

ஒருவன் தேவனை அறியாத அவிசுவாசியைத் திருமணமுடிப்பது அவருடைய கட்டளைக்கு விரோதமான செயல் என்பதற்கு எஸ்றாவினுடைய சீர்திருத்தப்பணிகள் சிறந்த உதாரணமாயிருக்கின்றது. கி.மு.586இல் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன யூதர்கள், கி.மு.538இலும், கி.மு.458இலும், 445 இலும் முறையே செருபாபேல், எஸ்றா, நெகேமியா என்போரது தலைமையின் கீழ் எருசலேமுக்குத் திரும்பி வந்தனர். இவர்களில் சிலர், தேவ கட்டளைக்கு விரோதமாக தேவனை அறியாத அந்நிய ஜாதிப்பெண்களைத் திருமண முடித்திருந்தனர் (எஸ். 9:1-2). இது தேவனுக்கு விரோதமான செயல் என்பதனால், எஸ்றா, மக்களின் இத் தவறுக்காக மனஸ்தாபப்பட்டு தேவனிடம் மன்றாடினான். எஸ்றாவின் இவ் ஜெபத்தில், யூதர்கள் தேவனை அறியாதவர்களைத் திருமணமுடித்தது அவருக்கு விரோதமான பாவம் என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ''தேவரீர் உமது ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளைக் கொண்டு கற்பித்த உமது கற்பனைகளை விட்டுவிட்டோம். நீங்கள் உங்கள் குமாரத்திகளை அவர்களுடைய குமாரருக்குக் கொடாமலும் அவர்களுடைய குமாரத்திகளை உங்கள் குமாரருக்குக் கொள்ளாமலும் இருப்பீர்களாக என்றீரே'' எனும் எஸ்றாவின் வார்த்தைகள் (எஸ். 9:10,12) இதை அறியத்தருகின்றன. எஸ்றா அழுகையோடு தன் ஜனங்களின் தவறை அறிக்கையிட்டு மன்றாடியபோது (எஸ்.10:1-2) செக்கனியா என்பவன், ''நாங்கள் தேசத்து ஜனங்களிலுள்ள அந்நிய ஸ்திரீகளைச் சேர்த்துக் கொண்டதினால் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தோம்'' என்றான் (எஸ். 10:2). அதேபோல், எஸ்றாவும் இதைப்பற்றி மக்க

ளுக்கு அறிவிக்கும்போது, ''நீங்கள் இஸ்ரவேலின் மேலிருக்கிற குற்றத்தை அதிகரிக்கப்பண்ண, மறு ஜாதியான ஸ்திரீகளை விவாகம் பண்ணினதினால் பாவம் செய்தீர்கள் என்றான் (எஸ். 10:12). உண்மையில், தேவனை அறியாதவர்களைத் திருமணமுடிக்கக்கூடாது என்பது அவரது நேரடியான கட்டளையாயிருப்பதனால் (உபா. 7 : 1-3, 2கொரி.6:14) அத்தகைய திருமணம் அவரது கட்டளையை மீறும் பாவச் செயலாகவே இருக்கின்றது. இன்றைக்கு இக் கட்டளை பெரும் சர்ச்சைக்குரிய விடயமாயிருப்பதனால் இதுபற்றி சற்று விளக்கமாக பார்ப்போம்.

(அ) இயேசுகிறிஸ்துவை அறியாதவரை மணமுடிப்பதைத் தடுப்பதற்கான காரணங்கள்: ஒரு கிறிஸ்தவன் இயேசுகிறிஸ்துவை அறியாதவரைத் திருமணமுடிக்கக் கூடாதமைக்கான முக்கிய காரணம், அத்தகைய திருமண உறவு, கணவன் மனைவியிடையே பூரண இணக்கத்தை ஏற்படுத்தாத ஒரு உறவாக இருப்பதேயாகும். இதை 1 கொரிந்தியர் 6:14 இலுள்ள கட்டளை சிறப்பாக விளக்குகின்றது. ''அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக'' எனும் இக்கட்டளையில், ''நுகம்'' எனும் உருவகம் உபாகமம் 22:10 இலிருந்து எடுக்கப்பட்டதாகும். இவ்வசனத்தில் ''மாட்டையும் கழுதையையும் பிணைத்து உழாதிருப்பாயாக'' என்று சொல்லப்பட்டுள்ளது. நுகம் என்பது, வண்டிலை இழுப்பதற்கு அல்லது வயலை உழுவதற்கு மிருகங்களைப் பிணைப்பதற்காக அவற்றின் கழுத்தின் மீது வைக்கப்படும் தடியாகும். இத்தடியை ஒரே இன மிருகங்களின் மீதே வைக்கமுடியும். மாட்டையும் கழுதையையும் நுகத்தடியினால் ஒன்றாக பிணைத்தால், இரண்டும் சமமற்ற உயரத்துடனிருப்பதால், நுகத்தடி நேராக இல்லாமல், ஒரு பக்கம் உயர்ந்தும் மறுபக்கம் தாழ்ந்தும் இருக்கும். இது அர்த்தமற்ற செயலாயிருப்பது மட்டுமல்ல, இரு மிருகங்களுக்குமே நுகத்தடி பெரும் சுமையாகவும் இருக்கும். ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்தவரல்லாதவளைத் திருமண முடிப்பதும் இதைப்போன்ற ஒரு செயலேயாகும். ''2 கொரி, 6:14 இல் நுகம் என்பது நெருக்கமான ஒரு உறவுக்கான உருவகமாகவே உள்ளது'' (23). எனவே, விசுவாசியும் அவிசுவாசியும்

திருமண உறவுக்குள் வரும்போது அவர்களை இணைக்கும் திருமண நுகம், அவர்களை சரியான விதத்தில் இணைக்காத தோடு, இருவருக்குமே பெரும் சுமையாகவே இருக்கும். ''அது இருவரது கழுத்தையுமே முறித்துவிடும்'' (24). இத னால் அவர்களது குடும்பவாழ்வு இனிமையற்றதாக இருக் கும்.

பழைய ஏற்பாட்டில், தேவன் மாட்டையும் கழுதையை யும் பிணைத்து உழவேண்டாம் என கூறியதற்கு இன்னு மொரு காரணமும் உள்ளது. இரண்டும் வித்தியாசமான தன்மைகளையுடையவைகளானதால் இரண்டையும் நுகத் தடியால் பிணைத்தால், வயலை உழமுடியாமல் போய் விடும். மேலும், இரண்டையும் ஒரு வண்டிலில் பூட்டி, அவ்வண்டிலை இழுக்கவும் முடியாது. அதேபோலவே, கிறிஸ்தவனும் கிறிஸ்தவளல்லாதவளும் திருமண நுகத்தில் இணையும்போது, அவர்களது வாழ்க்கையும் உழமுடியாத வயலைப்போலவும் இழுக்க முடியாத வண்டிலைப்போல வுமே இருக்கும். ''பழைய ஏற்பாட்டுச்சட்டத்தின்படி (உபா. 14:1-8) இவ்விரு மிருகங்களில் ஒன்று சுத்தமா னது மற்றது அசுத்தமானது'' (25). அதேபோல, கிறிஸ்த வன் ஆவிக்குரிய காரியங்களில் நாட்டம் கொள்ளும் பரிசுத் தவான். அவன் இயேசுகிறிஸ்துவின் கர்த்தத்துவத்தின் கீழ் ஆவியின் சிந்தையுடன் வாழ்பவன். ஆனால் இயேசுகிறிஸ் துவை அறியாதவனோ ஜென்ம சுபாவமான மனிதன். இவன் தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ள மாட்டான். அவற்றைப் பைத்தியமாகவே எண்ணுவான் (1கொரி.2:14). இவன் தேவனுடைய கட்டளைகளின்படி வாழாமல், தனது மாம்சமும் மனசும் விரும்பும் காரியங் களையே செய்வான் (எபே.2:3). எனவே, இத்தகைய வித் தியாசமான தன்மையுடைய, வித்தியாசமான நிலையில் இருக்கும் இருவர் திருமணத்தில் இணையும்போது, இருவ ரும் வித்தியாசமான விருப்பங்களையும் நோக்கங்களையும் கொண்டவர்களாக இருப்பார்கள். இது குடும்பவாழ்வில் பலவிதமான பிரச்சனைகளைத் தோற்றுவிக்கும். கணவ னும் மனைவியும் பல விடயங்களில் ஒரு இணக்கத்துக்கு வரமுடியாது தமக்கிடையே பிரிந்திருப்பர். வேதம் கூறுவது

போல, இரண்டு பேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய அவர்கள் ஒருமித்து நடந்து போகமாட்டார்கள் (ஆமோ. *3:3*). கணவனும் மனைவியும் வெவ்வேறு தெய்வங்களை வழிபடுகிறவர்களாயிருக்கும்போது அவர்களுடைய குடும்பவாழ்வில் இருவருக்குமிடையே ஒற்றுமை இருக்காது. ''திருமணத்தில் ஒன்றாக இணைவதற்கு இருவரது விசுவாசமும் ஒன்றாயிருப்பதே அத்திவாரமாயுள்ளது'' (*26*) என்பதை நாம் மறக்கலாகாது.

தேவகட்டளையை மீறி ஒரு அவிசுவாசியைத் திருமணமுடிக்கும்போது, குடும்பவாழ்வில் கணவன் மனைவியிடையே பூரண இணக்கம் இல்லாதிருப்பது மட்டுமல்ல, அது, கிறிஸ்தவன் தேவனைவிட்டு வழிவிலகிச் செல்வதற்கும் காரணமாயமைந்துவிடும். திருமணத்திற்குப் பின் நான் என் துணையை இயேசுகிறிஸ்துவுக்குள் கொண்டு வந்து விடுவேன் என சிலர் சூளுரைத்துவிட்டு அவிசுவாசியைத் திருமணமுடிக்கின்றனர். எனினும், நடைமுறையில் இது சாத்தியமாவதில்லை. பெரும்பாலும் இத்தகைய திருமணங்களில் கிறிஸ்தவனே தனது விசுவாசத்தை விட்டுக்கொடுக்கின்றதை நாம் அவதானிக்கலாம். இதற்கு சாலொமோனுடைய வாழ்வு சிறந்த உதாரணமாயுள்ளது. இஸ்ரவேலிலேயே மிகவும் புகழ் பெற்று விளங்கிய அரசனான சாலொமோன்(*1*இராஜா.*10:23*)ஆரம்பத்தில் தேவனோடு நெருங்கி ஜீவித்தபோதிலும் (*1*இராஜா. *3:3-15*) பிற்காலத்தில், அவன் தேவனுடைய கட்டளைக்கு விரோதமாகத் தேவனை அறியாத பெண்களைத் திருமணமுடித்தான் (*1* இராஜா.*11:1-3*). ''அவன் அந்நிய ஜாதியாரான அநேகம் ஸ்திரீகள் மேல் ஆசைவைத்து .. அவர்களோடு ஐக்கியமாயிருந்தான்'' (*1*இராஜா. *11:1-2*)என கூறும் வேதம், ''அவனுடைய ஸ்திரீகள் அவன் இருதயத்தை வழுவிப்போகப் பண்ணினார்கள்'' என்றும், (*1* இராஜா. *11:3*). ''சாலொமோன் வயது சென்றபோது அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்'' என்றும் சொல்லப்பட்டுள்ளது (*1* இராஜா. *11:4*). ஆரம்பத்தில் தேவனுக்கு ஆலயத்தைக்கட்டிய சாலொமோன் (*1*இராஜா. 6) பிற்காலத்தில்

அந்நிய தெய்வங்களுக்கெல்லாம் இஸ்ரவேலில் வழிபாட்டிடங்களைக் கட்டினான் (1 இராஜா. 11:5-8). அவிசுவாசியைத் திருமணமுடிக்கும்போது விசுவாசி தேவனை விட்டு விலகிச்செல்வான் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. இதைப்போன்ற பல உதாரணங்கள் உள்ளன. எனவே, ஒரு விசுவாசி அவிசுவாசியைத் திருமணமுடிப்பதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

தேவகட்டளையை மீறி ஒருவன் தேவனை அறியாதவளைத் திருமணமுடிக்கும்போது, அவன் தேவனைவிட்டு விலகிச் செல்வது மட்டுமல்ல, அவன் தேவனையறியாத வம்சத்தை உருவாக்குகிறவனாகவும் இருப்பான். ''திருமணவாழ்வில், கணவனும் மனைவியும் எல்லாவற்றிலும் ஏதாவது ஒரு வகையில் ஒரு இணக்கத்திற்கு வரவேண்டியுள்ளமையினால், மார்க்கவிடயங்களில் ஒருவர் மற்றவருக்கு விட்டுக்கொடுக்கின்றனர்'' (27). இதை, விசுவாசியும் அவிசுவாசியும் இணைந்திருக்கும் திருமணத்தில் நாம் அவதானிக்கலாம். எனினும், இத்தகைய திருமணங்களில், பெரும்பாலும், கிறிஸ்தவனே தனது விசுவாசத்தை விட்டுக்கொடுக்கின்றான். இதனால் குடும்பத்தில் கிறிஸ்தவ செல்வாக்கு குறைவடைய பிள்ளைகள் தேவனை அறியாதவர்களாக வளரத்தொடங்குகின்றனர். இத்தகைய நிலையைத் தன் கால சமுதாயத்தில் அவதானித்த நெகேமியா, ''அஸ்தோத், அம்மோன், மோவாப் ஜாதிகளான ஸ்திரீகளைச் சேர்த்துக்கொண்ட சில யூதரையும் அந்த நாட்களில் கண்டேன். அவர்கள் பிள்ளைகள் பேசின பேச்சில் பாதி அஸ்தோத் பாஷையாயிருந்தது. இவர்கள் அந்தந்த ஜாதிகளின் பாஷையைத் தவிர யூதபாஷையைத்திட்டமாய்ப் பேச அறியாதிருந்தார்கள்'' என்று குறிப்பிட்டுள்ளார் (நெகே. 13:23-24). இதிலிருந்து, அக்காலத்தில் தேவனை அறியாத பெண்களைத் திருமண முடித்த யூதர்களுடைய பிள்ளைகளில், அவர்களுடைய அந்நியஜாதி மனைவியின் செல்வாக்கே அதிகமாயிருந்துள்ளது தெளிவாகின்றது. ''இது யூத இனத்துக்கே ஒரு அச்சுறுத்தலாக இருந்தது. யூதர்களுடைய மொழியை அறியாது வளரும் பிள்ளைகள் யூத மார்க்கத்தை அறியமுடியாதவர்களாக, தத்தமது தாயின் மதங்களைப் பின்பற்றுவர். இது

யூதமார்க்கம் இல்லாமல் போவதற்கு காரணமாயமையும் என்பதை நெகேமியா அறிந்திருந்தார்'' (28). இதே வித மாக, தேவனை அறியாதவர்களைத் திருமண முடிப்பவர் கள், தமது கிறிஸ்தவ விசுவாசத்தை விட்டுக்கொடுப்பத னால் கிறிஸ்தவ செல்வாக்கற்ற சூழலில் வளரும் பிள்ளை கள், பிற்காலத்தில் கிறிஸ்தவரல்லாதவராகவே இருப்பர். இது தேவனை அறியாத வம்சத்தையே உருவாக்கும். அவி சுவாசியுடனான திருமண உறவு இத்தகைய அபாயகர மான நிலைமை உருவாகக் காரணமாயமைவதனால், கிறிஸ் தவர்களாகிய நாம் இவ்விடயத்தில் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

''அவிசுவாசியைத் திருமணமுடிக்கக் கூடாது எனும் தேவகட்டளை மதரீதியான ஒரு கட்டளையே தவிர, அது இனரீதியான கட்டளை அல்ல. தேவனுடைய ஜனங்க ளோடு தன்னையும் அடையாளங்காணும் எந்த ஒரு இனத் தவரையும் அவருடைய ஜனங்கள் திருமணமுடிக்கலாம்''. (29) ஏனென்றால், பிறமதத்தவரைத் திருமணமுடிப்ப தைத் தடுத்துள்ள தேவன், பிற இனத்தவரைத் திருமண முடிப்பதை அனுமதித்திருக்கிறார். இஸ்ரவேலர் எகிப்திலி ருந்து வெளியேறியபோது, வேறு பல ஜாதியினரும் அவர் களோடு சென்றனர் (யாத்.12:38). அவர்கள் விருத்தசே தனம் பெற்று தேவனுடைய ஜனங்களாகியமையினால் (யாத். 12:48, எண் 9:14) இஸ்ரவேலரால் அவர்களை மணமுடிக்கக்கூடியதாயிருந்தது. மோவாபியப் பெண் ணான ரூத், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை விசுவா சித்து அவருடைய பிள்ளையாகியமையினால், அவளால் இஸ்ரவேலனான போவாசோடு வாழக்கூடியதாயிருந்தது (ரூத். 1:16, 2:12, 4:10). அதேபோல, எரிகோவைச் சேர்ந்த ராகாப் எனும் பெண் தேவனை விசுவாசித்தமையி னால் (எபி. 11:31, யோசு 2:9-11) அவள் இஸ்ரவேலைச் சேர்ந்த சல்மோன் என்பவனது மனைவியாகினாள் (மத். 1:5). இதிலிருந்து, வேறு ஜாதியினரைத் திருமணமுடிப்ப தற்குத் தேவன் தடைவிதிக்கவில்லை என்பது தெளிவாகின் றது. ஆனால், அவர்கள் தேவனை அறியாத அவிசுவாசி களாக இருந்தால், அவர்களோடு கிறிஸ்தவர்கள் திருமண

உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது. ஏனென்றால், அத்தகைய திருமணமானது தேவகட்டளையை மீறும் செயலாகவும், கிறிஸ்தவன் தேவனைவிட்டு விலகிச் செல்லுவதற்கு ஏதுவாயமையும் செயலாகவும், அவன் தேவனை அறியாத வம்சத்தை உருவாக்கும் செயலாகவும் இருக்கும் என்பதை கிறிஸ்தவர்கள் ஒருபோதும் மறக்கலாகாது.

(ஆ) இரட்சிப்பின் அனுபவத்திற்கு முன் மணமுடித்தவனின் தற்போதைய நிலைமை: ஒரு விசுவாசி அவிசுவாசியோடு திருமண உறவில் இருப்பதற்குத் தேவன் தடைவிதித்துள்ளபோதிலும், ஒருவன் இயேசுகிறிஸ்துவை அறிந்து இரட்சிக்கப்படுவதற்கு முன் திருமணமுடித்திருந்தால் அவனுடைய நிலைமை என்ன என்பது இன்று பெரும் பிரச்சனைக்குரிய விடயமாயுள்ளது. இத்தகைய பிரச்சனைக்கு கொரிந்து சபையினரும் முகங்கொடுத்தமையினால் அவர்கள் இதுபற்றி பவுலிடம் விளக்கம் கேட்டிருந்தனர். கொரிந்து சபையில் பலர், தமது திருமணத்தின் பின்பே இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றிருந்தனர். இதனால் பலர் இரட்சிக்கப்படாத துணையோடு வாழவேண்டியதாயிருந்தது. ''இரட்சிக்கப்படாத துணையை விவாகரத்து செய்ய வேண்டும் என சிலர் நினைத்தனர்'' *(30)*. இவர்களுக்குப் பவுல் பதிலளிக்கும் போது, ''சகோதரனொருவனுடைய மனைவி அவிசுவாசியாயிருந்தும் அவனுடனே வாசமாயிருக்க அவளுக்குச் சம்மதமிருந்தால், அவன் அவளைத் தள்ளிவிடாதிருக்கக்கடவன். அப்படியே ஒரு ஸ்திரீயினுடைய புருஷன் அவிசுவாசியாயிருந்தும் அவளுடனே வாசமாயிருக்க அவனுக்குச் சம்மதமிருந்தால் அவள் அவனைத் தள்ளி விடாதிருக்கக்கடவள்'' எனக் குறிப்பிட்டுள்ளார் *(1 கொரி. 7:12-13)*. விசுவாசியும் அவிசுவாசியும் திருமண உறவில் இருப்பது தேவனுடைய திட்டம் அல்ல என்பது உண்மையாயினும், திருமணத்தின் பின் இரட்சிக்கப்படுவோர் விடயத்தில், திருமண உறவு ஆயுள் முழுவதும் இருக்கவேண்டும் என்பதே தேவனுடைய திட்டம் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. ''இரட்சிப்பு திருமண உறவை மாற்றியமைப்பதில்லை என்பதை நாம் மறக்கலாகாது'' *(31)*. இரட்சிக்கப்பட்டதன் பின் கணவன்

மனைவி உறவில் மாற்றம் ஏற்படுவதில்லை. ''இரட்சிப்புக்கு முன்பான திருமணமும் தேவனுடைய பார்வையில் உண்மையான திருமணமாகவே உள்ளது'' (24). பாலுறவானது கணவனையும் மனைவியையும் ஒரே மாம்சமாக்குவதனால், ஒரு கிறிஸ்தவன் அத்தகைய இணைப்பை பிரிக்க முற்படக் கூடாது.

இரட்சிக்கப்பட்டவன் இரட்சிக்கப்படாத தன் துணையோடு திருமண உறவில் இருக்கவேண்டும் என்பது, திருமணத்திற்கான தேவனுடைய திட்டத்தை முரண்படுத்துவதாக நாம் எண்ணலாம். எனினும் இவ்விடயத்தில் இரட்சிப்பின் முன்பே, இருவரும் அவிசுவாசிகளாக இருக்கையிலேயே திருமணம் நடைபெற்றுவிட்டது. இரட்சிப்பின் முன்பே இருவரும் ஒரே மாம்சமாகிவிட்டனர். இப்போது, இருவரில் ஒருவர் இரட்சிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், இரட்சிக்கப்பட்டவரின் ஒருபகுதியாகவே இரட்சிக்கப்படாதவர் இருப்பதனால், அவர்களது திருமண உறவு மரணம் வரை தொடர்ந்திருக்கவேண்டும். அதேசமயம், இரட்சிக்கப்பட்டவர் மூலம் இரட்சிக்கப்படாதவரும் இயேசுவை அறிந்துகொள்ள வாய்ப்பிருக்கின்றமையினால், இரட்சிக்கப்பட்டவன் தொடர்ந்தும் இரட்சிக்கப்படாதவளுடன் வாழ வேண்டும். ''இரட்சிக்கப்படாமலிருக்கும் தன் துணையையும்தேவன் இரட்சிப்புக்குள் கொண்டுவருவார் எனும் நம்பிக்கையுடன் விசுவாசி அவிசுவாசியோடுவாழ வேண்டும்'' (32). இரட்சிக்கப்பட்ட விசுவாசி அவிசுவாசியைத் தள்ளிவிடக் கூடாது என கூறும் பவுல், ''என்னத்தினாலெனில், அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகின்றான். அவிசுவாசியான மனைவியும் தன் புருஷனால் பரிசுத்தமாக்கப்படுகின்றாள். இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே. இப்பொழுதோ அவை பரிசுத்தமாயிருக்கின்றன'' என குறிப்பிட்டுள்ளார் (1 கொரி. 7:14). இவ்வசனத்தை சரியாக விளங்கிக்கொள்வதற்கு, ''பரிசுத்தம்'' எனும் வார்த்தையைப் பவுல் என்ன அர்த்தத்துடன் உபயோகித்துள்ளார் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். சிலர் நினைப்பதுபோல பாலுறவின் மூலம் பரிசுத்தம் என, பவுல் இவ்வசனத்தில் போதிக்கவில்லை என்பதை நாம் மறக்கலாகாது.

பவுலினுடைய நிருபங்களில் கிறிஸ்தவர்கள் பரிசுத்தவான்கள் என்றே அழைக்கப்பட்டுள்ளனர். பரிசுத்தம் என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள ''ஹெகியோஸ்'' எனும் பதம், வேறு பிரிக்கப்படுதல், பிரித்தெடுக்கப்படுதல், ஒதுக்கிவைக்கப்படுதல் எனும் அர்த்தங்களையும் கொண்டுள்ளது. பழைய ஏற்பாட்டில், சாதாரண உபயோகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, தேவனுடைய காரியங்களில் பயன்படுத்துவதற்காக ஒதுக்கிவைக்கப்பட்டவை அனைத்தும் பரிசுத்தமானவையாக கருதப்பட்டன. இதேபோல, ''கிறிஸ்தவனும் பாவங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு தேவனுக்காக அர்ப்பணிக்கப்பட்டவனாக இருக்கின்றான்'' *(33)*. அவன் பரிசுத்தவான் என அழைக்கப்படுவதற்கு இதுவே காரணமாகும். எனவே, அவிசுவாசியான புருஷன் தன் மனைவியினால் பரிசுத்தமாக்கப்படுகின்றான் எனும் போது அவனும் தேவனுக்காக பிரித்தெடுக்கப்பட்டவனாக இருக்கிறான் என்பதே பவுல் சொல்ல முற்படும் விடயமாகும். ''இரட்சிக்கப்பட்டவள் தேவனுடையவளாக இருக்கின்றமையினால், திருமணத்தின் மூலம் அவளோடு ஒரே மாம்சமாகியவனும் தேவனுடையவனாக இருக்கின்றான்'' *(32)*. இதனால், இரட்சிக்கப்பட்ட மனிதன் தொடர்ந்தும் இரட்சிக்கப்படாத தன் துணையுடனேயே வாழவேண்டும் என பவுல் கூறுகின்றார்.

''இரட்சிக்கப்படாத கணவன் மனைவியரில், ஒருவர் இரட்சிப்படையும்போது, மற்றவரும் சிறப்பான முறையில் தேவனுக்காக வேறு பிரிக்கப்படுகின்றார்'' *(34)*. இதனால், ''இரட்சிக்கப்பட்டவர் தேவனுடைய கிருபையையும் ஆசீர்வாதத்தையும் இரட்சிக்கப்படாதவருக்கு கொண்டுவரும் ஊடகமாக இருக்கின்றார்'' *(30)*. இதற்கு வேதத்தில் ஒரு சில உதாரணங்கள் உள்ளன. போத்திபாரின் வீட்டு விசாரணைக்காரனாக தேவனுடைய மனிதனான யோசேப்பு இருந்த காலத்தில், கர்த்தர் யோசேப்பினிமித்தம் அந்த எகிப்தியனை ஆசீர்வதித்தார் என ஆதியாகமம் 39:5 அறியத்தருகிறது. அதேபோல, தேவனுடைய மனிதனான யாக்கோபு தன்னோடு இருந்த காலத்தில் தேவன் தன்னையும் ஆசீர்வதித்ததாக லாபான் தெரிவித்துள்ளான் (ஆதி.

30:27). இதேவிதமாக, இரட்சிக்கப்பட்ட விசுவாசியோடு திருமண உறவில் இருக்கும் அவிசுவாசியும், விசுவாசியின் மூலமாக தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள் கின்றான். ''விசுவாசியின் மூலமாக பரிசுத்தமான திரு மணத்தின் ஆசீர்வாதம் அவிசுவாசிக்கும் செல்கின்றது'' (24).''இரட்சிக்கப்பட்டவனுடைய இத்தகைய ஆவிக்குரிய செல்வாக்கு காரணமாக அவிசுவாசியும் இரட்சிக்கப்படக் கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது'' (31). இரட்சிக்கப்படாத கணவர் இரட்சிக்கப்பட்ட மனைவியின் பயபக்தியோடு கூடிய கற்புள்ள நடத்தையைப் பார்த்து, போதனையின்றி மனைவியின் நடத்தையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள் ளப்படுவார்கள் என்பது வேதம் அறியத்தரும் உண்மையா கும் (1பேது.3:1-2). இதனால், இரட்சிக்கப்பட்ட விசுவா சியோடு இரட்சிக்கப்படாதவர் வாழவிரும்பும்போது, விசு வாசி அவிசுவாசியைத் தள்ளிவிடக்கூடாது. ''அவிசுவாசி இரட்சிக்கப்படுவான் எனும் நம்பிக்கையோடு விசுவாசியும் அவனோடு திருமண உறவில் தொடர்ந்திருக்க வேண்டும்'' (35). ''இரட்சிக்கப்பட்ட விசுவாசி, இரட்சிக்கப்படாத தன் துணையை அசுத்தமானவனாக அல்ல, தேவனுக்காக ஆதாயப்படுத்திக் கொள்ளப்படவிருக்கும் பரிசுத்தமானவ னாகவே பார்க்க வேண்டும்'' (36).

இரட்சிக்கப்படுவதற்கு முன் திருமணமுடித்த தம்பதிய ரில் ஒருவர் இரட்சிக்கப்படும்போது, இரட்சிக்கப்படாத வருக்கு தொடர்ந்து இரட்சிக்கப்பட்டவரோடு வாழவிருப்ப மிருக்குமாயின், இரட்சிக்கப்பட்ட விசுவாசி அவிசுவாசி யைத் தள்ளிவிடக்கூடாது என கூறும் பவுல், ''ஆகிலும் அவிசுவாசி பிரிந்து போனால் பிரிந்துபோகட்டும். இப்படிப் பட்ட விஷயத்தில் சகோதரனாவது சகோதரியாவது அடி மைப்பட்டவர்கள் அல்ல, சமாதானமாயிருக்கும்படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார்'' என தெரிவிக்கின்றார் (1கொரி7:15). அக்கால சமுதாயத்தில், கிறிஸ்தவ விசுவாசி யோடு அவிசுவாசி வாழவிரும்பாமைக்குப் பல காரணங்கள் இருந்தன. ''அக்காலத்தில் இரட்சிக்கப்பட்ட மனைவி விசு வாசிகளின் வீடுகளுக்குச் செல்லுதல், கிறிஸ்தவ சகோதர சகோதரிகளை முத்தமிட்டு வாழ்த்துதல் என்பன, அவள்

மீது அவிசுவாச கணவனுக்கு வெறுப்பை ஏற்படுத்தின. மேலும், அக்காலத்தில் ரோம அரசாங்கம் கிறிஸ்தவர்களுக்கு எதிராக இருந்தமையினால், கிறிஸ்தவர்கள் தேவனை வழிபட இரகசியமாக கூடுதல், இரவு வேளைகளில் ஆராதனைகளில் பங்குபெறுதல் என்பன விசுவாச மனைவியோடு அவிசுவாச கணவன் வாழவிரும்பாமைக்கான காரணங்களாக இருந்தன'' (36). எனவே, இத்தகைய காரணங்களின் நிமித்தம் அவிசுவாசி விசுவாசியை விட்டு பிரிந்துபோக விரும்பினால் அதற்கு விசுவாசி தடை விதிக்க வேண்டாம் என பவுல் கூறுகின்றார். எனினும், கொரிந்து சபையில் இரட்சிக்கப்படாதவர்கள் இரட்சிக்கப்பட்ட தம் துணையை வெறுப்பதற்கு ஏதுவாயமைந்த காரணங்கள் இன்றைய சமுதாயங்களில் பெரும்பாலும் இல்லை என்றே கூறவேண்டும். ஒருவர் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதனால் அவரோடு தொடர்ந்து வாழ முடியாது என மற்றவர் எண்ணி பிரிந்துபோனால் அப்படிப்பட்ட சூழ்நிலையில் சகோதரனாவது சகோதரியாவது அடிமைப்பட்டவர்கள் அல்ல என்கிறார் பவுல். ''தன்னோடு வாழ விரும்பாத அவிசுவாசியோடு விசுவாசியால் வாழ முடியாதிருப்பதனால், அவிசுவாசி பிரிந்துபோக விசுவாசி சம்மதிக்க வேண்டியதாயுள்ளது'' (35). எனினும், இவ்வாறு பிரிந்து போகுபவரோடு மறுபடியும் ஒப்புரவாகுவதற்கு விசுவாசி தன்னாலான முயற்சிகளை எடுக்க வேண்டுமேதவிர, அவர் மறுவிவாகம் செய்ய முற்படக்கூடாது. திருமண உறவின் மூலம் தன்னோடு ஒரே மாம்சமாகியவரை இரட்சிப்புக்குள் கொண்டுவர வேண்டியது இரட்சிக்கப்பட்டவருடைய தலையாய கடமை என்பதை மறுப்பதற்கில்லை. இதற்காக இரட்சிக்கப்பட்டவர் இரட்சிக்கப்படாதவரோடு தொடர்ந்து வாழ தன்னாலானமட்டும் முயற்சிக்க வேண்டும்.

பகுதி இரண்டு

மானிட விவாகரத்தும் தேவனின் விளக்கமும்

1. அது இருதயக்கடின மக்களுக்கு அனுமதிக்கப்பட்டது
2. அது இரண்டாவது மணவாழ்வுக்கு அனுமதிக்கப்பட்டது
3. அது இஸ்ரவேலரது கலாச்சாரத்தில் அனுமதிக்கப்பட்டது

மானிட திருமணத்திற்கான தேவனுடைய மகத்தான திட்டம், அது மரணம் வரை இருக்கவேண்டிய ஓர் உறவு என்பதேயாகும். மரணமேயன்றி வேறெதுவும் கணவனையும் மனைவியையும் பிரிக்கக் கூடாது என்பதே திருமணத்திற்கான தேவனுடைய திட்டமாயிருக்கின்றது. ''மனைவியானவள் தன்புருஷன் உயிரோடிருக்கும் காலமளவும் பிரமாணத்தினால் கட்டப்பட்டிருக்கிறாள்'' *(1கொரி. 7:39)* என கூறும் வேதம், ''புருஷனையுடைய ஸ்திரீ, தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள். புருஷன் மரித்த பின்பு புருஷனைப் பற்றிய பிரமாணத்தினின்று விடுதலையாயிருக்கிறாள்'' (ரோ.7:2) என அறியத்தருகின்றது. இதிலி

ருந்து திருமணம் மரணத்தினால் மட்டுமே பிரிக்கப்படக் கூடிய ஓர் உறவு என்பது தெளிவாகின்றது. தேவனே மண மக்களை திருமணத்தில் ஒன்றாய் இணைப்பதினால், அவர் இணைத்ததை மனிதன் பிரிக்கக்கூடாது என்பதே தெய்விக சட்டமாயுள்ளது (மத். 19:6). ''தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன்'' என்று தேவன் நேரடியாகவே சொல்லி யுள்ளார் (மல்.2:16).

திருமணம் மரணம்வரை இருக்கவேண்டிய ஓர் உறவா யிருக்கையில், இன்றைக்குச் சிலர், கிறிஸ்தவர்களுக்கு விவா கரத்து அனுமதிக்கப்பட்டுள்ளதென தர்க்கிக்கின்றனர். இன்று,சில சபைகளில் விவாகரத்துக்கான அனுமதி கொடுக் கப்படுவதோடு, விவாகரத்து பெற்றவர்களுக்கு மறுவிவாக மும் செய்து வைக்கப்படுகின்றது. இதனால் பல கிறிஸ்தவர் கள் தமது மணவாழ்வுக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு, ஒரு புதிய விசுவாசியோடு ஒரு புதிய திருமணவாழ்வைத் தொடங்க விரும்புகின்றனர். எனவே, ஒரு கிறிஸ்தவகுடும் பத்தில் அதாவது, கணவன் மனைவி இருவருமே கிறிஸ்த வர்களாக இருக்கும்போது அவர்களுக்கு விவாகரத்துக்கான அனுமதி இருக்கின்றதா என, மானிட திருமணத்தைத் திட்டமிட்டுள்ள தேவன் தன்னுடைய வார்த்தையான வேதாகமத்தில் இதுபற்றி அறிவித்திருப்பவற்றை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

கிறிஸ்தவ கணவன் அல்லது மனைவி தன் துணை யோடு தொடர்ந்து மணவாழ்வில் இருக்க முடியாது என்று கண்டால், அவர்கள் விவாகரத்து செய்யலாம் என கூறுப வர்கள், வேதாகமத்திலுள்ள சில வசனங்களை முழுமையா கவும் சரியாகவும் புரிந்துகொள்ளாமல் இருக்கின்றனர். உண்மையில், வேதாகமத்தில் எந்த ஒரு இடத்திலும் ஒரு கிறிஸ்தவனுக்கு விவாகரத்து அனுமதிக்கப்படவில்லை. சில இடங்களில் சிலருக்கு கொடுக்கப்பட்ட விவாகரத்து அனுமதியை, அது எவர்களுக்கு, என்ன காரணத்திற்காக கொடுக்கப்பட்டது என்பதை அறியாமல், அதை கிறிஸ்தவர் களுக்கான அனுமதியாக கருதி, சிலர் கிறிஸ்தவ குடும்பங்க ளைப் பிரிக்கின்றனர். எனவே, நாம் இவ்விடயத்தில் மிகவும்

கவனமாயிருக்க வேண்டும். வேதாகமத்தில் ஒரு சில மனிதர்க்கு விவாகரத்து அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும், அவர்களுக்கு கொடுக்கப்பட்ட அனுமதியை இன்றைய கிறிஸ்தவர்களுக்கான அனுமதியாகக் கருதமுடியாது. இவற்றை இப்பகுதியில் ஆராய்ந்து பார்த்து, மானிட விவாகரத்துக்கு தேவன் எத்தகைய விளக்கம் கொடுக்கின்றாரென பார்ப்போம்.

1. இருதயக்கடின மக்களுக்கு அனுமதிக்கப்பட்டது

பரிசுத்த வேதாகமத்தில் விவாகரத்து அனுமதி பற்றி முதலில் இடம்பெறுவது உபாகமம் 24:1-4 இல் மோசேயினால் கொடுக்கப்பட்ட அனுமதியாகும். இயேசுகிறிஸ்து இதுபற்றி விளக்கும்போது, ''உங்கள் மனைவிகளைத் தள்ளி விடலாமென்று உங்கள் இருதயக்கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார். ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை'' என்று குறிப்பிட்டுள்ளார் (மத். 19:8). எனவே ''பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இருதயக்கடின மக்களுக்கு கொடுக்கப்பட்ட அனுமதியை பரிசுத்த ஆவியினால் இதயம் மாற்றப்பட்ட கிறிஸ்தவர்களுக்கான அனுமதியாக கருத முடியாது''(37). இதை முழுமையாக விளங்கிக்கொள்ள, இவ்வனுமதி பற்றி சரியாக அறிந்திருக்க வேண்டும்.

(அ) அனுமதியின் கட்டளை: இருதயக்கடின மக்களுக்கு அனுமதிக்கப்பட்ட விவாகரத்துக் கட்டளை உபாகமம் 24:1இல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ''ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாகம் பண்ணிக்கொண்டபின்பு, அவளிடத்தில் இலச்சையான காரியத்தைக் கண்டு அவள் மேல் பிரியமற்றவனானால், அவன் தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பி விடலாம்''. கணவன் தன் மனைவியை விவாகரத்து செய்யுமளவுக்கு அவளில் வெறுப்பை ஏற்படுத்திய ''இலச்சையான காரியம்'' என்ன என்பது பற்றி இக்கட்டளையில் ஒன்றும் சொல்லப்படவில்லை. இதனால் இது பற்றி பல ஊகங்கள் வேதவியாக்கியானிகள் மத்தியில் நிலவுகின்றன. சிலர் இதை ''பிள்ளை பெறமுடியாமலிருக்கும் சரீர குறைபாடு'' (25) என கருதுகின்றனர். எனினும், இவ்வசனத்தில் இலச்

சையான காரியம் என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள அதே வார்த்தையே உபாகமம் 23:14இல் ''அசுசியான காரியம்'' எனமொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மேலும், பழைய ஏற்பாட்டில் இவ்விரு இடங்களில் மட்டுமே இவ்வார்த்தை இடம்பெற்றுள்ளது. ''இலச்சையானகாரியம்'' என்பது, கணவன் மனைவியில் கண்ட அசுத்தமான காரியம் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது'' (38). எனவே பிள்ளை பெறமுடியாத நிலையை அசுத்தமான காரியம் என கூறுவது அர்த்தமற்றது.

இலச்சையான காரியம் என்பது அசுத்தமான காரியம் என்பதனால், சிலர் இதை விபசாரம் எனக் கூறுகின்றனர். எனினும், பழைய ஏற்பாட்டுக்காலத்தில் விபசாரக் குற்றத்துக்கு மரண தண்டனையே கொடுக்கபட்டமையினால், (லேவி. 20:10, உபா. 22:22-27) விபசாரம், விவாகரத்துக்குக் காரணமாயமையும் இலச்சையான காரியமாக இருக்கமுடியாது. இதனால், பெரும்பாலான வேதவியாக்கியானிகள் இதை, ''மனைவியின் நாணமற்றதும் பண்பற்றதுமான,பெண்ணின் சுபாவத்துக்கு முரணான நடத்தை'' (06)என்றும்,''ஒழுக்கக்கேடானதும் முறைகேடானதுமான பாலியல் பழக்கத்தோடு சம்பந்தப்பட்ட ஒரு காரியம்'' (39) என்றும் கூறுகின்றனர். ''விபசாரத்துக்கு மரண தண்டனை என்பதனால், மனிதர் தமது பாலியல் ஆசைகளை ஒழுக்கக்கேடான முறைகளில் பூர்த்தி செய்து கொள்கின்றனர். அப்படிப்பட்ட ஒரு முறைகேடே இங்கு இலச்சையான காரியம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது'' (38) ''இது, தேவனால் தடைசெய்யப்பட்ட தன்னினச் சேர்க்கை, அல்லது மிருகங்களுடனான பாலியல் போன்ற ஒரு முறைகேடான பழக்கமாக இருக்கலாம்'' (40) லேவி. 18:22-23). எது எப்படி இருந்தபோதிலும், கணவன் தன் மனைவியில் வெறுப்பேற்படும் அளவுக்கு அவளில் இலச்சையான காரியத்தைக் காணும்போது, அவனுக்கு அவளைத் தள்ளிவிட அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது என்பதே மோசே கொடுத்த விவாகரத்து கட்டளையாகும்.)

(ஆ) அனுமதியின் காரணம்: ''உபாகமம் 24:1 இல் மோசே விவாகரத்துக்கு கொடுத்த அனுமதியானது, அக்

கால மக்களது நிலைமை காரணமாக கொடுக்கப்பட்ட ஒரு மானிட அனுமதியே தவிர, அது, விவாகரத்துக்கான தெய்வீக கட்டளையல்ல''(02). உண்மையில் ''இவ்வனுமதி ஒரு கட்டளையாக கொடுக்கப்படாமல், அக்காலத்தில் இருந்த ஒரு செயலுக்கு ஒரு ஒழுங்குமுறையை ஏற்படுத்துவதற்காக கொடுக்கப்பட்ட ஒரு அனுமதியாகவே இருக்கின்றது'' (41). மோசேயின் காலத்தில் விவாகரத்து சாதாரணமாக நடைபெறும் ஒரு செயலாக இருந்தமையினால், அதற்கு சட்டரீதியான ஒழுங்குமுறை அவசியமானதாயிருந்தது'' (25).இதனால், கணவன் தன் மனைவியை வெறுமனே தள்ளிவிடாது, அவளுக்குத் தள்ளுதலின் சீட்டை எழுதிக்கொடுத்த பின்பே, தன் வீட்டை விட்டு அனுப்ப வேண்டும் எனும் கட்டளையை மோசே கொடுத்துள்ளார் (உபா. 24:1). அக்கால சமுதாயத்தில் திருமணமான பெண்கள் பொருளாதார ரீதியாக ஆண்களையே நம்பி வாழவேண்டியிருந்தது. கணவனால் தள்ளி விடப்படும் பெண் பொருளாதார ரீதியாக மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டாள். இதனால் அவள் மறுவிவாகம் செய்யவேண்டியது அவசியமாயிருந்தது. எனினும், ''தன் மனைவி மீது வெறுப்புற்று அவளைத் தள்ளிவிடும் கணவன், அவள் மறுவிவாகம் செய்வதை விரும்பாது அவளது புதிய திருமணத்தைத் தடுக்குமுகமாக, அவள் மீது உரிமைகோரி அவளது மறுவிவாகத்துக்கு பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திவிடுவான். கணவனால் தள்ளிவிடப்படும் பெண்களுக்கு ஏற்படும் இத்தகைய இக்கட்டான நிலையை அவதானித்த மோசே, அவர்களுக்கு சமுதாயத்தில் சட்ட ரீதியான பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே விவாகரத்துக்கான அனுமதியை கொடுத்தார்'' (41). இதனால்தான், கணவன் தன் மனைவியைத் தள்ளிவிடும்போது, தள்ளுதலின் சீட்டையும் கொடுக்க வேண்டும் என மோசே கட்டளையிட்டுள்ளார்.

தள்ளுதலின் சீட்டு என்பது, ஒருவன் தனது மனைவிக்கு, தான் அவளை விவாகரத்து செய்து விட்டதாக எழுதிக் கொடுக்கும் ஒரு பத்திரமாகும். ''இப்பத்திரத்தில், அவள் இனிமேல் தன்னுடைய மனைவி இல்லை என்றும்,

அவள் மீது இனிமேல் தனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், அவள் இனிமேல் தனக்கு எவ்விதத்திலும் கடமைப்பட்டவள் அல்ல என்றும் எழுதப்பட்டிருக்கும்'' (42). இதனால், கணவனால் தள்ளிவிடப்படும் மனைவியினால் இன்னுமொருவனைத் திருமணமுடிக்கக்கூடியதாயிருந்தது. உபாகமம் 24:2 இல், ''அவள் அவனுடைய வீட்டை விட்டுப்போன பின்பு வேறொருவனுக்கு மனைவியாகலாம்'' என்று சொல்லப்பட்டுள்ளது. ''எனவே, தள்ளுதலின் சீட்டைக்கொடுத்து மனைவியைத் தள்ளிவிடலாமென மோசே கூறியமைக்குக் காரணம், தள்ளிவிடப்படும் பெண்களுடைய சமுதாய நிலையைச் சீர்படுத்தி, அவர்களுக்கு சட்டரீதியாக சில உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கவேயாகும்'' (43) என்பதை மறுப்பதற்கில்லை.

ஒருவன் தன் மனைவியைத் தள்ளிவிட்ட பின், அவள், வேறு ஒருவனைத் திருமணமுடிப்பதைத் தடுத்து, அவள் தன் மனைவி என கணவன் உரிமை கோராமலிருப்பதற்காகவே தள்ளுதலின் சீட்டை எழுதிக்கொடுக்கும் முறையை மோசே அறிமுகப்படுத்தினார். இதனாலேயே உபாகமம் 24:4இல், ''அவளைத் தள்ளிவிட்ட அவளுடைய முந்தின புருஷன் அவளை சேர்த்துக் கொள்ளக்கூடாது'' என்று சொல்லப்பட்டுள்ளது. ''உண்மையில், மூலமொழியில் முதல் மூன்று வசனங்களும் இக்கட்டளைக்கு காரணமாயமையும் நிலைமை பற்றியே கூறுகின்றன'' (25). ''இப்பகுதி, விவாகரத்தை ஊக்குவிக்கவோ, இல்லையென்றால் அதை ஒரு கட்டளையாக்கவோ இல்லை. மாறாக, ஒரு கணவன், தான் தள்ளி விட்டவளை மறுபடியுமாக சேர்த்துக்கொள்ளக்கூடாது என்பதற்காகவே இக் கட்டளை கொடுக்கப்பட்டது'' (04). இதன் மூலம், கணவனால் தள்ளிவிடப்படுபவள் தனக்கு விருப்பமானவனை மறுவிவாகம் செய்துவாழ சட்டரீதியான உரிமையை மோசே அவளுக்கு கொடுத்துள்ளார். ''உண்மையில், மோசேயின் விவாகரத்து அனுமதி தள்ளிவிடப்பட்ட மனைவியின் இரண்டாவது திருமணத்துக்கு பாதுகாப்பளிப்பதற்காகவே கொடுக்கப்பட்டுள்ளது'' (44). எனவே, இதை இக்காலத்தைய விவாகரத்துக்கான அனுமதியாக எடுக்க முடியாது.

(இ) அனுமதியின் விளக்கம்: தள்ளிவிடப்படும் மனைவியின் நலன் கருதி மோசே விவாகரத்துக்குக் கொடுத்த அனுமதி, பிற்காலத்தில், யூதர்களால் தவறாக விளங்கிக் கொள்ளப்பட்டது. இயேசுகிறிஸ்துவினுடைய காலத்தில் ஷம்மாய், ஹிலெல் எனும் இரு யூத மதப்போதகர்களது விவாகரத்து பற்றிய கருத்துக்கள் மிகவும் பிரபல்யம் பெற்றிருந்தன. ஷம்மாய் என்பார், உபாகமம் 24:1 இலுள்ள இலச்சையான காரியத்துக்கு விபசாரம் என விளக்கம் கொடுத்து, மனைவியின் ஒழுக்கக்கேடான நடத்தை காரணமாக கணவன் அவளை விவாகரத்து செய்யலாம் என போதித்தார். ஆனால், ஹிலெல் என்பார், மனைவியின் மீது கணவனுக்கு வெறுப்பேற்படும் எந்தச் செயலும் விவாகரத்துக்கு காரணமாயமையலாம் என போதித்தார். இவ்விரு கருத்துக்களும் இயேசுகிறிஸ்துவின் காலத்தில் சர்ச்சைக்குரியனவாய் இருந்தமையினால், இயேசுகிறிஸ்து இதில் எக்கருத்தை ஏற்றுக்கொள்கிறார் என்பதை அறிந்துகொள்வதற்காக பரிசேயர்கள் அவரிடத்தில் வந்து, ''புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா'' என்று கேட்டார்கள் (மத். 19:3). ஆனால் இயேசுகிறிஸ்துவோ, யூதர்களுடைய இருவித விளக்கங்களுக்கும் எதிராக, ''தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றே சொன்னார்'' (மத். 19:6). இதனால் பரிசேயர்கள் அவரிடம், ''அப்படியானால் தள்ளுதல் சீட்டைக் கொடுத்து அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார் என்றார்கள்'' (மத். 19:7). மனைவியைத் தள்ளிவிட மோசே அனுமதி கொடுத்தது உண்மை என்பதை இயேசுகிறிஸ்து ஏற்றுக்கொண்டாலும் (மத். 5:31), அவர், ''உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதயக்கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார். ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை'' என்றே கூறினார் (மத். 19 : 8). இதிலிருந்து அக்கால மனிதர்களுடைய இருதயக்கடினம் காரணமாகவே மோசே விவாகரத்துக்கு அனுமதி கொடுத்துள்ளார் என்பது தெளிவாகின்றது. ''மோசேயின் காலத்தில், விவாகரத்துக்கு காரணமாயமைந்தது,

இருதயக்கடினமுள்ள மக்களது பாவமே தவிர, அது தேவ னுடைய திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கவில்லை''(40).

திருமணத்துக்கான தேவதிட்டத்தில் விவாகரத்துக்கு இடமில்லையாயின் மோசே கொடுத்த அனுமதி நியாய மானதா என நாம் கேட்கலாம். ஆனால், ''மனைவி மீது வெறுப்புற்று அவளைத் தள்ளிவிட தீர்மானித்துள்ள இருத யக்கடினமுள்ள மனிதனுக்கு, அதற்கான அனுமதி மறுக் கப்பட்டால், அவன் அவளைத் துன்புறுத்தலாம்; அல்லது அவள் மீது அபாண்டமாக பழிசுமத்தி அவளைத் துரத்தி விடலாம்; இல்லையென்றால் அவளைக் கொலையே செய் துவிடலாம் என்பதனாலேயே, மோசே விவாகரத்துக்கான அனுமதியைக் கொடுத்தார்'' (45). மோசேயின் அனுமதி கணவனினது வெறுப்புக்குட்பட்ட மனைவியருக்கு விடுத லையையும் பாதுகாப்பையும் ஏற்படுத்துவதற்காகவே கொடுக்கப்பட்டுள்ளமையினால், அதை இன்றைய கிறிஸ்த வர்களுக்கான அனுமதியாக எடுக்கமுடியாது. ''அது இரு தயக்கடின மக்களுக்கு கொடுக்கப்பட்ட அனுமதியே தவிர கிறிஸ்தவர்களுக்கான அனுமதியல்ல'' (37). மேலும், நாம் இப்போது மோசேயின் நியாயப்பிரமாணத்துக்கு கீழான வர்கள் அல்ல (ரோ. 6:14). இயேசுகிறிஸ்து நியாயப்பிரமா ணத்தின் முடிவாயிருக்கிறார் (ரோ. 10:4). அது யோவா னுடைய காலம் வரைக்குமே வழங்கி வந்தது(லூக்.16:16). இயேசுகிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் சாபத்துக்கு நீங்க லாக்கி நம்மை மீட்டுக்கொண்டுள்ளார் (கலா.3:13,4:4). பரிசுத்தாவியானவரினால் நடத்தப்படுகிறவன் நியாயப்பிர மாணத்துக்குக் கீழானவன் அல்ல (கலா 5:18). எனவே, மோசேயின் நியாயப்பிரமாணத்தில் கொடுக்கப்பட்ட அனு மதி, பரிசுத்தாவியினால் வழிநடத்தப்படும் கிறிஸ்தவனுக் கானதல்ல என்பது தெளிவாகின்றது.

நியாயப்பிரமாணக் காலத்தில் கணவனால் தள்ளி விடப்பட்ட பெண் மறுவிவாகம் செய்ய அனுமதிக்கப்பட் டிருப்பினும் (உபா. 24:2) புதிய ஏற்பாட்டில் அத்தகைய மறுவிவாகம் விபசாரமாகவே கருதப்பட்டுள்ளது (மாற். 10:11,12, லூக். 16:18,ரோம, 7:3). எனவே, இன்றைய

கிறிஸ்தவர்கள் இருதயக்கடின மக்களுக்கு கொடுக்கப்பட்ட அனுமதியை ஆதாரமாய்க் கொண்டு விவாகரத்து பெற முடியாது. "மோசே கொடுத்த அனுமதி தற்காலிகமானது. அது என்றைக்கும் உள்ள கட்டளை அல்ல. மாறாக, மானிட பாவத்தினால் அனுமதிக்கப்பட்டதொன்றாகும். இதை விவாகரத்துக்கான தேவனுடைய அனுமதியாக எடுக்க முடியாது" *(46)*. ஏனென்றால், "திருமணத்துக்கான தேவ திட்டத்தில் விவாகரத்து ஒரு அம்சமாக இருக்கவில்லை" *(37)*. "திருமணத்தில் தேவனே தம்பதியரை ஒன்றாய் இணைப்பதினால், விவாகரத்து மூலம் அவர்களைப் பிரிப்பது தேவனது செயலுக்கு எதிரான செயலாயிருப்பதை மறுப்பதற்கில்லை" *(47)*.

2. இரண்டாவது மணவாழ்வுக்கு அனுமதிக்கப்பட்டது

பழைய ஏற்பாட்டில் விவாகரத்துக்கு ஆதாரமாக சுட்டிக்காட்டப்படும் இரண்டாவது பகுதி, எஸ்றாவின் மார்க்க சீர்திருத்த காலத்தில் நடைபெற்ற ஒரு சம்பவமாகும். பாபிலோனிலிருந்து எருசலேமுக்குத் திரும்பி வந்த யூதர்களில் சிலர், தேவனை அறியாத புறஜாதிப் பெண்களைத் திருமணமுடித்தனர் *(எஸ்.9:1,2)*. இது தேவனுடைய கட்டளைக்கு விரோதமான பாவம் என்பதை அறிந்திருந்த எஸ்றா, அவர்களுடைய குற்றங்களுக்காகத் தேவனிடம் அழுது மன்றாடியதோடு, *(எஸ்.9:10)* தேவனை அறியாத ஜாதியினரைத் திருமணமுடித்திருந்தவர்களுக்கு, அவர்களது புறஜாதி மனைவிகளை அவரவர்களுடைய தேசங்களுக்கு அனுப்பிவிடும்படி கட்டளையிட்டார். *(எஸ். 10:1-5)* எஸ்றா ஜனங்களிடம், "நீங்கள் இஸ்ரவேலின் மேலிருக்கிற குற்றத்தை அதிகரிக்கப்பண்ண மறு ஜாதியான ஸ்திரீகளை விவாகம் பண்ணினதினால் பாவஞ்செய்தீர்கள். இப்பொழுதும் நீங்கள் உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரிடத்தில் அறிக்கையிட்டு, அவருடைய பிரியத்தின்படியே செய்து தேசத்தின் ஜனங்களையும் மறுஜாதியான ஸ்திரீகளையும் விட்டுவிலகுங்கள்" என்று கட்டளையிட்டார் *(எஸ்,10:10,11)*. எஸ்றாவின் இக்கட்டளையை சிலர் சரியாக விளங்கிக்கொள்ளாமல், இன்றைக்கு

ஒரு கிறிஸ்தவன் இரட்சிக்கப்படாத தன் மனைவியை, அல்லது ஒரு கிறிஸ்தவள் இரட்சிக்கப்படாத தன் கணவனை விவாகரத்து செய்யலாம் என கூறுகின்றனர். எனினும், எஸ்றா எத்தகைய மக்களுக்கு,எதற்காக இக்கட்டளையைக் கொடுத்துள்ளார் என்பதை அறிந்திடும்போது, எஸ்றாவின் கட்டளையும், இன்றைய கிறிஸ்தவர்களுக்கான விவாகரத்து அனுமதி அல்ல என்பதைக் கண்டிடலாம்.

(அ) கட்டளைக்கு கட்டுப்படவேண்டியவர்கள்: எஸ்றாவின் கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டியவர்கள் அந்நிய ஜாதிப் பெண்களை மணமுடித்தவர்கள் என்பது உண்மையாயினும், அவர்கள் தம் சொந்த மனைவியரைத் தள்ளிவிட்டு அந்நிய பெண்களை மனைவியாக்கிக் கொண்டிருந்தவர்களாவர். ''சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்களில் சிலர்,தாம் இளவயதில் மணமுடித்த மனைவியர் சரீர அழகை இழந்து போனமையினால், அவர்களைத் தள்ளிவிட்டு அழகிய அந்நிய ஜாதிப்பெண்களைத் திருமண முடித்ததாக யூத மதப்போதகர்கள் குறிப்பிட்டுள்ளனர்'' (48). எஸ்றாவினுடைய சீர்திருத்தப்பணிக்குச் சற்று முன்பு தீர்க்கதரிசன ஊழியம் செய்த மல்கியா இது பற்றித் தனது நூலில் எழுதியுள்ளார். ''யூதா ஜனங்கள் துரோகம் பண்ணினார்கள். இஸ்ரவேலிலும் எருசலேமிலும் அருவருப்பான காரியம் செய்யப்பட்டது. கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்தை யூதா ஜனங்கள் பரிசுத்த குலைச்சலாக்கி அந்நிய தேவதையின் குமாரத்திகளை விவாகம் பண்ணினார்கள்'' என கூறும் மல்கியா, ''கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கின்றார். உன் தோழியும், உன் உடன்படிக்கையின் மனைவியுமான அவளுக்கு நீ துரோகம் பண்ணினாயே'' என்று குறிப்பிட்டுள்ளார் (மல். 2: 11,14).

''யூதர்கள் இளவயதின் மனைவிக்குத் துரோகம் பண்ணினார்கள் என மல்கியா கூறுவது, அவர்கள் தாம் இளவயதில் மணமுடித்த மனைவிகளைத் தள்ளிவிட்டதைப் பற்றியேயாகும்'' (49). எனவே, எஸ்றாவின் கட்டளைக்கு கட்டுப்பட வேண்டியிருந்த யூதர்கள், இரண்டு பாவங்

களை செய்திருந்தனர். ஒன்று, அவர்கள் தாம் இளவயதில் திருமணமுடித்த மனைவியைத் தள்ளிவிட்டிருந்தனர். இது கர்த்தர் வெறுக்கும் காரியம் என மல்கியா குறிப்பிட்டுள்ளார் (மல்.2:16). இரண்டு, அவர்கள் தேவ கட்டளைக்கு எதிராக (உபா, 7:1-3, எஸ். 9:1,2,12) அந்நிய பெண்களைத் திருமணமுடித்திருந்தனர். எனவே எஸ்றாவின் கட்டளை, தம் மனைவியைத் தள்ளிவிட்டு வேறு பெண்களோடு வாழ்ந்தவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளதே தவிர,இன்றைய கிறிஸ்தவர்களுக்கல்ல என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

(ஆ) கட்டளைக்கு காரணமாயமைபவைகள்: எஸ்றாவின் மார்க்க சீர்திருத்தப் பணியே, அவர் அந்நிய பெண்களை அனுப்பிவிடும்படி கட்டளையிட்டமைக்கு காரணமாயமைந்தது. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள், தேவனுடைய கட்டளைகளின்படி வாழவேண்டும் என்பதில் உறுதியாயிருந்த எஸ்றா, அவர்களுடைய மார்க்க வாழ்வை சீர்திருத்த பல நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இவற்றுள் ஒன்றே அந்நிய பெண்களை அனுப்புவதாகும். ''அக்காலத்தில் மொத்தம் 28,774 பேர் எருசலேமுக்குத் திரும்பி வந்திருந்தனர். இவர்களில் 111பேர் இளவயதில் தாம் மணமுடித்த மனைவியைத் தள்ளிவிட்டு அந்நிய பெண்களோடு வாழ்ந்து வந்தனர்'' (48). மட்டுமல்ல, ''இவர்கள் தமது புறமத மனைவிகளோடு பாவத்திலேயே வாழ்ந்தனர்'' (50). மனைவியைத் தள்ளிவிட்டு இன்னுமொரு பெண்ணுடன் வாழ்வது இவர்களுடைய பிரதான பாவமாயிருந்தது (லூக். 16:18). அதே சமயம், ''அந்நிய மனைவிகளுடைய தெய்வ வழிபாடுகளிலும் பழக்கவழக்கங்களிலும் இவர்கள் ஈடுபட்டனர் (49). எனவே, இவர்கள் அந்நிய பெண்களோடு தொடர்ந்தும் இருந்தால், ''முழுச்சமுதாயமுமே தேவனை விட்டு வழிவிலகிப் போய்விடும் என்பதனாலேயே,எஸ்றா அந்நிய பெண்களை அனுப்பும்படி கட்டளையிட்டார்'' (51). மேலும், அந்நிய பெண்களை அனுப்பிய தன் பின், அவர்கள் தாம் தள்ளிவிட்ட மனைவியோடு ஒப்புரவாக வேண்டும் எனும் நோக்கத்தையும் எஸ்றாவின் கட்டளைக்கான காரணமாக நாம் கருதலாம். எனவே,

எஸ்றாவின் கட்டளை, சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த யூதர்களுடைய பாவ வாழ்வான இரண்டாவது மண வாழ்வுக்கு கொடுக்கப்பட்டுள்ளமையினால், அதை இன்றைய கிறிஸ்தவர்களுக்கான அனுமதியாக எடுக்கமுடியாது.

3. இஸ்ரவேலரது கலாச்சாரத்தில் அனுமதிக்கப்பட்டது

இன்று பெரும்பாலான கிறிஸ்தவர்களால் விவாகரத்து அனுமதிக்கு ஆதாரமாக காட்டப்படுவது, இயேசுகிறிஸ்து விவாகரத்தைப் பற்றி போதித்த விடயமேயாகும். மத்தேயு எழுதிய சுவிசேஷத்தில் இரண்டு தடவைகள் இடம் பெறும் இவ்வசனம், விபசார பாவம் விவாகரத்துக்கான காரணமாக இயேசுகிறிஸ்துவால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளதாக பொதுவாக நம்பப்படுகின்றது. இயேசுகிறிஸ்து விவாகரத்து பற்றிய பரிசேயரது கேள்விக்கு பதிலளிக்கும் போது, ''எவனாகிலும் தன் மனைவி வேசித்தனம் செய்ததினிமித்தமேயன்றி அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால் அவன் விபசாரம் செய்கிறவனாயிருப்பான்'' என்று சொன்னார் (மத். 19:9). இயேசுகிறிஸ்துவினுடைய மலைப்பிரசங்கத்திலும் இதேவிதமாக சொல்லப்பட்டுள்ளது (மத்.5:32). இவ்வசனத்தை வாசிக்கும்போது, மனைவி வேசித்தனம் செய்தால் கணவன் அவளைத் தள்ளிவிடலாம் என்பதை அறிந்திடுவோம். எனினும், வேசித்தனம் காரணமாக கொடுக்கப்பட்ட விவாகரத்து அனுமதியும் இன்றைய கிறிஸ்தவர்களுக்கான அனுமதி அல்ல. அது, இஸ்ரவேலரது கலாச்சாரத்துக்கு மட்டும் கொடுக்கப்பட்ட அனுமதியாகும். இதை விளங்கிக் கொள்வதற்கு நாம் ஒருசில விடயங்களை அறிந்திருக்க வேண்டும்.

(அ) இது மத்தேயுவில் மட்டும் இடம்பெறும் வாக்கியம்: வேசித்தனம் செய்தால் விவாகரத்து பெறலாம் எனும் கருத்தைத் தரும் வாக்கியம், மத்தேயு எழுதிய சுவிசேஷத்தில் மட்டுமே இடம் பெற்றுள்ளது என்பதை நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். மத்தேயு யூதர்களுக்கே தன்னுடைய சுவிசேஷத்தை எழுதினார். புறஜாதி கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்ட மாற்கு சுவிசேஷத்தில் மத்தேயு 19:3-9இல்

குறிப்பிடப்பட்டுள்ள சம்பவம் இடம் பெற்றுள்ளபோதிலும் (மாற் 10:4-12) வேசித்தனம் காரணமாக விவாகரத்து செய்யலாம் எனும் வாக்கியம் மாற்குவால் எழுதப்பட வில்லை. லூக்காவின் சுவிசேஷத்திலும் இவ்விதமாகவே இயேசுகிறிஸ்துவின் போதனை உள்ளது (லூக். 16:18). இதிலிருந்து, ''வேசித்தனம் செய்ததினிமித்தமே'' எனும் வாக்கியம், மத்தேயுவில் மட்டும் இடம் பெறும் தனித்துவ மான வாக்கியம் என்பதை அறிந்து கொள்ளக்கூடியதா யுள்ளது. ''மத்தேயு யூதர்களுக்குத் தனது சுவிசேஷத்தை எழுதியமையினால் அவர்களுக்கு அவசியமான பல விடயங் களையும் தனது நூலில் எழுதியுள்ளார்'' (40). ஆனால், அவ்விடயங்கள் புறஜாதி கிறிஸ்தவர்களுக்கு அவசியமற்ற தாயிருந்தமையினால், புறஜாதி மக்களுக்கு எழுதப்பட்ட சுவிசேஷங்களில் அவை இடம்பெறவில்லை. இதனால்தான், இஸ்ரவேலிய கலாச்சாரத்தின்படி வாழ்ந்த யூத மக்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த விவாகரத்து பற்றி புறஜாதி மக்க ளுக்கு எழுதப்பட்ட சுவிசேஷங்களில்குறிப்பிடப்படவில்லை. இதிலிருந்து, மத்தேயு சுவிசேஷம் நமக்கானதல்ல எனும் முடிவுக்கு நாம் வரலாகாது. அது நமக்காகவும் எழுதப்பட் டிருப்பினும், மத்தேயு தனது சுவிசேஷத்தை யூதர்களுக்கு எழுதியமையினால், அவர்களுக்கு அவசியமான சில விட யங்களையும் சேர்த்துள்ளார். மற்ற சுவிசேஷ எழுத்தாளர் கள் அவற்றை எழுதாமல் விட்டுள்ளனர் என்பதை நாம் மறக்கலாகாது.

மத்தேயுவின் சுவிசேஷத்தில் யூதர்களுக்கு மட்டும் உள்ள விடயங்களும் சேர்க்கப்பட்டுள்ளதற்கு ஆதாரமாக இன்னுமொரு உதாரணத்தைப் பார்ப்போம். எருசலேம் மற்றும் உலக அழிவு பற்றி இயேசுகிறிஸ்து அறிவித்தவை மத்தேயு 24ம் அதிகாரத்திலும் மாற்கு 13ஆம் அதிகாரத் திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மத்தேயுவில் உள்ள, ''நீங் கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது ஓய்வு நாளிலா வது சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள்'' எனும் வசனம் (மத்.24:20) மாற்கு சுவிசேஷத்தில், ''நீங்கள் ஓடிப்போவது மாரி காலத்திலே சம்பவியாதபடிக்கு வேண் டிக்கொள்ளுங்கள்'' என்றே உள்ளது (மாற். 13:18). இவ்

விரு வசனங்களையும் அவதானித்துப் பார்க்கும்போது, மத்தேயுவில் இடம் பெற்ற ''ஓய்வுநாள்'' எனும் பதம், மாற்குவில் இல்லாதிருப்பதைக் கண்டிடலாம். யூதர்கள் ஓய்வு நாள் கட்டளையைக் கடுமையாக கைக்கொண்டு வந்தமையினால், அவர்கள் ஓய்வுநாளில் ஓடிப்போவது சாத்தியப்படாது. எனவே, அவர்களுக்கு மாரி காலம் மட்டுமல்ல ஓய்வு நாளும் ஓடிப்போவதற்கு அசௌகரியமான நாளாகவே இருக்கும். ஆனால், புறஜாதியார் ஓய்வு நாள் கட்டளையை கைக்கொள்ளாதமையினால், ஓய்வுநாளில் ஓடிப்போவது அவர்களுக்கு சிரமமாயிராது என்பதனால், மாற்குவில் ஓய்வுநாள் எனும் வார்த்தை சேர்க்கப்படவில்லை. இதேபோலவே, வேசித்தனம் செய்ததினிமித்தமே எனும் பதம் மத்தேயுவில் மட்டும் இடம் பெற்றுள்ளமையினால், வேசித்தனத்துக்கான விவாகரத்து யூதர்களுக்கு மட்டும் அனுமதிக்கப்பட்டதொன்று என்பது தெளிவாகின்றது.

(ஆ) இது மணமுடிக்காத மனிதரது பாலியல் பாவமாகும்: இயேசுகிறிஸ்து கொடுத்த விவாகரத்து அனுமதி இஸ்ரவேலரது கலாச்சாரத்தின்படி வாழ்பவர்களுக்கானது என்பதை விளங்கிக்கொள்வதற்கு, வேசித்தனம் மணமுடிக்காத மனிதரது பாலியல் பாவம் என்பதையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும். ''யூத மக்களது கலாச்சாரத்தில் வேசித்தனம் விபசாரம் என்பன இருவகையான பாவங்களாகும்''(52). இதனால் மூலமொழிகளில் இவற்றுக்கு ஒரே வார்த்தை உபயோகிக்கப்படவில்லை. பழைய ஏற்பாட்டில் வேசித்தனம் என்பதற்கு 'ஸானா' எனும் எபிரேய பதமும் விபசாரத்துக்கு 'நாஆப்' எனும் எபிரேய பதமும் உபயோகிக்கப்பட்டுள்ளன. ''திருமண உறவுக்குள் வராதவனுடைய பாலியல் பாவம் வேசித்தனம் என்றும், திருமண உறவுக்குள் வந்தவனுடைய பாலியல் பாவம் விபசாரம் என்றும் அழைக்கப்பட்டது'' (53). ''இவை இரண்டும் வெவ்வேறு வகையான பாவங்களாயிருந்தமையினாலேயே, வெவ்வேறு வகையான தண்டனைகள் அக்காலத்தில் கொடுக்கப்பட்டன. அதாவது, வேசித்தனத்துக்கு விவாகரத்தும் விபசாரத்துக்கு மரண தண்டனையும் கொடுக்கப்பட்டது'' (52). புதிய ஏற்பாட்டிலும் வேசித்தனம் விபசாரம் என்பவை

இவ்விதமாக வேறுபடுத்தப்பட்டுள்ளது. மத்தேயு 15:19, கலாத்தியர் 5:19 போன்ற வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பாவங்களில், வேசித்தனம் விபசாரம் என்பன வெவ்வேறு வகையான பாவங்களாகவே உள்ளன.

புதிய ஏற்பாட்டில் ''ஃபோர்னியா'' எனும் கிரேக்க பதம் வேசித்தனத்திற்கும், ''மொய்க்கியா'' எனும் பதம் விபசாரத்துக்கும் உபயோகிக்கப்பட்டுள்ளது. மத்தேயு 19:9 இல் இவ்விரண்டு பதங்களையும் நாம் அவதானிக்கலாம். ''எவனாகிலும் தன் மனைவி வேசித்தனம் (ஃபோர்னியா) செய்ததினிமித்தமேயன்றி அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால் அவன் விபசாரம் (மொய்க்கியா) செய்கிறவனாயிருப்பான்'' என இயேசுகிறிஸ்து இரு வார்த்தைகளையும் உபயோகித்துள்ளார். ''புதியஏற்பாட்டில், ஃபோர்னியா எனும் பதம் எல்லாவகையான பாலியல் பாவங்களையும் குறிக்கவும் உபயோகிக்கப்பட்டிருப்பினும், இவ்விடத்தில் இயேசுகிறிஸ்து விபசாரம் எனும் வார்த்தையை முதல் வரியில் உபயோகிக்காமல், முதலில் வேசித்தனம் எனும் வார்த்தையையும், பின்பு விபசாரம் எனும் வார்த்தையையும் உபயோகித்துள்ளமை, அவர், பழைய ஏற்பாட்டுக் காலத்தின்படி இரண்டையும் வெவ்வேறு வகையான பாவங்களாகவே கருதியுள்ளார் என்பது தெளிவாகின்றது'' (53). எனவே, இயேசுகிறிஸ்து, திருமண உறவுக்குள் வந்தவனுடைய விபசாரத்துக்கல்ல, மாறாக, திருமண உறவுக்குள் வராதவர்களுடைய வேசித்தனத்துக்கே விவாகரத்துக்கான அனுமதியைக் கொடுத்துள்ளார் என்பதை மறுப்பதற்கில்லை.

(இ) இது மணவாழ்வின் முழுமைக்குள் வராதவருக்கான அனுமதியாகும்: வேசித்தனமும் விபசாரமும் வெவ்வேறு வகையான பாலியல் பாவங்களாயிருப்பதனால், விவாகரத்துக்கு காரணமாயமையும் பாவமாக இயேசுகிறிஸ்துவால் சொல்லப்பட்ட வேசித்தனம், மணவாழ்வின் முழுமைக்குள் வராதவர்களது பாலியல் பாவமாகவே உள்ளது. எனவே, மணவாழ்வின் முழுமைக்குள் வராதவர்களுக்கே வேசித்தனம் காரணமாக விவாகரத்து செய்ய

லாம் என இயேசுகிறிஸ்து கூறியுள்ளார். ''இயேசுகிறிஸ்துவின் விவாகரத்து அனுமதியை சரியான விதத்தில் விளங்கிக்கொள்ளவேண்டுமாயின், நாம், யூத மக்களது திருமண வைபவ முறைகளை அறிந்திருக்க வேண்டும். அப்போது, வேசித்தனம் எப்படி விவாகரத்துக்கு காரணமாயமையும் என்பதை நம்மால் புரிந்துகொள்ளமுடியும்'' (52). ''இஸ்ரவேல் மக்களுடைய யூத கலாச்சாரத்தில், திருமணம் இரு முக்கிய வைபவங்களைக் கொண்டிருந்தது. ஒன்று நிச்சயதார்த்தம், மற்றது திருமணம். இரண்டுக்கும் இடையே ஒருவருட கால இடைவெளி இருக்கும். நிச்சயதார்த்தத்தின் போது மணமக்களின் பெற்றோர் பரிசுப்பொருட்களை பரிமாறிக்கொள்வதோடு, அவர்களால் ஒரு பத்திரமும் கையெழுத்திடப்படும். இவ்வைபவமானது சட்டரீதியாக மணமக்களை கணவன் மனைவியாக இணைத்துவிடும். எனினும், அவர்கள் தமது திருமணம்வரை ஒன்றாக வாழ்வதில்லை. திருமணம் வரை அவர்கள் தத்தமது பெற்றோருடனேயே இருப்பார்கள்'' (54). எனவே, யூத கலாச்சாரத்தில், நிச்சயதார்த்தம் நடைபெற்றபின் மணமக்கள் சட்டரீதியாக கணவன் மனைவியாக கருதப்பட்டாலும் திருமணம் வரை அவர்கள் ஒன்றாய் வாழாததினால், அதுவரையில் அவர்களுடைய மணவாழ்வு முழுமையடையாமலேயே இருக்கும். ''நிச்சயதார்த்தத்திற்கும் திருமணத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் இருவரும் பாலுறவில் ஈடுபட அனுமதிக்கப்படுவதில்லை. அதே சமயம் அவர்கள் தமது திருமணம் முழுமையடையும் வரை ஒருவருக்கொருவர் உண்மையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்''(52).

விவாகரத்துக்கு காரணமாயமையும் பாவமாக இயேசுகிறிஸ்து குறிப்பிட்ட வேசித்தனம் யூத மக்களுடைய கலாச்சாரத்தில், மணமுடிக்காத மக்களுடைய பாலியல் பாவம் என்பதையும், அவர்களுடைய திருமண முறையையும் அறிந்து கொண்ட நம்மால், இப்போது, இயேசுகிறிஸ்துவின் கூற்றை சரியாக விளங்கிக்கொள்ள முடியும். நிச்சயதார்த்தம் செய்து கொண்டவர்களுடைய திருமணம், அவர்களது மணவாழ்வு வரை முழுமை பெறாமலிருப்பதனால், அவர்கள் அக்காலத்தில் இன்னுமொருவருடன்

பாலுறவில் ஈடுபட்டால், அது விபசாரமாக அல்ல வேசித்தனமாகவே கருதப்படும். அவர்களது மணவாழ்வு முழுமை பெற்றதன்பின், அதாவது, இருவரும் ஒன்றாக வாழத்தொடங்கியதன்பின், ஒருவர் வேறு ஒருவரோடு தொடர்பு வைத்திருந்தால் அதுவே விபசாரமாக இருக்கும். இயேசுகிறிஸ்து விபசாரத்துக்கு விவாகரத்து அனுமதி கொடுக்கவில்லை. மாறாக, வேசித்தனத்துக்கே விவாகரத்து செய்ய அனுமதி கொடுத்துள்ளார்.

''யூத கலாச்சாரத்தில் நிச்சயதார்த்தம் செய்துகொண்டவர்கள், திருமணத்தின்போது பாலுறவின் மூலம் தமது மணவாழ்வின் முழுமைக்குள் வருவதற்கு முன், ஒருவர் மற்றவருக்கு துரோகமிழைத்து வேறொருவருடன் சென்றால் அவரைத் தள்ளிவிட இயேசுகிறிஸ்து அனுமதித்துள்ளார்'' (52). இதற்கு காரணம், பாலுறவின் மூலம் இருவரும் ஒரே மாம்சமாகும்போதே அவர்களது திருமணம் முழுமைபெறுவதேயாகும். அதற்கு முன்னர் அவர்கள் யூதகலாச்சாரத்திலேயே சட்டரீதியான கணவன் மனைவியாக கருதப்படுகிறார்களே தவிர, உண்மையில் அவர்கள் கணவன் மனைவியாக வாழத்தொடங்கவில்லை. ''இயேசுகிறிஸ்து திருமண உறவுக்குள் வந்த கணவனுக்கும் மனைவிக்கும் விவாகரத்துக்கு அனுமதி கொடுக்கவில்லை'' (52). ஒருவன் தன் மனைவியைத் தள்ளிவிட்டு, இன்னுமொருத்தியை மணமுடித்தால், அதை விபசாரம் என்றே அவர் கூறியுள்ளார் (லூக். 16:18). எனினும், ''யூத கலாச்சாரத்தில், நிச்சயதார்த்தம் மணமக்களை சட்டரீதியான கணவன் மனைவியாக இணைப்பதனால், வேசித்தனம் காரணமாக ஒருவர் மற்றவரைத் தள்ளிவிட சட்டரீதியான விவாகரத்து அவசியமாயிருந்தது'' (55). இதையே இயேசுகிறிஸ்து அனுமதித்துள்ளார். எனவே, இதை திருமண உறவுக்குள் இருக்கும் கிறிஸ்தவ கணவன் மனைவிக்கான விவாகரத்து அனுமதியாக கருதமுடியாது. இவ்வனுமதி, மத்தேயு சுவிசேஷத்தில் மட்டும் இடம்பெறுவதும், இது யூதர்களுக்கு மட்டுமான, அவர்களுடைய கலாச்சாரத்தில் நிச்சயதார்த்தத்திற்கும் திருமணத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் இடம்பெறும் வேசித்தனத்துக்கான விவாகரத்து அனுமதியாகவே இருக்கின்றது.

திருமணம் ஆயுள்முழுவதும் இருக்கவேண்டிய உறவாயிருப்பதனால், கிறிஸ்தவ விசுவாசிகள் தமது இல்லற வாழ்வில் விவாகரத்தைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இருவேறுபட்ட குடும்பப்பின்னணியிலிருந்து வந்த, வித்தியாசமான வாழ்க்கைமுறையைப் பின்பற்றிய இருவர் திருமணத்தில் இணையும்போது, அவர்களுக்கிடையே சில சந்தர்ப்பங்களில் கருத்து முரண்பாடுகளும் சிறு சிறு சண்டைகளும் ஏற்படுவது இயற்கையே. எனினும், கிறிஸ்தவ கணவனும் மனைவியும் தமது பிரச்சனைகளைத் தீர்த்துக்கொண்டு ஒற்றுமையாக வாழமுற்பட வேண்டுமே தவிர, அவர்கள், தமது பிரச்சனைகளுக்குத்தீர்வு விவாகரத்து எனும் முடிவுக்கு வரக்கூடாது. அது, தேவன் வெறுக்கும் ஒரு காரியம் *(மல்.2:16)*. திருமணத்துக்கான தேவ திட்டத்தில் விவாகரத்து ஒரு அம்சமாக இராததினால், கிறிஸ்தவர்களுக்கு விவாகரத்துக்கான அனுமதி கொடுக்கப்படவில்லை. பழைய ஏற்பாட்டில் மோசே கொடுத்த அனுமதி மனைவி மீது வெறுப்புற்ற இருதயக்கடின மக்களுக்கானது *(உபா. 24:1-4, மத். 19:8)*. எஸ்றா கொடுத்த அனுமதி, மனைவியைத்தள்ளிவிட்டு தேவனை அறியாதவர்களைத் திருமண முடித்த, இரண்டாவது மணவாழ்வில் இருந்தவர்களுக்கானது *(எஸ். 10:10-11)*. அதேபோல, புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்து கொடுத்த அனுமதி, இஸ்ரவேல் மக்களுடைய கலாச்சாரத்தில் வாழ்பவர்களுக்கானது *(மத். 19:9)*. மேலும், பவுல், *1 கொரிந்தியர் 7:15* இல் ''அவிசுவாசி பிரிந்துபோனால் பிரிந்து போகட்டும் என, அவிசுவாசிகளுக்கே விவாகரத்துக்கான அனுமதி கொடுத்துள்ளார். இவற்றை கிறிஸ்தவர்களாகிய நமக்கான அனுமதியாக நாம் கருதமுடியாது. திருமணம் ஆயுள் முழுவதும் இருக்க வேண்டிய ஓர் உறவு; மரணத்தினால் மட்டுமே இவ்வுறவைப் பிரிக்க முடியும் என்பதை கிறிஸ்தவர்கள் ஒருபோதும் மறக்கலாகாது.

புருஷன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா? என பரிசேயர்கள் இயேசுகிறிஸ்துவிடம் கேட்டபோது, ''ஆதியிலே மனிதரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்

கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான், அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும் நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். ஆகையால் தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்'' என்றார் (மத். 19:3-6). இயேசுகிறிஸ்துவின் இவ்வார்த்தைகள் திருமண உறவு ஆயுள் முழுவதும் இருக்கவேண்டியதற்கான சில காரணங்களை அறியத்தருகின்றது. அவற்றை இப்போது பார்ப்போம்.

முதலாவதாக, இயேசுகிறிஸ்து, மனிதனுடைய சிருஷ்டிப்பை அடிப்படையாகக்கொண்டு, கணவனும் மனைவியும் ஒன்றாய் இணைந்திருப்பவர்கள் என்பதை இவ்வசனங்கள் மூலம் அறியத்தருகின்றார். மானிட திருமணமானது, அவனுடைய சிருஷ்டிப்பிலேயே தன் ஆரம்பத்தைக் கொண்டிருப்பதனால், தேவன் மனிதனைச் சிருஷ்டித்தபோதே, கணவனும் மனைவியும் ஒன்றாய் இணைந்திருக்கவேண்டும் என்பதை வெளிப்படுத்தியுள்ளார். தேவன் ஆணையும் பெண்ணையும் சிருஷ்டித்தபின், ''புருஷனானவன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்'' என்று சொன்னதை (ஆதி. 2:24) இயேசுகிறிஸ்து சுட்டிக்காட்டுகிறார் (மத்.19:5). கணவனுக்கும் மனைவிக்குமிடையேயுள்ள உறவு, பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே இருக்கும் உறவைவிட மிகவும் நெருக்கமானதும் அந்நியோன்யமானதுமாக இருக்கின்றமையே, தேவன் இவ்வாறு சொல்வதற்கான காரணமாகும். மனைவியோடே இசைந்திருப்பான் என்பதில், இசைந்திருப்பான் என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள பதம் ''ஒட்டிக்கொள்ளுதல்'' அல்லது ''பசையிட்டு இறுக ஒட்டுதல்'' என பொருள்படும். ''இரண்டு காகிதத்துண்டுகளை ஒன்றின் மீது ஒன்றாக வைத்து பசைபோட்டு ஒட்டவைக்கப்படுவதுபோல, திருமணத்தில் கணவனும் மனைவியும் ஒன்றாக இணைக்கப்படுகிறார்கள். ஒட்டப்பட்ட காகிதத் துண்டுகளைத் தனியாக பிரிக்கமுற்பட்டால் இரண்டுமே

கிழிந்துவிடும். இதேவிதமாக, திருமணத்தில் ஒன்றாக இணைக்கப்பட்ட தம்பதியரையும் பிரித்தால் அது இருவரையுமே பாதிக்கும்'' (56). இருவரும், மரணத்தால் தவிர, வேறெதனாலும் பிரிக்கமுடியாதபடி ஒட்டப்பட்டிருப்பதனால், திருமணமானது ஆயுள்முழுவதும் இருக்க வேண்டிய உறவாக உள்ளது. இதனால் இயேசுகிறிஸ்துவும் அடுத்த வசனத்தில், ''இப்படி இருக்கிறபடியால் அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். ஆகையால் தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்'' (மத்.19:6). திருமணத்தில் கணவனும் மனைவியும் ஒருவராகும் வண்ணம் தேவனால் இணைக்கப்படுவதனால் அவர்களை எவரும் பிரிக்கக்கூடாது.

இயேசுகிறிஸ்துவின் கூற்றிலிருந்து நாம் அறிந்துகொள்ளும் இரண்டாவது விடயம், ஒன்றாய் இணைந்திட்ட கணவனும் மனைவியும், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள் என்பதாகும் (மத். 19:6). இதுவும், மனிதனுடைய சிருஷ்டிப்பை அடிப்படையாய்க்கொண்டு இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தும் ஒரு உண்மையாகும். இதனால், ''ஆதியிலே மனிதனை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார்'' என இயேசுகிறிஸ்துதன்னுடைய விளக்கத்தை ஆரம்பிக்கின்றார். உண்மையில், தேவன் ஆணையும் பெண்ணையும் சிருஷ்டித்தமுறை, அவர்கள் எப்படி திருமணத்தின் மூலம் ஒரே மாம்சமாகின்றனர் என்பதையும் அறியத்தருகின்றது. தேவன் ஆணையும் பெண்ணையும் வித்தியாசமான முறையிலேயே படைத்தார். மண்ணினால் உருவாக்கி ஜீவசுவாசத்தை ஊதியதன் மூலமாக ஆணைச் சிருஷ்டித்த தேவன், ஆணின் உடலிலிருந்து ஒரு பகுதியை எடுத்து அதைப் பெண்ணாக உருவாக்கியுள்ளார் (ஆதி. 2: 7, 21-24) ஆதியாகமம் 2:21இல்,. தேவன், முதல் மனிதனாகிய ஆதாமின் உடலில் இருந்து ஒரு விலா எலும்பை எடுத்தார் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், விலா எலும்பு என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள பதம், ''ஒரு பக்கம்'' அல்லது ''ஒரு பகுதி'' என்றும் மொழிபெயர்க்கப்படலாம். ''தேவன் ஆதாமின் ஒரு பகுதியையே ஏவாளாக சிருஷ்டித்தார் என்பதே இதன் சரி

யான அர்த்தமாகும்'' (57), உண்மையில், ''தேவன் ஆதாமின் விலா எலும்பை மட்டுமல்ல, அதனோடு சேர்ந்திருக்கும் மாம்சத்தையும் (சதைப்பகுதி) எடுத்துள்ளார். ஆதாமிலிருந்து எடுக்கப்பட்ட எலும்பே ஏவாளின் எலும்பாகவும், ஆதாமின் மாம்சமே ஏவாளின் மாம்சமாகவும் மாறியது'' (58). ஏவாளைப் பார்த்த ஆதாம், ''இவள் என் எலும்பில் எலும்பாயிருக்கிறாள்'' என்று மட்டும் சொல்லாமல், ''என் மாம்சத்தில் மாம்சமுமாயிருக்கிறாள்'' என்றும் சொன்னதும் (ஆதி.2:23) இதை உறுதிப்படுத்துகின்றது. எனவே, ''ஆணின் ஒருபகுதியே பெண்ணாக இருப்பதனால், அவர்கள் திருமணத்தில் ஒன்றாக, ஒரே மாம்சமாக இணையக்கூடியதாயுள்ளது'' (59). அவர்கள் ஒரே மாம்சமாய் இருக்கின்றபடியினால் மரணத்தினால் மட்டுமே அவர்களைப் பிரிக்க முடியும்.

மூன்றாவதாக, திருமண உறவு ஆயுள்முழுவதும் இருக்க வேண்டியதற்கான முக்கிய காரணம், தேவனே கணவனையும் மனைவியையும் ஒன்றாக இணைப்பவராக இருப்பதேயாகும். மனிதனை சிருஷ்டித்த தெய்வம், அவர்களைத் திருமணத்தில் ஒருநபராக இணைக்கின்றார். ''ஆகையால் தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்'' என்று இயேசுகிறிஸ்து சொல்வதற்கு இதுவே காரணமாகும். உண்மையில், உலகின் முதல் திருமணத்தை தேவன் நடத்தி வைத்ததுமட்டுமல்ல, அவருடைய மக்களது திருமணங்கள் அனைத்தும் அவராலேயே நடத்தப்படுகின்றன. ''தேவனே மணமக்களை திருமண உறவில் ஒன்றாக இணைப்பதனால், அவரால் இணைக்கப்பட்டவர்களைப் பிரிப்பது அவரது செயலை எதிர்த்து அதை இல்லாமல் செய்யும், அவருக்கு எதிரான ஒரு செயலாகும்'' (47). எனவே, நாம் இவ்விடயத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ''கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார்'' எனக்கூறும் வேதம், (மல்.2:14) தள்ளிவிடுதலைத் தேவன் வெறுப்பதை அறியத்தருகின்றது. (மல்.2:16). எனவே, தேவன் இணைத்தவர்களை நாம் பிரிக்கக்கூடாது. இதைப்பற்றி பவுல் எழுதும்போது, ''விவாகம் பண்ணிக்கொண்டவர்களுக்கு நானல்ல கர்த்தரே கட்

டளையிடுகிறதாவது, மனைவியானவள் தன் புருஷனை விட்டுப் பிரிந்துபோகக்கூடாது... புருஷனும் மனைவியைத் தள்ளிவிடக் கூடாது'' என்று குறிப்பிட்டுள்ளார் (1கொரி. 7:10:11). எனவே, திருமண உறவு ஆயுள் முழுவதும் இருக்க வேண்டிய உறவு என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

பகுதி மூன்று

மானிட மறுவிவாகமும் தேவனின் மறுமொழியும்

1. விவாகரத்து பெற்றவர்களும் மறுவிவாகமும்

2. விபசாரம், விவாகரத்து, மறுவிவாகம்

3. விசுவாசிகளான விதவைகளின் மறுவிவாகம்

இன்றைய கிறிஸ்தவ உலகில் திருமணம் என்ற வார்த்தையைவிட விவாகரத்து, மறுவிவாகம் எனும் வார்த்தைகளையே அதிகம் கேட்கக் கூடியதாயுள்ளது. கிறிஸ்தவர்கள் மத்தியில் இதுபற்றி பலவிதமான கேள்விகளும் சந்தேகங்களும் உள்ளன. எனவே, திருமணத்திற்கான தேவனுடைய திட்டம் யாதென்றும், கிறிஸ்தவர்களுக்கு விவாகரத்து அனுமதிக்கப்படவில்லை என்றும் அறிந்துகொண்ட நாம், இப்பகுதியில், இன்றைய கிறிஸ்தவர்கள் மத்தியில் பெரும் சர்ச்சைக்குரிய விடயங்களாக இருக்கும் விவாகரத்து பெற்றவர்களின் மறுவிவாகம் பற்றியும், விபசாரம் காரணமாக விவாகரத்தும் மறுவிவாகமும் பற்றியும், வித

வைகளின் மறுவிவாகம் பற்றியும் பார்ப்போம். இவ்விடயங்களில் வேதாகமம் கூறுவதே கிறிஸ்தவனுக்கான சட்டமாய் உள்ளது என்பதை நாம் மறக்கலாகாது.

1. விவாகரத்து பெற்றவர்களும் மறுவிவாகமும்

இலங்கை போன்ற நாட்டில், விவாகரத்து பெறுபவர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. நமது நாட்டின் கலாச்சாரம், பண்பாடு என்பன விவாகரத்தை ஒரளவுக்கு தடுத்துள்ளது. அப்படியிருந்தும், நம் சபைகளில் விவாகரத்து பெற்றவர்களும், தம் கணவரால் கைவிடப்பட்டவர்களும், வீட்டைவிட்டு துரத்தப்பட்டவர்களும், மனைவியை இன்னுமொரு மனிதனிடம் பறிகொடுத்தவர்களும் இருக்கின்றார்கள். இப்படிப்பட்டவர்கள் மறுவிவாகம் செய்யலாம் என சில கிறிஸ்தவர்கள் கருதுகின்றனர். இதற்கு ஆதாரமாக 1 கொரிந்தியர் 7:15 சுட்டிக்காட்டப்படுகின்றது. எனினும், இவ்வசனத்தை வைத்துக்கொண்டு இப்படி ஒரு முடிவுக்கு வருவது தவறாகும். ஏனென்றால், இவ்வசனம் மறுவிவாகத்தைப் பற்றிய வசனம் அல்ல. இவ்வசனம், இரட்சிப்பின் முன் திருமண முடித்தவர்களைப் பற்றியது என்று முதலாம் பகுதியில் பார்த்தோம்.

விசுவாசியோடு வாழவிரும்பாத அவிசுவாசி பிரிந்து போனால் பிரிந்து போகட்டும் என கூறும் பவுல், விசுவாசி அதன்பிறகு என்னசெய்யவேண்டும் என்று எதுவும் சொல்லவில்லை. இதனால் சிலர், ''இப்படிப்பட்ட விஷயத்தில் சகோதரனாவது சகோதரியாவது அடிமைப்பட்டவர்கள்அல்ல'' எனும் கூற்றை, ''விசுவாசி, அவிசுவாசியுடனான திருமணத்தின் கீழானவன் அல்ல அவன் இன்னுமொரு விசுவாசியைத் திருமண முடிக்க, விடுதலை பெறுகிறான்'' *(18)*, என விளக்குகின்றனர். எனினும், ''இப்படிப்பட்ட சூழ்நிலையில், கிறிஸ்தவனுக்கு விவாகரத்து இல்லை எனும் கட்டளைக்கு அவன் கீழ்ப்பட்டவன் அல்ல என்பதே இதன் சரியான அர்த்தமாகும்'' *(35)*. மரணத்தினால் மட்டுமே திருமண உறவு பிரிக்கப்படக் கூடியது எனும் கருத்துடைய பவுல், *(ரோ.7:2, 1கொரி.7:39)* இவ்விடத்தில்

அவிசுவாசியின் செயல் திருமண உறவில் ஒரு பிரிவை ஏற்படுத்துகின்றது என்றே கூறுகிறார்.

அவிசுவாசி பிரிந்துபோன பின், தனித்திருக்கும் விசுவாசி மறுவிவாகம் செய்யலாமா? எனும் கேள்விக்கான பதிலைக் கண்டுகொண்டால், விவாகரத்து பெற்றவர்களுக்கு மறுவிவாகம் தேவனால் அனுமதிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிந்திடலாம். பவுல் 1 கொரிந்தியர் 7:15 இல் மறுவிவாகத்தைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. எனவே, இவ்வசனத்தை ஆதாரமாய்க்கொண்டு மறுவிவாகம் பற்றி நம்மால் ஒரு முடிவுக்கு வரமுடியாது. இதனால், பவுல் விவாகரத்து பெற்றவர்கள் பற்றி எழுதியுள்ள 1கொரிந்தியர் 7:10-11 ஐயே இவ்விடத்தில் ஆராய்ந்து பார்க்கவேண்டும். ''கொரிந்து சபையில் விவாகரத்து பெற்றவர்களும் இருந்தனர்'' *(32)*. இதனால் ''மனைவியானவள் புருஷனை விட்டுப் பிரிந்து போகக்கூடாது'' என கூறும் பவுல், அடுத்தவசனத்தில், ''பிரிந்து போனால் அவள் விவாகமில்லாதிருக்கக்கடவள் அல்லது புருஷனோடே ஒப்புரவாகக்கடவள்'' என்று குறிப்பிட்டுள்ளார் *(1கொரி. 7:10-11)*. பிரிந்துபோகுதல் என்பதற்கு இவ்விடத்தில் பவுல் உபயோகித்துள்ள பதம் விவாகரத்தையே குறிக்கின்றது'' *(30)*. எனவே, விவாகரத்து பெற்றவர்களும், அல்லது திருமணத்தின் பின் தனித்துவிடப்படுபவர்களும் ஒன்றில், தனித்துவாழவேண்டும்; இல்லையென்றால், விவாகரத்து செய்தவரோடு மறுபடியுமாக சேர்ந்து வாழவேண்டும் என்பதே வேதம் கொடுக்கும் ஆலோசனையாயுள்ளது. ''இவ்வசனத்தில் விவாகமில்லாதிருக்கக்கடவள் என்பது, மூலமொழியில் தொடர் நிகழ்காலத்திலேயே உள்ளது'' *(32)*. எனவே, விவாகரத்து பெற்றவன் விவாகமில்லாத நிலையிலேயே தொடர்ந்திருக்க வேண்டும் என்பதே இவ்வசனத்தின் அர்த்தமாகும். ''விவாகரத்து பெற்றவன் மறுவிவாகம் செய்ய விரும்பினால், அவன் யாரிடமிருந்து விவாகரத்து பெற்றானோ அவளையே மறுபடியும் திருமணமுடிக்க வேண்டும்'' *(35)*.

கிறிஸ்தவர்களுக்கு விவாகரத்து அனுமதிக்கப்படாத மையினால், விவாகரத்து பெற்றவர்கள் தேவனுடைய திருமணத்திட்டத்தை மீறியவர்களாகவே இருக்கின்றனர். உண்மையில் ''தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்'' எனும் இயேசுகிறிஸ்துவின் கட்டளையை (மாற். 10:9) அவர்கள் மீறியுள்ளனர். ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கும் முன்பே திருமணமுடித்திருந்தால் கூட, தேவனுடைய பார்வையில் அது உண்மையான திருமணமாகவே உள்ளது. அவர்கள், திருமணத்தின் மூலம் ஏற்கனவே ஒரே மாம்சமாகி விட்டார்கள். தேவனுடைய பார்வையில் அவர்கள் இருவராயிராமல் ஒருவராயிருக்கிறார்கள் (மாற். 10:8). ''விவாகரத்து என்பது திருமணத்தின் மூலம் ஒரு நபராகியவர்களை இரு துண்டுகளாக வெட்டுவதாகும்'' (56). இதனால், விவாகரத்து பெற்றவன் முழு மனிதனாக இராமல், பாதிமனிதனாகவே இருக்கின்றான். விவாகரத்து காரணமாக அவனுடைய ஒரு பகுதி அவனை விட்டுப் பிரிக்கப்பட்டுள்ளது. இதனால், அவன் மறுபடியுமாக தன்னைவிட்டுப் பிரிந்துபோன தன்னுடைய மறுபாதியோடு சேர்ந்துகொள்ளவேண்டும். ''விவாகரத்து பெற்ற கணவனும் மனைவியும் சட்டத்தினால் பிரிக்கப்பட்டிருப்பினும் தேவனுடைய பார்வையில் அவர்கள் திருமண உறவுக்குள்ளேயே இருக்கின்றனர்'' (24). இதனால்தான், ''ஒருவன் தன் மனைவியைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன், அவளுக்கு விரோதமாக விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான். மனைவியும் தன் புருஷனைத் தள்ளிவிட்டு வேறொருவனை விவாகம் பண்ணினால், விபசாரஞ் செய்கிறவளாயிருப்பாள்'' என இயேசுகிறிஸ்து கூறினார் (மாற். 10:11-12). எனவே, விவாகரத்து பெற்றவர்கள் ஒன்றில் தனித்திருக்க வேண்டும்; அல்லது, விவாகரத்து பெற்றவரோடு ஒப்புரவாக வேண்டும். அதைவிடுத்து அவர்கள் இன்னுமொருவரை விவாகம் பண்ணினால் அவர்கள் விபசாரம் செய்கிறவர்களாகவே இருப்பார்கள்.

கணவன் மனைவியரிடையே பிரச்சனைகள் ஏற்படும்போது, அவர்களுக்குத் தகுந்த ஆலோசனைகளைக் கூறி,

அவர்களை ஒப்புரவாக்கவேண்டியது கிறிஸ்தவ சபையினது கடமையாகும். கணவனும் மனைவியும் ஒன்றாக வாழமுடியாதபடி இருவரும் மனக்கசப்புடனும் வெறுப்புடனும் இருந்தால், அவர்கள் தற்காலிகமாக பிரிந்து வாழ்வதற்கு சபை அனுமதி கொடுக்கலாம். அக்காலத்தில் இருவரும் கிறிஸ்துவின் அன்பையும் மன்னிப்பையும் அனுபவரீதியாக காணும்படிசெய்து,படிப்படியாக இருவரையும் ஒப்புரவாக்கவேண்டியது சபையினது கடமையாகும். தேவன் ஒப்புரவாக்குதலின் ஊழியத்தையே சபைக்கு கொடுத்திருக்கிறார் (2. கொரி 5:18). நாம் மக்களைத் தேவனோடு ஒப்புரவாக்குபவர்களாக மட்டுமல்ல, பிரிந்திருக்கும் மக்களையும் ஒருவரோடொருவர் ஒப்புரவாக்கவேண்டும். எனவே, திருமணவாழ்வில் தனிமைப்பட்டிருப்போரை மறுபடியுமாக ஒப்புரவாக்குவது மிக முக்கியமான பணியாகும். சில சந்தர்ப்பங்களில், பிரிந்துபோன கணவன் மனைவியை மறுபடியுமாக ஒன்றாக வாழவைப்பதற்கு நீண்டகாலம் தேவைப்படலாம். எனினும், எவ்வளவு காலமானாலும் பிரிந்துபோன தம்பதியரை ஒப்புரவாக்குவது எவ்வளவு பெரிய சிரமமான காரியமாயிருந்தாலும், அதைக் குறித்து நாம் அதைரியமும் சோர்வுமடையாமல், பிரிந்து வாழும் கணவன் மனைவியை ஒன்றாக வாழவைக்கவேண்டும். எனவே, விவாகரத்து பெற்றவர்களுக்கு மறுவிவாகம் புதிய நபரோடல்ல, மாறாக, அவர்களுடைய பழையதுணையோடேயே நடைபெற வேண்டும். இதற்கு கிறிஸ்தவசபை தன்னாலானவற்றை செய்ய வேண்டும்.

2. விபசாரம், விவாகரத்து, மறுவிவாகம்

மறுவிவாகம் பற்றி இன்று கிறிஸ்தவர்கள் மத்தியில் இருக்கும் இன்னுமொரு பெரியகேள்வி, தம்பதியரில் ஒருவர் மற்றவருக்கு துரோகமிழைத்து வேறொருவருடன் சென்றால் என்ன செய்யவேண்டும் என்பதேயாகும். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இவ்விடத்தில், துரோகமிழைத்தவரை விவாகரத்து செய்துவிட்டு இன்னுமொருவரைத் திருமணம் முடிக்கலாம் எனும் கருத்துடையவர்களாக இருக்கின்றனர். இதற்கு ஆதாரமாக மத்தேயு 19:4 உம் 5:

32 உம் சுட்டிக்காட்டப்படுவது வழமை. எனினும், இயேசு கிறிஸ்து இவ்வசனங்களில் திருமண முடித்தவர்களது விபசாரத்துக்கல்ல, மாறாக, திருமணவாழ்வின் முழுமைக்குள் வராதவர்களுடைய வேசித்தனத்திற்கே விவாகரத்து செய்ய அனுமதி கொடுத்துள்ளார் என்றும், அது இஸ்ரவேல் மக்களது கலாச்சாரத்திற்கு மட்டுமே பொருத்தமான அனுமதி என்றும் இந்நூலின் இரண்டாம் பகுதியில் பார்த்தோம். ஆதலால், இவ்வசனத்தை ஆதாரமாய்க் கொண்டு விபசாரத்துக்கு விவாகரத்து அனுமதிக்கப்பட்டுள்ளது என நம்மால் கூறமுடியாது. எனினும், விபசாரம் திருமண உறவின் புனிதத்தன்மையைக் கெடுக்கின்றது என்பதை நம்மால் மறுக்கமுடியாது.

விபசாரம் விவாகரத்துக்கு காரணமாயமைகின்றது என வாதிடுபவர்கள், முதலில், தம்பதியரில் ஒருவர் மற்றவருக்கு துரோகமிழைப்பதற்கான காரணங்களை அறிந்துகொள்ளவேண்டும். அப்போது, திருமண உறவின் புனிதத்தைக் கெடுக்கும் விபசாரத்தைத் தவிர்த்துக்கொள்ள பலருக்கு சரியான ஆலோசனைகளைக் கொடுக்கக்கூடியதாக இருக்கும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், குடும்பவாழ்வில் தனிமை உணர்வு, அல்லது, தான் நேசிக்கப்படவில்லை எனும் ஏக்கம் ஒருவர் மற்றவருக்குத் துரோகமிழைத்து வேறொருவருடன் செல்வதற்கு காரணமாயமைவதை அவதானிக்கலாம். அநேகமான குடும்பங்களில் கணவனும் மனைவியும் மனம் விட்டுப்பேசி சிரித்து மகிழ்வது நாளுக்கு நாள் குறைவடைந்து கொண்டே செல்கின்றது. காலையில் வீட்டை விட்டுச் செல்லும் கணவன், வீட்டுக்குத் திரும்பி வர இரவாகின்றது. இதனால் வீட்டிலிருக்கும் மனைவி நாள் முழுவதும் தனிமையில் வாட வேண்டியுள்ளது. மனைவியும் வேலைக்குச் செல்பவளாக இருந்தால், இருவரும் வேலைக்களைப்பில் வீடு திரும்புவதனால் இருவருக்கும் தம் மனதிலுள்ளவைகளைப் பகிர்ந்துகொள்ள முடியாமல் போகின்றது. அப்படியே இரவில் நேரம் இருந்தாலும், பெரும்பாலான குடும்பங்களில், அந்நேரமும் தொலைக்காட்சிப்பெட்டியின் முன் அமர்ந்திருப்பதிலும் வீட்டுவேலைகளைச் செய்வதிலும் செலவாகின்றது. இதனால், தம் மன

திலுள்ளவைகளை ஒருவரோடொருவர் பகிர்ந்து கொள்ள முடியாமல் தவிக்கும் தம்பதியர், சிலவேளைகளில் வெளியில் வேறு மனிதர்களிடம் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். இது நாளடைவில் ஒருவர் மற்றவருக்கு துரோகமிழைத்து வேறொருவருடன் செல்வதற்கு காரணமாயமைந்துவிடும். எனவே, கணவன் மனைவி இருவரும் தமது வாழ்வில் ஒருவரோடொருவர் மனம் விட்டுப்பேசி மகிழ்வதற்கு நேரத்தை ஒதுக்கி வைத்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

உண்மையில், ''தனிமை உணர்வுக்கான தேவனுடைய தீர்வாகவே திருமணவாழ்வு உள்ளது'' *(60)*. மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று கண்டமையினாலேயே தேவன் அவனுக்குத் துணையொன்றை சிருஷ்டித்துக் கொடுத்து, திருமணவாழ்வை ஏற்படுத்தியுள்ளார் *(ஆதி. 2:18,20-24)*. எனவே, கணவன் மனைவி உறவு ஒரு நட்புறவாக, இருவரும் மனம்விட்டுப்பேசி மகிழும் உறவாக இருக்கவேண்டும். அப்போது, தனது துணையைவிட தனக்கு இன்னுமொருவர் தேவை எனும் உணர்வு தம்பதியருக்கு ஏற்படாது. இது ஒருவர் மற்றவருக்கு துரோகமிழைப்பதையும் தடுக்கும். அதேபோல, கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் நேசிக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும் *(கொலோ.3:19, தீத்து.2:3-5)* கணவன் மனைவிக்கிடையேயான அன்பு வெறும் உணர்ச்சிகளை மட்டும் அடிப்படையாய்க் கொண்டிராமல், தாம் ஒருவரை ஒருவர் நேசிக்கவேண்டும் எனும் உறுதியான தீர்மானத்துடனான அன்பாக இருக்கவேண்டும். அவர்கள் எல்லாவிதமான சூழ்நிலையிலும் ஒருவரிலொருவர் அன்புகூர வேண்டும். தான் உண்மையிலேயே நேசிக்கப்படுகின்றேன் எனும் உணர்வு தம்பதியருக்கு இருக்கும்போது, அவர்கள் ஒருவர் மீது ஒருவர் பற்றுடையவர்களாக இருப்பார்களேயல்லாமல், ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து வேறொருவருடன் செல்ல வேண்டும் எனும் எண்ணம் அவர்களுக்கு ஏற்படாது.

சில குடும்பங்களில், தமது தேவை சந்திக்கப்படாததினாலும் ஒருவர் மற்றவருக்குத் துரோகமிழைப்பதையும்

நாம் அவதானித்திடலாம். திருமணவாழ்வில், மனைவியின் தேவைகளைக் கண்டறிந்து அவற்றைப் பூர்த்தி செய்ய வேண்டியது கணவனுடைய கடமையாகும். அதேபோல, மனைவியும் தன் கணவனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும் *(1 கொரி. 7:3)*. திருமணவாழ்வில் கணவன் அல்லது மனைவி தாம் மற்றவருக்கு செய்ய வேண்டியவற்றை செய்யாமலிருக்கும்போது, இல்லையென்றால், அவற்றை கடமைக்காக செய்யும்போது, ஒருவர் மற்றவர் மீது வெறுப்புற்று வேறொருவருடன் செல்வதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. சில குடும்பங்களில் கணவன், மனைவியின் பொருளாதாரத் தேவைகளை சந்திக்காதமையினாலும்; வேறு சில குடும்பங்களில், ஒருவருக்கொருவர் பாலியல் தேவைகளை பூர்த்தி செய்யாமலிருப்பதனாலும் கணவனும் மனைவியும் பிரிந்து செல்கின்றனர். மனைவி வேலை செய்பவளாக இருந்தாலும் கூட அவளுடைய உணவு, உடை, இருப்பிடம் எனும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டியது கணவனுடைய கடமையாகும் *(1 தீமோ. 5:8)*. அதேபோல, கணவனுடைய தேவைகள் எவை என்பதை அறிந்து அவற்றை, பூர்த்தி செய்ய மனைவியும் ஆயத்தமுடையவளாக இருக்க வேண்டும்.

இன்றைக்குச் சில கிறிஸ்தவ குடும்பங்களில், தம்பதியரில் ஒருவர், ''பாலியல், பாவமானது'' எனும் கருத்துடையவராக இருப்பதனால், மற்றவர் அவரைவிட்டு வேறு ஒருவருடன் சென்று விடுவதை அவதானித்திடலாம். திருமண வாழ்வில் பாலியலும் ஒரு அம்சமாகவே இருக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை. மானிட சரீரத்தைத் தேவனே தனது சித்தத்தின்படி படைத்துள்ளார் *(ஆதி.1: 26-28)*. அதிலுள்ள பாலியல் ஆசைகள் தேவனுடைய சிருஷ்டிப்பின் ஒரு பகுதியாகும். ''நீங்கள் பலுகிப்பெருகி பூமியை நிரப்புங்கள் எனும் கட்டளை *(ஆதி.1:28)*, பாவம் உலகில் நுழைவதற்கும் முன்பே கொடுக்கப்பட்டுள்ளமையினால், பாலுறவும் இனவிருத்தியும் மனிதனுடைய திருமண வாழ்வுக்கான தேவனுடைய ஆரம்ப திட்டமாகவே இருக்கின்றது'' *(61)*. ''ஆணுக்கும் பெண்ணுக்குமான

தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியே பாலியலாகும். இதற்காகவே தேவன் மனிதனுக்குத் திருமணவாழ்வை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்'' (62). இவ்வுலக வாழ்வு மாயையானது என்பது உண்மையாயினும், இதற்காக தாம்பத்திய வாழ்வைத் துறக்கும்படி தேவன் கூறவில்லை. மாறாக, ''சூரியனுக்குக் கீழே தேவன் உனக்கு நியமித்திருக்கிற மாயையான நாட்களிலெல்லாம் நீ நேசிக்கிற மனைவியோடே நிலையில்லாத இந்த ஜீவவாழ்வை அனுபவி'' என்றே அவருடைய வார்த்தை அறிவுறுத்துகிறது (பிர. 9:9). உண்மையில், பாலியலைத் தவறான வழிகளில் அனுபவிப்பதே பாவமாகும். இதனால்தான், ''வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும் அவளவள் தன் சொந்த புருஷனையும் உடையவர்களாயிருக்க வேண்டும்'' என வேதம் கூறுகிறது (1 கொரி. 7:2). ''பாலியலைத் துறப்பதன் மூலமாக நாம் ஆவிக்குரிய பிரகாரம் உயர்வடைந்துவிட மாட்டோம்'' (63). அது நம்மை பாவத்திலேயே விழத்தள்ளும். குடும்பவாழ்வில் கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் துரோகமிழைத்து வேறொருவருடன் செல்வதற்கு அதுவே மூலகாரணமாயமைந்துவிடும். எனவே, திருமணவாழ்வில் விபசாரத்துக்கு விவாகரத்து என கூறுபவர்கள், அத்தகைய விபசாரம் ஏற்படாமலிருக்க தம்பதியருக்கு தகுந்த ஆலோசனைகளைக் கொடுப்பது நல்லது. அப்படியிருந்தும் ஒருவர் மற்றவருக்கு துரோகமிழைத்தால், விவாகரத்து எனும் முடிவுக்கு வருவதையும் தவிர்த்துக் கொள்ளவேண்டும். இதற்கு நம்மில் சில கிறிஸ்தவ குணாதிசயங்கள் காணப்பட வேண்டியது அவசியம்.

(அ) மன்னிப்பு வழங்கிடும் மனப்பாங்கு தேவை: தம்பதியரில் ஒருவர் மற்றவரைவிட்டு வேறொருவருடன் சென்றால், தனக்கு துரோகமிழைத்தவரை மன்னிக்கும் மனப்பாங்கு ஒரு கிறிஸ்தவனுக்கு இருக்கவேண்டியது மிகவும் அவசியமானதாகும். மன்னிப்பே கிறிஸ்தவத்தின் அடித்தளமாயுள்ளது. நாம் அனைவரும் தேவனிடமிருந்து மன்னிப்பைப் பெற்றுக்கொண்ட பாவிகள் என்பதை நாம் ஒருபோதும் மறக்கலாகாது. அதேசமயம், தேவன் நம்மை மன்னித்திருந்தால் நாமும் மற்றவர்களை மன்னிக்கிறவர்

களாக இருக்கவேண்டும். ''தேவனுடைய மன்னிப்பு மனிதர் ஒருவரையொருவர் மன்னிப்பதற்கான மாதிரியாய் உள்ளது'' *(64)*. இதனால்தான், தேவனுடைய வார்த்தையும், ''ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்'' என கட்டளையிட்டுள்ளது (எபே. 4:32). எனினும், எனக்குத் துரோகமிழைத்து, இன்னுமொருவருடன் விபசாரம் செய்தவனை மன்னிக்க முடியுமா? என நாம் கேட்கலாம். இவ்விடத்தில் இயேசுகிறிஸ்து நமக்கு சிறந்த உதாரணமாய் இருக்கின்றார். ஒரு தடவை, விபசார குற்றத்தில் பிடிக்கப்பட்டு தன்னிடம் கொண்டுவரப்பட்ட பெண்ணை அவர் மன்னித்தார் (யோ. 8:11). அதேபோல, ஐந்து புருஷர்களோடு விபசாரியாய் வாழ்ந்த சமாரியப்பெண்ணுக்கு ஜீவ தண்ணீரையே கொடுத்தார் (யோ. 4:1-42). அதுமட்டுமல்ல, விபசாரக்காரராக இருந்த பலர், இயேசுகிறிஸ்துவிடமிருந்து மன்னிப்பைப் பெற்று கிறிஸ்தவர்களாகியுள்ளனர். (1கொரி.6:9-11) ''கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது'' (பிலி. 2:5) என வேதமும் கூறுகின்றது. எனவே, கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசு கிறிஸ்துவைப்போல விபசாரத்தில் ஈடுபட்டவர்களையும் மன்னிப்பவர்களாக இருக்கவேண்டும்.

உண்மையில், திருமணவாழ்வில் துரோகமிழைத்து இன்னுமொருவரோடு சென்றவரை மன்னிப்பது இலகுவான காரியம் அல்ல. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மனிதமனம் மன்னிப்பு வழங்க விரும்பாது. இதற்குத் தேவனுடைய அன்பினால் நாம் நிரப்பப்படவேண்டியது அவசியம். தேவனுடைய அன்பு எதிரியையும் துரோகியையும் மன்னிக்கும் தன்மையுடையது. ''அது, நாம் அவரை விரும்பாத சமயத்திலும் நம்மை விரும்பிய அன்பு. நாம் அவரை வெறுத்த நேரத்திலும் நம்மை நேசித்த அன்பு (36). அத்தகைய தெய்வீக அன்பு நமக்கு அருளப்பட்டுள்ள பரிசுத்த ஆவியினாலே நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருப்பதாக வேதம் கூறுகிறது (ரோ. 5:8). எனவே, நம்மில் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்வது உண்மையானால்,

தேவ அன்பு நம் உள்ளத்தில் நிச்சயம் இருக்கும். ''இத் தேவ அன்பு நம்மில் அன்பைத் தூண்டுகிறது'' (65). ''இத னால் அன்பே நம் வாழ்க்கைமுறையாகின்றது'' (66). எனவே நாம் மற்றவரை நேசிக்க முற்படுகின்றோம். இவ் வாறு பிறரை நேசிக்க நம்மைத் தூண்டும் தேவ அன்பானது, வெறும் உணர்ச்சிகளின் வெளிப்பாடாய் இராமல், மற்ற வரை நேசிக்க வேண்டும் எனும் உறுதிமிகு தீர்மானத்தி னால் வெளிப்படும் அன்பாக இருக்கின்றது. ''இது நாம் விரும்பாதவர்கள் மீதும், விரும்பப்படக்கூடிய நிலையில் இல்லாதவர்கள் மீதும் செலுத்தப்படும் அன்பாகும்'' (67). இத்தகைய அன்பு ''நீடிய சாந்தமுள்ளது, தயவுள்ளது... அயோக்கியமானதைச் செய்யாது...சினமடையாது, தீங்கு நினையாது ... சகலத்தையும் தாங்கும்... சகலத்தையும் சகிக்கும்... ஒருக்காலும் ஒழியாது'' (1 கொரி. 13:4-8). எனவே, தனக்குத் துரோகமிழைத்து இன்னுமொருவரு டன் சென்றவரையும் அவ்வன்பு மன்னிக்கும். தேவ அன் பைப் பெற்ற ஒரு கிறிஸ்தவன், திருமணத்தின் மூலம் தன் னோடு ஒரே மாம்சமாகியவளைத் தன்னுடைய சொந்த சரீ ரமாகக் கருதி நேசிக்க வேண்டியிருப்பதனால் (எபே.5:28) அவள் தனக்கெதிராக செய்யும் எல்லாவிதமான செயல் களையும் மன்னிப்பவனாக இருக்க வேண்டும்.

(ஆ) மறுபடியும் ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்குதேவை: திருமண வாழ்வில் துரோகமிழைப்பவரை மன்னிப்பது மட் டும் போதாது. அத்தகையவரை மறுபடியுமாகத் தன் னோடு சேர்த்துக்கொள்ளும் தன்மையும் கிறிஸ்தவ தம்ப தியருக்கு இருக்கவேண்டியது அவசியம். இதற்கு ஓசியா தீர்க்கதரிசியினுடைய வாழ்வு சிறந்த உதாரணமாய் உள் ளது. ஓசியா தேவனுடைய கட்டளைப்படி ஒரு சோரப் பெண்ணைத் திருமணமுடித்திருந்தார். ''கர்த்தர் ஓசி யாவை நோக்கி, நீ போய் ஒரு சோர ஸ்திரீயையும், சோரப்பிள்ளைகளையும் உன்னிடமாகச் சேர்த்துக்கொள் என்றார். அவன் போய், திப்லாயிமின் குமாரத்தியாகிய கோமேரைச் சேர்த்துக்கொண்டான்'' (ஓசி.1:2-3).இதிலி ருந்து அவன் ஒரு விபசாரியைத் திருமணமுடித்தான் என நாம் கருதலாகாது. ''இவ்வசனத்தில் ''சோர ஸ்திரீ''

என்பது அவளுடைய குணவியல்பை வெளிப்படுத்தும் விவரணமாகவே இருக்கின்றது'' (68). அதாவது, ''அவள் எப்படிப்பட்டவளாக மாறுவாள் என்பதை முன்னறிவிக்கும் விதமாகவே மூலமொழியில் இவ்வார்த்தை உள்ளது'' (69). இவ்வசனத்தில் சோரப் பிள்ளைகளையும் இதேவிதமாகவே நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். அவர்கள் ஓசியாவின் திருமணத்தின்போது இருந்தவர்கள் அல்ல. மாறாக, திருமணத்தின் பின்னர் பிறந்தவர்களாவர் (ஓசி. 1:2-11). தாயைப்போலவே பிள்ளைகளும் இருக்கும் என்பதைத் தேவன் ஓசியாவுக்கு ஆரம்பத்திலேயே அறிவித்துள்ளார். ஓசியாவுக்கு மூன்று பிள்ளைகள் பிறந்த பின்னர், அவரது மனைவி அவரை விட்டுப்பிரிந்து வேறு மனிதர்களுடன் சென்று விட்டாள். அப்படியிருந்தும், தேவன், அவளை விவாகரத்துச் செய்யும்படி ஓசியாவுக்குக் கூறவில்லை. மாறாக, மறுபடியுமாக அவளைச் சேர்த்துக்கொள்ளும்படியே அறிவுறுத்தினார் (ஓசி. 3:1). அச்சமயம் ஓசியாவின் மனைவி பலரால் நேசிக்கப்பட்ட விபசாரியாய் இருந்தாள். இதனால் அவர் பணம் கொடுத்து அவளை மீட்டுக்கொள்ளவேண்டியதாயிருந்தது (ஓசி. 3:1-2). ''ஓசியாவை விட்டுச் சென்ற அவரது மனைவியை ஒருவன், விபாசாரத் தொழிலில் ஈடுபடுத்தியிருந்தான். இதனால் ஓசியா அவனுக்குப் பணம் கொடுத்து அவளைத் தன்னோடு கூட்டிச் சென்றார்'' (69).

''உண்மையில், தேவனுடைய அன்பே ஓசியாவின் அன்பைத்தூண்டியுள்ளது'' (70). இதனால்தான், தேவனுடைய கட்டளையின்படி, தனக்குத் துரோகமிழைத்து விட்டு விபசாரியாய் வாழ்ந்து கொண்டிருந்த தன் மனைவியை மறுபடியுமாக சேர்த்துக்கொள்ளக்கூடியளவுக்கு அவருடைய உள்ளத்தில் அன்பு இருந்தது. ஓசியாவின் வாழ்வினூடாகத் தேவன், இஸ்ரவேல் ஜனங்கள் மீது தான் வைத்திருக்கும் மாறாத அன்பை வெளிப்படுத்தியுள்ளார். ஓசியா இதைப்பற்றி எழுதும்போது, ''பின்பு கர்த்தர் என்னை நோக்கி, அந்நிய தேவர்களை மதித்து திராட்சரசமுள்ள பாத்திரங்களை விரும்புகிறவர்களான இஸ்ரவேல் புத்திரர் பேரில் கர்த்தர் வைத்திருக்கிற அன்புக்கு ஒப்பாக, நீ இன்

னும் போய், தன் நேசரால் நேசிக்கப்பட்டவளும் விபசாரியுமான ஒரு ஸ்திரீயை நேசித்துக்கொள் என்று சொன்னார்'' என குறிப்பிட்டுள்ளார் (ஓசி. 3:1). ''இவ்விடத்தில், ஓசியாவின் மனைவியைத் தேவன் ஒரு ஸ்திரீ என கூறுவதற்கு காரணம், ஓசியாவை விட்டுச் சென்ற அவள், அவருடைய மனைவி என கூறக்கூட தகுதியற்ற நிலையில் இருந்தமையேயாகும்'' (71). தனக்குத் துரோகமிழைத்து தன்னை விட்டுச் செல்பவர்களைத் தேவன் நேசிப்பது போல, கணவனும் தன்னைவிட்டுச் செல்லும் மனைவியை நேசிக்க வேண்டும் என்பது ஓசியாவின் வாழ்வினூடாக நமக்குத் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டில், கணவன் மனைவிக்கிடையேயான உறவு முறை, இயேசுகிறிஸ்துவுக்கும் சபைக்குமிடையேயான அன்புக்கு ஒப்பிட்டுப் பேசப்பட்டுள்ளது (எபே. 5:23-32). எனவே, இயேசுகிறிஸ்து நம்மை எப்படி நேசிக்கின்றாரோ, அதே விதமாக நாமும், தேவன் நமக்குக் கொடுத்துள்ள வாழ்க்கைத்துணையை நேசிக்க வேண்டும். இயேசுகிறிஸ்து, தனது சீடர்களில் தன்னைக் காட்டிக் கொடுத்தவனையும், மறுதலித்தவனையும், தன்னை விட்டு ஓடிப்போனவர்களையும் கடைசிவரைக்கும் நேசித்தார் (யோவா.13:1). அதே சமயம், தன்னைப் பரியாசம் பண்ணி, தன்மேல் துப்பி, தன்னை அடித்து, தன் ஆடைகளைக்கிழித்து (மத். 27:30, 31, மாற். 14:65,15:19-20). தன்னைத் தூஷித்து (மாற். 15:30), தன்னைச் சிலுவையிலறைந்தவர்களையும் மன்னித்துள்ளார் (லூக். 23:34). எனவே, அவருடைய அன்பையும் மன்னிப்பையும் அனுபவித்துள்ள கிறிஸ்தவன், தனக்கு துரோகமிழைத்து இன்னுமொருவரோடு செல்பவளையும் மன்னித்து, மறுபடியும் தன்னோடு சேர்த்துக் கொள்ளவேண்டும்.

(இ) மறுவிவாகத்தைப்பற்றி சிந்திக்காத மனப்பாங்கு தேவை: கணவனுக்கும் மனைவிக்கும் மறு விவாகத்தைப் பற்றி சிந்திக்காத மனப்பாங்கும் தேவையாயுள்ளது. திருமணம் ஆயுள் முழுவதும் இருக்க வேண்டிய ஓர் உறவு. தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்கக்கூடாது எனும்

சத்தியம் அவர்கள் உள்ளத்தில் பதிந்திருக்க வேண்டும். அவர்கள் எந்த ஒரு சூழ்நிலையிலும் மறுவிவாகத்தைப்பற்றி சிந்திக்கக்கூடாது. ''ஒவ்வொரு கணவனும், தன் மனைவி எப்படிப்பட்ட நிலையிலிருந்தாலும், எப்படி நடந்து கொண்டாலும் அவளை நேசிக்கவேண்டும். தனது அன்பைப் பெற அவள் தகுதியற்றவளாக இருப்பினும், அவள் மீது அன்பு கூரவேண்டும். அதேபோல, ஒவ்வொரு மனைவியும் தன் கணவன் தன்னை எப்படி நடத்தினாலும் அவன் மீது அன்பு செலுத்தவேண்டும். மரணம்வரை, எது வந்தாலும் நாம் ஒருவரை விட்டு ஒருவர் பிரியமாட்டோம் எனும் உறுதியுடன் அவர்கள் இருக்கவேண்டும்'' (60). குடும்பவாழ்வில், ஏதோ ஒரு காரணத்துக்காக ஒருவர் மற்றவருக்கு துரோகமிழைத்துவிட்டால், அதற்காக அவரை விவாகரத்து செய்துவிட்டு இன்னுமொருவரை திருமண முடிக்கவேண்டும் என எண்ணக்கூடாது. விவாகரத்து மறுவிவாகம் எனும் இரு வார்த்தைகளும் அவர்கள் மனதில் இருக்கக்கூடாது. திருமண வாழ்வு, தேன்நிலவு காலத்தைப்போலவே எப்போதும் இனிமையாக இருக்காது. சில கசப்பான அனுபவங்களையும் தம்பதிகள் சில நேரங்களில் சந்திக்க நேரிடும். குடும்ப வாழ்க்கையில் கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, ஒருவரது குற்றங்களை மற்றவர் மன்னித்து கிறிஸ்துவின் அன்பில் வாழவேண்டும்.

விபசாரம் விவாகரத்துக்கு காரணமாயமையுமாயின், இன்று எத்தனையோ கணவன் மனைவியர் விவாகரத்து பெறவேண்டும். இயேசுகிறிஸ்து விபசாரத்தை உடல் ரீதியான செயலாக மட்டும் கருதவில்லை. உள்ளத்தின் உணர்வுகளிலும் விபசாரம் உண்டென்பதை அவர் காண்பித்துள்ளார். ''ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று'' என்று இயேசுகிறிஸ்து கூறியுள்ளார் (மத். 5:28). எனவே, மனைவி கணவனைவிட்டு இன்னுமொருவனோடு செல்வது மட்டுமல்ல, கணவன் தெருவில் செல்லும் ஒரு பெண்ணை இச்சையோடு பார்ப்பதும் விபசாரமே. ''இன்றைக்கு மக்கள், விளம்பரப்பலகையில் அரைகுறை ஆடையில் நிற்பவர்

களையும், படங்களில் வரும் நடிகர் நடிகைகளையும், தொலைக்காட்சியில் தோன்றும் நபர்களையும் இச்சை யோடு பார்ப்பவர்களாக இருக்கின்றனர்'' (72). விபசாரத் துக்கு விவாகரத்து என்றால், ஏன் இச்சையான பார்வை யால் இருதயத்தில் விபசாரம் செய்யும் எவருக்கும் யாரும் விவாகரத்து கொடுப்பதில்லை? திருமணமுடித்த தம்பதி யரில் ஒருவர் வேறொருவருடன் சென்று விபசாரம் செய் தால் விவாகரத்து பெற வேண்டும் என்றால், இன்னுமொ ருவருடன் செல்லாமலேயே இருதயத்துக்குள் விபசாரம் செய்பவர்களையும் விவாகரத்து செய்யவேண்டும். இயேசு கிறிஸ்துவினுடைய பார்வையில், உள்ளத்தின் விபசாரமும் உடல் ரீதியான விபசாரமும் ஒன்றே. அவர் விபசாரத் துக்கு விவாகரத்து அனுமதி கொடுக்கவில்லை. அவர் அத் தகைய பாவத்தையும் மன்னிக்கிறவராய் இருக்கிறார். எனவே, கிறிஸ்தவ தம்பதியரில் ஒருவர் விபசாரம் செய் தால் அதற்காக அவரை விவாகரத்து செய்யாது, அவரை மன்னித்து மறுபடியும் ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை யுடன் மற்றவர் இருக்கவேண்டும். நாம் இதற்காகத் தேவ னுடைய அன்பை முழுமையாகப் பெற்றுக்கொள்ள வேண் டும். அதே சமயம், விபசாரம் செய்தால் பிறகு மன்னிப் பைப் பெற்றிடலாம் எனும் எண்ணத்துடன் தம்பதியரில் ஒருவர் மற்றவருக்குத் துரோகமிழைக்கக் கூடாது. இரு வரும் மரணம் வரை ஒருவரை விட்டு ஒருவர் பிரியக் கூடாது.

3. விசுவாசிகளான விதவைகளின் மறுவிவாகம்

தேவன் மறுவிவாகத்தை விதவைகளுக்கே அனுமதித் துள்ளார். திருமண உறவை மரணத்தினால் மட்டுமே பிரிக் கக்கூடியதாயிருப்பதனால், கணவனை இழந்த மனைவிக் கும், மனைவியை இழந்த கணவனுக்கும் தேவன் மறுவிவா கம் செய்ய அனுமதி கொடுத்துள்ளார். பவுல் இதைப் பற்றி எழுதும் போது, ''புருஷனை உடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணத்தின்படியே அவ னுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள். புருஷன் மரித்த பின்பு புருஷனைப் பற்றிய பிரமாணத்தினின்று விடு

தலையாயிருக்கிறாள். ஆகையால், புருஷன் உயிரோடிருக் கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம் பண்ணினால் விபசாரியெனப்படுவாள். புருஷன் மரித்தபின்பு அவள் அந் தப் பிரமாணத்தினின்று விடுதலையானபடியால், வேறொரு புருஷனை விவாகம் பண்ணினாலும் விபசாரியல்ல'' என குறிப்பிட்டுள்ளார் (ரோ.7:2-3). எனவே, தம் துணையை மரணத்திற்குப் பறிகொடுத்தவர்கள் தவிர, மற்றவர்களது மறுவிவாகம் விபசாரமாகவே இருக்கின்றது என்பது இதி லிருந்து தெளிவாகின்றது (லூக். 16:18). ''மனைவியான வள் புருஷன் உயிரோடிருக்கும் காலமளவும் பிரமாணத்தி னால் கட்டப்பட்டிருக்கிறாள். தன் புருஷன் மரித்த பின்பு, தனக்கு இஷ்டமானவனாயும் கர்த்தருக்குட்பட்டவனாயு மிருக்கிற எவனையாகிலும் விவாகம் பண்ணிக்கொள்ள விடுதலையாகின்றாள்'' (1 கொரி. 7:39).

விதவைகள் அக்கால சமுதாயத்தில் பொருளாதார ரீதியாக மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டார்கள். இத னால், இளவயதுடைய விதவைகள் மறுவிவாகம் புரிவதே அக்காலத்தில் புத்திசாதுர்யமிக்க செயலாகவும், சமுதா யத்தில் அவர்களுக்கு ஒரு அந்தஸ்தை ஏற்படுத்திக்கொடுக் கும் செயலாகவும் இருந்தது. இல்லையென்றால் அவர்கள் உதவியற்ற நிலையில் தனித்து விடப்படுவர். அவர்களுக் கென்று எவ்வித உரிமைகளும் அக்கால சமுதாயத்தில் இருக்கவில்லை. அவர்களுக்குத் தொழில் வாய்ப்புகளும் மிகவும் குறைவாகவே இருந்தன. இதனால், ''மறுவிவா கமே விதவைகளுக்கு பொருளாதார மற்றும் சமூக பாது காப்பை ஏற்படுத்திக் கொடுத்தது'' (73). இக்காலத்தில் பெண்களுக்கான தொழில் வாய்ப்புகள் அதிகரித்துள்ள மையினால், விதவைகள் மறுவிவாகம் செய்யாமல் ஏதா வது ஒரு தொழில் செய்து வாழக்கூடிய சூழ்நிலை உருவா கியிருப்பதனால், மறுவிவாகம் அவசியமற்றதென சிலர் கருதலாம். ஆனால், விதவைகள் மறுவிவாகம் செய்வது தவறான செயல் என நாம் எண்ணலாகாது. மறுவிவாகம் செய்யாமல் வாழக்கூடிய நிலையில் ஒரு விதவை இருக்கும் போது, அவளுக்கு மறுவிவாகம் செய்ய விருப்பமில்லாவிட் டால் அவள் திருமணம் முடிக்காமல் இருக்கலாம். ஆனால்,

அவள் பரிசுத்தமும் நல்லொழுக்கமுள்ளவளாகவும் வாழ வேண்டும். அவள் பாலியல் பாவங்களில் விழுந்துவிடாமல் இருக்கவேண்டும். இதனால்தான், அவர்களால் ''விரத்த ராயிருக்கக்கூடாதென்றால் விவாகம் பண்ணக்கடவர்கள். வேகிறதைப் பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நலம்'' என பவுல் குறிப்பிட்டுள்ளார் *(1 கொரி. 7:8-9)*.

விதவைகள் மட்டுமல்ல, மனைவியை இழந்தவர்களும் மறுவிவாகம் செய்யலாம் என வேதம் கூறினாலும், நடைமுறை ரீதியாக நாம் ஒரு சில விடயங்களைக் கருத்திற் கொள்ள வேண்டியது அவசியம். மறுவிவாகம் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இந்நூலின் முதல் பகுதியில் சொல்லப் பட்டுள்ள திருமணத்திற்கான தேவனுடைய திட்டத்தை முரண்படுத்துவதாயிருக்கக் கூடாது. அதே சமயம், பிள்ளைகள் இருக்கையில் மறுவிவாகத்தைப் பற்றி நன்றாக யோசித்தே ஒரு முடிவுக்கு வரவேண்டும். பிள்ளைகள் மீது செலுத்தப்படவேண்டிய அன்பை மறுவிவாகம் பறித்துக் கொள்ளக்கூடாது. பலகுடும்பங்களில், மனைவி மரித்த பின் மறுவிவாகம் செய்தவனுடைய பிள்ளைகளில் முதல் மனைவிக்குப் பிறந்தவர்களை இரண்டாவது மனைவி அலட்சியப்படுத்தி துன்புறுத்துவதை அவதானிக்கலாம். அதேபோல, மறுவிவாகம் செய்து கொண்டவள், முதல் கணவனுக்குப் பெற்ற பிள்ளைகளை இரண்டாவது கணவன் ஒழுங்காக கவனியாதிருப்பதும் உண்டு. மேலும், வாலிப வயதுடைய பிள்ளைகள் இருக்கும்போது தாயோ அல்லது தகப்பனோ மறுவிவாகம் செய்வது அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படமுடியாத விடயமாயிருக்கும். எனவே, இவ் விடயத்தில் எல்லாவிதத்திலும் யோசித்து, தேவ வழிநடத்துதலுடனேயே ஒரு முடிவுக்கு வரவேண்டும். மறுவிவாகம் அவசியம் என்று கண்டால் மட்டுமே விதவைகள் இன்னுமொருவனைத் திருமணமுடிப்பதைப் பற்றி யோசிக்க வேண்டும். இதனால்தானோ என்னவோ பவுல், விதவைகளின் மறுவிவாகத்தைப்பற்றி எழுதிய பின், ''ஆகிலும் என்னுடைய அபிப்பிராயத்தின்படி அவள் அப்படியே இருந்துவிட்டால் பாக்கியவதியாயிருப்பாள்'' என்று குறிப்பிட்டுள்ளார் *(1 கொ. 7:40)*. எனினும், ஒரு விதவை மறுவிவா

கம் செய்ய விரும்பும்போது அதை நாம் தடுக்கக்கூடாது. ஏனென்றால் விதவைகளின் மறுவிவாகம் தேவனால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

''விவாகமில்லாதவர்களையும் கைம்பெண்களையும் குறித்து நான் சொல்லுகிறது என்னவென்றால் அவர்கள் என்னைப்போலிருந்துவிட்டால் அவர்களுக்கு நலமாயிருக்கும்'' என பவுல் கூறினாலும், அடுத்த வசனத்தில் ''ஆகிலும் அவர்கள் விரத்தராயிருக்கக்கூடாதிருந்தால் விவாகம் பண்ணக்கடவர்கள்; வேகிறதைப் பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நலம்'' என்கிறார் (1கொரி,7:8-9). எல்லாரும் தன்னைப்போல, அதாவது திருமணமில்லாமல் இருப்பதை தான் விரும்புவதாக பவுல் கூறினாலும், ''ஆகிலும் அவனவனுக்குத் தேவனால் அருளப்பட்ட அவனவனுக்குரிய வரமுண்டு. அது ஒருவனுக்கு ஒரு விதமாயும் மற்றொருவனுக்கு வேறொருவிதமாயும் இருக்கிறது'' என்பதை அறியத் தருகின்றார் (1கொரி. 7:7). அதாவது திருமணமில்லாமலிருப்பதற்குத் தேவன் சிலருக்கு சிறப்பான வரத்தைக் கொடுக்கின்றார். ''இந்த வரமானது பாலியல் தேவைகளில் இருந்து முழுமையான விடுதலையைக் கொடுக்கும்''(35). இவ்வரத்தைப் பெறாதவர்களுக்கு பாலியல் ஆசைகள் அதிகமாகவே இருக்கும். இதனால் அவர்கள் மறுவிவாகம் செய்ய விரும்புவார்கள் (1 தீமோ· 5:11-12). திருமண முடிக்காமலிருப்பதற்கான அழைப்பைப் பெறுபவர்கள், பரலோக ராட்சியத்திற்காகத் தங்களை அண்ணகர்களாக்கிக் கொள்பவர்களாவர் (மத்.19:12). ''இத்தகைய அழைப்பு, ஊழியத்தின் பாரிய பணிகளுக்கு கிடைக்கும் அழைப்பாகும்'' (40). தீர்க்கதரிசியாகிய எரேமியாவும் அப்போஸ்தலனாகிய பவுலும் இதற்கு சிறந்த உதாரணமாயிருக்கிறார்கள் (எரே 16:1-2, 1 கொரி 7:8).'' இத்தகைய அழைப்பும் வரமும் கிடைக்காதவரை ஒருவன் திருமணமுடிப்பதே தேவ சித்தமாயிருக்கிறது'' (74). இதனால்தான் விதவைகளது மறுவிவாகத்துக்குத் தேவன் அனுமதி கொடுத்துள்ளார். விதவைகளையும், மனைவியை இழந்தவர்களையும் தவிர வேறு எவரும் மறுவிவாகம் செய்யக்கூடாது.

உசாத்துணை நூல்கள்

பிற நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட ஆதாரக்குறிப்புகள் அனைத்தும் இந்நூலில் மேற்கோட்குறிகளுக்குள் தரப்பட்டுள்ளதோடு, அவை எடுக்கப்பட்ட நூல்களின் விபரத்தை அறியத்தர, அவற்றின் இறுதியில் குறியீட்டு இலக்கங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. அவை பற்றிய விபரம் வருமாறு: –

1. New Testament Commentary : Matthew by William Hendriksen
2. The Interpretation of St. Matthew's Gospel by R. C. H Lenski
3. Homilies on St. Matthew by John Chrysostom
4. Towards Old Testament Ethics by Walter Kaiser
5. Deuteronomy in the Bible Knowledge Commentary by Jack Deere
6. Deuteronomy in the Tynadale OT Commentaries by J. A. Thompson
7. Hebrew wife by S. E. Dwight
8. Genesis in the Expositor's Bible Commentary by John H. Sailhamer
9. The message of Genesis 1 – 11 in the Bible Speaks Today series by David Atkinson
10. A Commentary on Genesis in two volumes by John Appleby
11. Genesis in the Tyndale OT Commentaries by Derek Kidner
12. Principles of Conduct by John Murray
13. 1 & 2 Samuel in the Tyndale OT Commentaries by Joyce Baldwin
14. Readings in Missionary Anthropology Vol. 2 ed by William A. Smalley
15. Genesis in the Wycliffe Bible Commentary by Kyle M. Yates
16. Leviticus in the Expositors Bible Commentary by Laird Harris
17. Leviticus in the Tyndale OT Commentaries by R. K. Harrison
18. I Corinthians in the Tyndale NT Commentaries by Leon Morris
19. Leviticus in the New International Commentary on the OT by G. J. Wenham
20. The Bible has the Answers by Henry M. Morris
21. Hard Sayings of the Old Testament by Walter Kaiser
22. Ruth in the Tyndale OT Commentaries by Leon Morris
23. Pictures in Word by H. J. Appleby
24. The Interpretation of 1 & 2 Corinthians by R. C. H. Lenski
25. Deuteronomy in the New International Commentary by D. C. Craigie
26. I loved a Girl by Walter Trobish
27. Malachi in the Tyndale OT Commentaries by Joyce G. Baldwin
28. Ezra & Nehemiah in the Tyndale OT Commentaries by Derek Kidner
29. Ruth : An Explanation of the Teaching of the Book by Stephen Dray
30. I Corinthians in the Bible knowledge Commentary by David K. Lowery
31. Be Wise : An Exposition of I Corinthians by Warren Wiersbe
32. I Corinthians in the Expositor's Bible Commentary by Harold Mare
33. Philippians in the Tyndale NT Commentaries : by Ralph Martin
34. The Message of I Corinthians in the Bible Speaks Today Series by David Prior

35. I Corinthians in the New International Commentary on the NT by Gordan Fee
36. The Letters to the Corinthians in the Daily Study Bible series by William Barclay
37. Marriage Divorce and Remarriage by Theodore Epp
38. On Divorce by John MacArthur
39. Divorce by John Murray
40. Matthew in the Expositor's Bible Commentary by D. A. Carson
41. The Gospel according to Matthew by Leon Morris
42. The Gospel according to Matthew by Theodore Robinson
43. Introducing Christian Ethics by Henlee Barnette
44. The Restoration of Marriage by R. Yarom
45. Exposition of the Sermon on the Mount by Arthur Pink
46. Issues Facing Christianity Today by John Stott
47. Matthew in the Tyndale NT Commentary by R. T. France
48. Ezra in the Expositor's Bible Commentary by Edwin Yamauchi
49. Malachi in the Expositor's Bible Commentary By Robert Alden
50. Ezra and Nehemiah in the New International Commentary on the OT by F. C. Fensham
51. Ezra in the Bible knowledge Commentary by John Martin
52. Keeping your balance ed. by Warren Wiersbe
53. Expository Dictionary of Bible Words by L. O. Richards
54. The New Bible Dictionary ed. by J. D. Douglas
55. The Plain man looks at the Apostle's Creed by William Barclay
56. I married you by Walter Trobish
57. Genesis in the New International Commentary on the OT by Victor P. Hamilton
58. A Commentary on the Book of Genesis by V. A. Cassuto
59. Genesis in the Geneva series of Commentary by John Calvin
60. The Home : Courtship, Marriage and Children by John Rice
61. The Act of Marriage by Tim and Beverly LaHaye
62. Sexual Happiness in Marriage by Herbert S. Miles
63. The Sanctity of Sex by Stephen F. Olford
64. Ephesians in the New International Commentary on the NT by F. F. Bruce
65. The Epistle to the Romans by Leon Morris
66. The Epistle of Paul to the Romans by C. H. Dodd
67. Ethics in the Permissive Society by William Barclay
68. Hosea in the Bible knowledge Commentary by R. B. Chisholm
69. Hosea in the Tyndale OT Commentaries by David A. Hubbard
70. The Message of Hosea in the Bible Speaks today series by Derek Kidner
71. Hosea in the Expositor's Bible Commentary by Leon J. Wood
72. The Walk of the New Man by John MacArthur
73. The Message of Ruth in the Bible Speaks Today Series by David Atkinson
74. Sex, Love and Marriage : A Christian Approach by Zac Poonen

திருமறையும் திருமணமும்

இன்றைய கிறிஸ்தவ உலகில் திருமணம் பற்றிய பலவிதமான கருத்து முரண்பாடுகளும் தப்பபிப்பிராயங்களும் நிலவுகின்றன. இவை சாதாரண விசுவாசிகளினதும், சபைத் தலைவர்களினதும், ஊழியர்களினதும் மனதைக் குழப்புவதோடு சில சமயங்களில், இவர்களைத் தவறான வழியிலும் இட்டுச் செல்கின்றன. இதனால் திருமணம் பற்றி, கிறிஸ்தவர்களாகிய நமது வேதநூலான திருமறை என்ன கூறுகின்றது என்பதை நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியம். இந்நூலில் திருமணத்தோடு சம்பந்தப்பட்ட பல விடயங்களுக்கு வேதாகமத்திலிருந்து தகுந்த விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பலதாரமணம், நெருங்கிய உறவினருடனான திருமணம், அவிசுவாசியுடனான திருமணம், விவாகரத்து, மறுவிவாகம் எனும் சர்ச்சைக்குரிய விடயங்களுக்கான சரியான பதில்கள் உள்ளன.

THE BIBLE AND MARRIAGE

by

M. S. Vasanthakumar

இந்நூலாசிரியர் எம். எஸ். வசந்தகுமார்
இலங்கை வேதாகமக் கல்லூரியில் விரிவுரையாளராகவும் சத்தியவசனம் சஞ்சிகையின் ஆசிரியராகவும் இறைபணியாளராகவும் இருக்கின்றார்.